வெளியீடு எண் 122.

போற்றிப்பஃறொடை - - ஏற்புக்கட்டுரை

திருவாவடுதுறை ஆதீனம்.

உ

சிவமயம்

ஏழாவது

சித்தாந்த சைவ மாநாட்டு மலர்

திருவெண்ணெய்நல்லூர்

விளம்பி - ஐப்பசி – சு

திருவாவடுதுறை ஆதீனம்

22—10—1958.

வெளியீடு எண் 122.

உ

சிவமயம்

கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதிதேவநாயனுர்

அருளிச்செய்த

போற்றிப்பஃறொடை

நூலின்

ஏற்புக்கட்டுரை

இஃது

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்தொன்ருவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரியசுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

வெளியிடப்பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனம்

1958.

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,
— திருவாவடுதுறை. —

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையில் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழில்திருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—மாதவச்சிவஞானயோகிகள்.

மெய்கண்ட சாத்திரம் பதினுன்கு

உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவினு போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் துதி

இருதய நாப்பண் அஞ்செழுத் துருவின்
இறைவனை உயிர்க்கொலை செயாமை
அருள்பொறி அடக்கல் பொறைதவம் வாய்மை
அன்பறி வென்னுமென் மலர்கொண்(டு)
ஒருமையோ டருச்சித் திடுகஎன் றடியார்க்(கு)
ஒள்ளிய தீக்கைசெய் துணர்த்தத்
திருவமர் துறைசை உறையருள் குருவாம்
திருநமச்சிவாயர்தாள் போற்றி.

—மாதவச்சிவஞானயோகிகள்.

21-வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரியசுவாமிகள்

ஆற்றுபல் சமயத் துறையெலாம் படிந்தும்
அழுக்கறப் பெற்றிடா உயிர்கள்
தேற்றுநற் சித்தாந் தத்துறை மூழ்கித்
திகழ்பத மருந்திடற் பொருட்டாக்
கூற்றுதை பதத்தான் குலவுநற் கோலம்
கொண்டிடத் துறைசையின் வாழும்
நாற்றிசை புகழும் சுப்பிர மணிய
நற்குரு சரணமே பணிவாம்.

—தே. ஆ. ஸ்ரீநிவாஸன்.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்ருவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

நன்றியுரை

போற்றிப் பல்தொடை சாத்திப் புனிதர்கள்
கூற்றை வென்றிடுங் கொள்கை துலங்கிடப்
போற்றிப் பஃறொடை நூலின் புகன்றருள்
ஊற்றி னேரும் உமாபதி போற்றுவாம்.

—தே. ஆ. ஸ்ரீ.

''போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே'' என்பது திருவாசகவாக்கு. நாம் இப்பொழுது உடலோடு வாழ்கிறோம். இந்த உடம்பு நமக்குச் சொந்தமானதன்று. இப்படிச் சொந்தமற்ற பொருள்களுடன் தொந்தமுற்று நாம் வாழ்வது, இப்பொருள்களுடன் நமக்குள்ள பந்தம் நீங்கப்பெற்று நிரந்தரமாக நமக்கு உரிமைவாய்ந்த ஒன்றை அடைந்து உறைதற்காகவே ஆம். எப்போதும் நமக்கு வெளிப்படாமலிருப்பினும் உதவிவருவது இறையருளே ஆகும். வெளிப்பட உணர்ந்துளோர்க்கும் இதுவே நல்வாழ்வு தருவது. இத்தகைய கடவுட்பொருள், நமக்குச் சகல நிலையிலும், சுத்தநிலையிலும் எப்படி உதவுகின்றது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டுவது நமது கடமை ஆம்.

நாம், தெரிந்துகொள்ளுவதற்காக அதிக சிரமப் படவேண்டாமலே, பெரியோர்கள் இந்த விஷயத்தைப் பற்றிப் பற்பல நூல்கள் செய்யுளாகவும்,

உரைநடையாகவும், தமிழானும், வடமொழியானும் இயற்றியருளியுள்ளார்கள். அவற்றைப் படித்தறிதலும், கேட்டு அறிதலும், சிந்தித்துத் துணிதலும், தெளிந்து ஒழுகுதலும் நமக்கு இனிப் பிறப்பில்லா இன்பப் பெரும்புணர்ப்பினை எய்துவிக்கும். இந்தத் துறையில் இறங்குவோர்க்குச் சுருக்கமாகவும் விளக்கமாகவும், உண்மையாகவும், நுண்மையாகவும் எடுத்துரைக்கும் மெய்கண்ட சாத்திரநூல்கள் பதினன்கனுள்ளும், போற்றிப்பஃறொடை என்னும் இந்த நூல் ஞானவிஷயங்களை வெண்ணெய்போலும் திரட்டித் தருகின்ற பெருமை உடையது.

மீனினங்களைத் தண்ணீரில் விட்டால் வாழும். செடிகளை வளமுள்ள மண்ணில் நட்டால் வளரும். இப்படியே மக்களாவாரை அவர்கள் பேரின்பப் பெருவாழ்வு உறுதற்கு ஞானச்சூழலிலே நடத்தியாக வேண்டியுள்ளது. இத்தகைய அரும்பணியை ஆற்றுவனவே திருமடங்கள். இவற்றுள்ளும் திருவாவடுதுறைத் திருமடம், தொன்றுதொட்டே ஞான சாத்திரங்களையும் ஞானியர்களையும் உடைத்தாகி மக்களுக்கு உய்திகாட்டிச் சிறந்து விளங்கி வருகின்றது.

தற்போது திருவாவடுதுறைத் திருமடத்தே எழுந்தருளியிருந்து ஞான அருட்செங்கோல் ஒச்சி மக்களை ஞான நன்னெறியிலே ஒழுகுமாறு உபகரித்தருளுபவர்கள், இருபத்தொன்ருவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். இவர்கள், உலகம் ஞான உணர்ச்சியினைப் பெறுதற்பொருட்டு எண்ணற்ற உதவிகளைப் புரிந்தருளுகின்ருர்கள். அவற்றுள் ஒன்று, ஞானசாத்திரப் பனுவல்களை உரைகளுடனும், விளக்கவுரைகளுடனும் வெளியிட்டு இலவசமாக வழங்குதல் ஆகும்.

இவர்கள் திருவருளாணைப்படியே இப்போற்றிப் பஃறொடை ஏற்புக்கட்டுரை என்னும் இந்நூல், நிகழும் விளம்பி ஆண்டு ஐப்பசித் திங்கள் விஜயதசமி நன்னாளில் ஸ்ரீ மெய்கண்டதேவர் திருத்தலமாகிய திருவெண்ணெய்நல்லூரிலே நடைபெறும் ஏழாவது சித்தாந்தசைவமாநாட்டு மலராக வெளியிடப்பெறுகின்றது. ஞானமார்க்கம் ஒருசிறிதும் அறியேனை இத்தகைய அரும்பணியில் ஈடுபடுத்தி ஆட்கொண்டருளும் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவருட்பெருக்கினைப் பணிவன்போடும் வழுத்திப் போற்றுகின்றேன்.

இந்த நூலை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தமது ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சுநிலையத்தே அழகுற அச்சிடுவித்து வழங்கியருளுவதை உலகம் பெற்றுப் போற்றி உய்திபெறுவதாக!

இந்நூலில் குறைபாடுகள் காணப்பெறின் அவைகளைக் களைந்துகொள்ளுதல் பெரியோர் கடனாகும். பொறுத்தருளுதலும் அன்னவர் பண்பாகும்.

ஒருநூலை உலகுக்கு அறிமுகம் செய்யுமுறையில் அணிந்துரை வழங்குதல் சிறந்ததொரு பேருதவியாகும். அங்ஙனமே, இந்நூலுக்கும் திட்பநுட்பம் செறிந்த அணிந்துரையொன்றை, இந்த ஆதீனத்து அடியவரும், வித்துவானும், அடியேனது கெழுதகை அன்பருமாகிய திரு. T. S. தியாகராஜதேசிகர் அவர்கள் வழங்கியுதவியுள்ளார்கள். மாடக்குச் சித்திரம் போலும் அணிசெய்யும் இதனை அருளியதோடல்லாமல், அடியேன், இம்முறையில் புரியும் தொண்டிற்கெல்லாம் உடனிருந்து போற்றியும் வருகின்றார்கள். இவர்களுக்கு எனது அன்புகலந்த நன்றி உரியதாகுக!

மற்றும், இந்நூல் நல்லமுறையில், படிப்போர் உள்ளத்தைக் கவரும் பான்மையில் அச்சிடுதல் முதலாகிய அரும்பணிகள் பலப்பல ஆற்றியுதவிய அன்பர்கள் பலர்க்கும் எனது வணக்கம் சேர்வதாக.

உலகம் முதலன எந்த அளவுக்கு உயிர்கட்கு ஆதி முதல் அந்தம் வரை உதவியாற்றி நிற்கின்றன என்பதையும், அங்ஙனம் அவைகளை, உயிர்களின் கேவல - சகல - சுத்தநிலைகட்கு ஏற்ப ஆக்கியும், அளித்தும், அழித்தும் செய்துதவும் தடங்கருணைப் பெருங்கடலாம் சிவத்தை யாவரும் உணர்ந்து ஓதி உய்திபெற வேண்டுமென, அழகியதிருச்சிற்றம்பலம் உடையார் - அம்பலவாணர் - ஆன்மவயித்தியர் திருவடிகளை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்,

கட்டுரை ஆசிரியன்,

திருவாவடுதுறை ஆதீனப்புலவன்,

தே. ஆ. ஸ்ரீநிவாஸன்.

21-G. துக்காராம்தெரு,
கடலூர் N. T.
விளம்பி. ஐப்பசி.

உ

சிவமயம்

அணிந்துரை

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.

—திருமந்திரம்.

உலகில் மக்களே அமைதியளிக்கும் அருள்வாழ்விற்கு அழைத்துச் செல்லும் அருள்நெறிகள் எண்ணிறந்தனவாகும். இவைகளுள்ளே பழம்பெருங் காலத்திலிருந்தே பண்படுத்தப்பெற்ற பெருஞ்சாலை போல நிற்பது நமது சித்தாந்தசைவச் செந்நெறி ஆகும். முடிவற்ற பேரின்பநிலையைக் காட்டுகின்ற நெறி இது. உலகவரலாற்றிற்கும் முற்பட்டு நிற்பது. ஆனல் இன்றைய விஞ்ஞானத்திற்கும் விளக்கம் தந்து அதனுடன் ஒன்றி நிற்பது. எல்லாவிதமான சமயக் கொள்கைகளேயும் தன்னுள் அடக்கிக்கொண்டு அவற்றினும் சிறந்து விளங்குவது. சிவனேயே முழுமுதலென அறிந்து அவனே அடைதலே பிறப்பின் குறிக்கோள் என இயம்புவது. இத்தகைய சித்தாந்தச்செந்நெறியைச் செம்மையுற விளக்குகின்ற சிறந்த சாத்திர நூல்கள் மெய்கண்டசாத்திரங்கள் எனப்படும். இவை பதினன்காம். இவற்றுள் ஸ்ரீ உமாபதிதேவநாயனர் இயற்றியருளிய நூல்கள் எட்டு. அவை 'சித்தாந்த அட்டகம்' எனப்படும். இவற்றுள் ஒன்று போற்றிப் பஃறெடை என்னும் ஞானநூல்.

இந்த நூல் கலிவெண்பாவால் இயன்றுள்ளது. இதில் உள்ள கண்ணிகள் 95. முழுமுதற் பொருளாகிய சிவபெருமான் ஆன்மாக்களின்மீது கொண்ட பெருங்கருணையால் அவை பாசத்தால் கட்டுண்டு கிடக்கும் பல நிலைகளினும் பாசவலியினைக்கெடுத்து ஆண்டுகொள்ளும் முறையைப் பலவகையானும் தொடுத்துக்கூறும் நூல். சிவஞானச் செல்வராகிய ஸ்ரீ மறைஞானசம்பந்தநாயனாரிடத்துத் தாம் அடைக்கலம் புக்கமையும், அந்த ஞானாசாரியரால் தாம் ஆட்கொள்ளப்பெற்றமையும், அதனால் தாம் இரட்சிக்கப்பட்டமையும், அப்பேற்றால் தாம் இன்புற்றிருந்த இயல்பையும் வியந்து ஸ்ரீ உமாபதிதேவநாயனார் இப்போற்றிப்பஃறொடை என்ற நூலை அருளிச்செய்தனர் என்பர்.

இந்த அரியநூல், திருவாவடுதுறை ஆதீனத்து முனிவர்களில் ஒருவராகத்திகழ்ந்த ஸ்ரீ நமசிவாயத் தம்பிரான்சுவாமி அவர்கள் வரைந்தருளிய ஆதீன சம்பிரதாய உரையுடன் இவ்வாதீனத்திலிருந்தே கி. பி. 1954ல் விநாயகசதுர்த்தி மலராக வெளிவந்துள்ளது. இவரது உரை இனிய அரிய அநுபவ மொழிகளால் அமையப்பெற்றது. எனினும், எம் போலும் சிற்றறிவுடையோரும் இந்த ஞானநூலின் பொருளை எளிதின் உணர்ந்து மெய்ப்பயன் அடைந்துய்யவேண்டுமென்ற, ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பரமகருணையால் போற்றிப்பஃறொடை ஏற்புக்கட்டுரை என்னும் இந்நூல் திருவெண்ணெய் நல்லூர் சித்தாந்தசைவ மாநாட்டுமலராக இப்போது வெளியிடப்பெறுகின்றது.

இதனை எழுதியவர்கள் இவ்வாதீன வித்துவானாகிய உயர்திரு. தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவருளுக்கிலக்காகி, அவர்களின் அருளாணைநெறிநின்று அவர்களது பரமகருணையால் மெய்கண்டசாத்திர நூல்கள் பதினன்கனுள் பத்துநூல்களுக்கு மிகத் தெளிவான விளக்கவுரை கண்டு சித்தாந்தவித்தகராக இவர்கள் திகழ்கின்றார்கள். இவர்களால் எழுதப் பெற்ற ஞானக்கட்டுரைநூல் பல்வகைச் சிறப்புகளுடன் அமைந்து இலங்குகின்றது.

இக்கட்டுரை இனிய எளிய உரைநடையில் அமைந்துள்ளது. போற்றிப்பஃறொடை என்னும் ஞான சாத்திரநூலைக் கற்போருக்குப் பயன்படும்வண்ணம் இந்த நூலில் நூல்வரலாறும், ஆசிரியர் ஸ்ரீ உமாபதி தேவநாயனர் வரலாறும் தரப்பட்டுள்ளன. இக்கட்டுரையைப் படிப்போருக்கு உதவியாக இருத்தற் பொருட்டு நூல்மூலம் தனியாகக் காணப்படுகிறது. கட்டுரையில், சித்தாந்தசைவ நுட்பங்கள் பலவும் ஏற்ற உதாரணங்கள்கொண்டு ஆங்காங்கு விளக்கிக் காட்டும் திறம் போற்றற்கு உரியது. ஆசாரியர் ஆன்மாக்களுக்குப் புரியும் உதவிகளின் பெருமை இக்கட்டுரையில் அழகாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போற்றிப்பஃறொடை என்னும் ஞானநூல், சிவஞானபோதம் எட்டாஞ்சூத்திரத்தில் காணும் ''தம் முதல் குருவுமாய்'' என்ற சொற்றொடரின் பொருளை இனிது விளங்கச்செய்யும் முறையில் அமைந்துள்ளது என்பதை நாம் உணர இக்கட்டுரை பெரிதும் உதவுகின்றது. இந்த ஞானநூலின் பொருளை, பதிபுரியும் ஆனந்த நிருத்தநிலை, இறைபுரி கிருத்தியம், கலாதிஞானக்காட்சி முதலிய பதினைந்து தலைப்புக்களில் அநுபவம்கலந்த சொற்களால் நம் மனங்கவரும் வகையில் விளங்கச்செய்திருப்பது

கட்டுரையாசிரியரின் சித்தாந்தசாத்திரப் பேரறிவையும் நுண்ணறிவையும் நன்கு புலப்படுத்துவதாகும். இப்படிப்பட்ட ஞானநூல்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் பரமகருணையால் வெளிவருதல் சைவநன்மக்கள் செய்த நற்றவப்பயனேயாம்.

தொன்றுதொட்டு ஞானசாத்திரங்களுக்கும், மெய்ஞ்ஞானிகளுக்கும், சித்தர்களுக்கும் உறைவிடமாகிச் சிவமணங்கமழும் தெய்வப்பூஞ்சோலை நமது **திருவாவடுதுறை ஆதீனம்.** ஸ்ரீ மெய்கண்டசந்தானத்து வழிவழிவந்த ஞானாசாரியர்களுடைய பரம்பரையிலே கிடைத்த சிவஞானோபதேசம், சிவசாஸ்திரோபதேசம் முதலியன இத் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்கே பெரிதும் தொடர்புடையன என்பதை மெய்கண்டசாத்திர நல்லுரைகள் யாவும் உலகுக்கு நன்கு தெளிவிப்பன. சிந்தனை உரை, பழையவுரை, பேருரை, சிற்றுரை யாவும் இவ்வாதீனத்தன என்பதைச் சித்தாந்தசைவவுலகம் நன்கறியும். அன்றுபோல் இன்றும் சிவஞானதான வள்ளலாகத்திகழும் நமது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் இத்திருவாவடுதுறை ஆதீன ஞானபீடத்தில் எழுந்தருளிய நாள்முதல் உலகம் மெய்ஞ்ஞான உணர்ச்சியினைப் பெற்று உய்ய, எண்ணற்ற உதவிகளைப் புரிந்தருளுகின்றார்கள். அவற்றுள் ஒன்று ஞானசாத்திரநூல்கள் அனைத்தையும் அருட்பெருமக்கள் உரைகளுடன் வெளியிட்டு இலவசமாக வழங்குதலாகும்.

மேலும் நமது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பேரருள்நினைவால் ஞானநூல்களுக்குத் தக்கசான்றோர்கள் வரைந்துள்ள இனிய விளக்கவுரைகளும், இலக்கண - இலக்கிய - புராணநூல் பலவும்

வெளிவந்துகொண்டிருக்கின்றன. சித்தாந்தசைவ மாநாடுகள் பலஇடங்களில் கூட்டுவித்துப் பேரறிஞர்கள் வாயிலாகச் சமயசாத்திர உண்மைகள் மக்கட்குப் போதிக்கப்படுகின்றன. ஆதீனப்பிரசாரகர் பலர் தமிழ்நாடெங்கும் நியமிக்கப்பட்டு, ஆங்காங்கே சமய உணர்ச்சி சைவநன்மக்கள்பால் எழுப்பப்பட்டு வருகிறது. இவையெல்லாம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் பேரருள்நிறைவின் விளைவேயாகும்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீ முத்திபஞ்சாக்கர தேசிகரே தற்போது முருகப்பெருமானுகத் தோற்றம் அளித்து அன்பர்களை உய்வித்தருளுகின்ருர் என்று உலகம் எண்ணும்படி, இத்திருவாவடுதுறை ஆதீன ஞானபீடத்தில் வீற்றிருந்தருளிச் சிவப்பணி, தவப்பணி, அறப்பணி முதலியன ஆற்றிவரும் குருமகாசந்நிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்** அவர்களின் பேரருள் உலகில் நாளும் ஓங்கி நலம் விளைவிப்பதாக. ஸ்ரீ ஞானமா நடராஜப்பெருமான் திருவருள் உலகை உய்விப்பதாக.

சிவஞானபோதநெறி நீடூழி வாழ்க.

ஞானசாரியர் திருமரபு நீடூழி தழைக.

இங்ஙனம்,

திருவாவடுதுறை ஆதீன அடியவன்

வித்துவான்,

T. S. தியாகராஜதேசிகன்.

மஞ்சக்குப்பம்,
கடலூர் N. T.
3—10—1958.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நூலாசிரியரும் நூலும்

“ கற்றதனுல் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின். ”

—குறள் - 2.

ஸ்ரீ உமாபதிதேவநாயனுர் வரலாறு :

‘அவனன்றி ஓர் அணுவும் அசையாது’ என்பது முதுமொழி. பரமன், ஆன்மகோடிகளுக்காக அசைந்தருளி ஆட்டியருளுகின்ற பெரும் தத்துவத்தினை நம்மனேர்க்குக் கண்கூடாகக் காட்டும் சிறப்புடைய தலமாகும் சிதம்பரம் என்பது. இந்தத்தலத்திலே, ‘நாம் அவர்களுள் ஒருவர்’ என்று மன்றுளாடுபவர், திருவாய்மலர்ந்தருளப்பெற்ற பெருமை உடையது தில்லைவாழந்தணர் மரபு. இம்மரபில் ஒருவர் மகப்பேறின்றி இறைவனை வேண்டிவந்தார். இறைவன் திருவருளால் ஓர் ஆண்மகவு பிறந்தது. தந்தையார் இம்மைந்தர்க்கு உமாபதி எனத் திருநாமம் சூட்டினர். இப்புதல்வர் முன்னைப் பெருந்தவமுடையவர். முதுக்குறைவு துணையாக ஆரியமும் சீரிய தமிழும் பயின்றனர். மெய்க்கலைகள் யாவும் தேர்ந்தனர். பின்னர், தந்தையாரால் சிவதீக்ஷை பெற்றனர். ஆன்மார்த்த பூசையையும், கோயிற் பூசையையும்

கைக்கொண்டனர். மன்ருடியை அன்ருடம் பூசித்து நேசித்து வாழ்ந்துவரலாயினர். இங்ஙனம் பக்குவமுற ஒழுகிவருகையில் தமிழில் கோயிற்புராணம், திருமுறைகண்ட புராணம், திருத்தொண்டர் புராணவரலாறு, திருத்தொண்டர் புராணசாரம், திருப்பதிகக் கோவை, சேக்கிழார்புராணம் என்னும் நூல்களையும், வடமொழியில் பௌட்கராகமத்துக்கு வியாக்கியானமும் செய்தருளினர். இங்ஙனம் இருந்துவரும்நாட்களிலே இவர்க்குச் சோழவரசரால் முத்துச்சிவிகை, மேளவாத்தியம், பகல்தீவட்டி முதலிய விருதுகள் அளிக்கப்பட்டன. கோயிற்பூசை முடித்துத் தமது ஆச்சிரமத்துக்கு இவர் சிவிகையூர்ந்து செல்வது வழக்கம். எனினும், இவர் நாலாம் சத்திநிபாதம் நணுகப்பெற்றமையின் விடுபேற்றில் மிக்க அவா உடையராயினர்; ஞானசாரியரொருவரைத் தேடி அடைய நாடினர்.

இவ்வாறிருக்க, ஒரு வைகாசிமாதத்தே நடுப்பகலில் வழக்கம்போல் இவர் பூசைமுடித்து விருதுகளுடன் சிவிகையூர்ந்து தம்மிருப்பிடம் செல்லலானர். அப்போது, திருக்களாஞ்சேரியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மறைஞானசம்பந்த சிவாசாரிய சுவாமிகள் ஒரு தெருவில் திண்ணையொன்றிலிருந்துகொண்டு தம் மாணவர்கட்குப் பாடம் போதித்துக் கொண்டிருந்தனர். அம்மாணவர்களுள் ஒருவர், தீக்ஷிதசுவாமிகள் செல்லும்படியினைக் குறித்துத் தெரிவிக்கலானர். உமாபதியாருக்குப் பக்குவமுதிர்வு அணுகியவேளை அதுவாகும். இது தெரிந்த ஸ்ரீ மறைஞானசம்பந்தர் பல்லக்கிலிருப்பார் செவியிற்படுமாறு "பகற்குருடு" என்று கூறுதலும் திருவருட்கிருபையினல் உமாபதி

சிவாசாரிய சுவாமிகட்கு மெய்ம்மைநிலே வெளிப் பட்டது. உடனே, முன்பு ஒருகால் ஆளுடைய பிள்ளேயார் புரிந்தவிதமாக, உமாபதியார் பல்லக்கி னின்றும் கிழேகுதித்து ஸ்ரீ மறைஞானசம்பந்தர் திரு வடிகளில் நெடுமரம்போன்று வீழ்ந்து பணியலுற்ருர். ஸ்ரீ மறைஞானசம்பந்தர், உமாபதியார்க்குப் பின்னும் முதிர்ச்சி விளேதற்பொருட்டு வீதிவழியே எழுந்து விரைந்து சென்றுகொண்டிருந்தனர். இந்நிகழ்ச்சி, ஆவணங்காட்டி ஓடிய சிவபெருமானுகிய முதியவரை ஆலாலசுந்தரராகிய ஆளுடைநம்பிகள் தொடர்ந்து ஓடியவாறு இருந்தது என்னலாம். இறுதியில், செங் குந்தர் வாழும் தெருவிலே செல்லலுற்ற ஸ்ரீ மறை ஞானசம்பந்தர் பசித்துக் களேத்தார்போன்று, செங் குந்தரொருவர் வார்த்திட்ட கஞ்சியைக் கையேந்தி உண்ணலுற்ருர். அப்போது, உடன் தொடர்ந்து வருகிற உமாபதியாரும் குருசிடபாவனே தோன்று மாறு உச்சிட்டத்தை ஏற்றுப் புசித்தனர். உடனே ஞானதிக்கை, உபதேசமாதியன நிகழ்ந்தன. அன்று தொட்டு ஸ்ரீ உமாபதியார், தம் ஞானதேசிகர்க்கு அருட்பணிவிடை புரிந்து வரலானர். ஞானதேசிகரும் தம் சிடர்க்கு எல்லாத் தகுதிகளேயும் தந்தருளினர். ஞானபிடேகம் பெற்றபின்னர் துவிதீய ஆசாரியராக விளங்கி வரலானர் நம் ஸ்ரீ உமாபதிசிவாசாரியார். தமது ஞானசாரியர்பால் சித்தாந்த நுண்பொருள் கள் யாவற்றையும் நன்கு உணர்ந்துகொண்டு அநு பூதிச் செல்வராக விளங்கி வரலாயினர். இங்ஙனம் இருக்கையில் ஞானதேசிகர் சிவபரிபூரணமுற்றதும், வேதசிவாகம விதிப்படி பூசை, மாகேசுரபூசை சிறப் புறப்புரிந்து யாவரும் போற்ற எழுந்தருளியிருந்தார்.

2515

ஆயினும், சுவாமிகளைப் பிரித்துவிட்ட தில்லை வாழந்தணர்கள், உமாபதியார் சபைக்குள் புகுந்து பூசைபுரிய விரும்பிலர். ஆதலால், நம் ஸ்ரீ உமாபதி சிவம் தில்லைக்குக் கிழ்புறமுள்ள ஒரு திருமடத்தே போயிருக்கலானார். கவுடநாட்டு மன்னன் மகனான சுவேதவர்மன் என்பான் தன்னைப் பீடிக்கலுற்ற வெண்குட்டம் நீங்குதற்பொருட்டுப் புலிக்கால் முனிவர் முதலானோர் ஆணைப்படிச் சிவகங்கையில் நீராடி உடல்நலம் எய்தப்பெற்றான். இந்தத் தில்லைப் பதியில், சுவேதவர்மன் இரண்யவர்மன் ஆயினன். இதற்கு அறிகுறியாக அக்கொற்றவன் குடியிருத் தற்குத் தில்லையின் கிழ்புறம் ஒருநகரினை அமைக்க லானான். அந்த நகரமே கொற்றவன்குடி எனப் பெயர் பூண்டது. இக்கொற்றவன்குடியில் உள்ள திருமடத் திலேதான் நம் சுவாமிகள் எழுந்தருளியிருந்து மாண வர்களுக்கு ஞானோபதேசம் செய்துவருவாராயினர். மற்றும், தமிழ்ச் சிவஞானபோதத்துக்குச் சார்பு நூலாகச் சிவப்பிரகாசம் முதலான எட்டு ஞானநூல் கள் இயற்றியருளினர். இவற்றுள் ஒன்றே போற்றிப் பஃறொடை என்பது.

கொடிக்கவி வரலாறு:

நமது சுவாமிகள், கொற்றவன்குடிப்பதியிலே எழுந்தருளியிருக்கும் நாளிலே, ஸ்ரீ நடராசப் பெருமா னுக்கு உற்சவ துவஜாரோகணம் செய்யவேண்டி வந்தது. அன்று நம் சிவாசாரியசுவாமிகட்கு உரிய முறைநாள். ஆனால், தில்லைவாழந்தணர்கள் அவ ருக்குப் பதிலாக வேறொருவரை நியமித்துத் துவஜா ரோகணத்தை நிறைவேற்றத் துணிந்தனர். ஆனால்

கொடிச்சீலை உயர ஏருமல் கீழே விழுந்தது. வேத விதிப்படி பலமுறை முயன்றும் ஏற்றுக் கொடி ஏறவில்லை. யாவரும் துயருற்றனர். அப்போது தில்லையம்பலவன், 'நாம் கொற்றவன்குடியிலுள்ள எமது அடிமைத்தொண்டனுகிய உமாபதி சிவாசாரியருடைய பூசைப் பேடகத்தே எழுந்தருளி அவர் செய்யாநின்ற பூசனைகளை ஏற்றுவருகிறோம்; ஆதலின் அவரைக்கொண்டு துவஜாரோகணம் நடத்துங்கள்' என்று கூறியருளினர். உடனே, தங்கள் குற்றத்தை உணர்ந்த அந்தணர்கள் யாவரும், விருதுகளுடன் கொற்றவன்குடிக்குப் போந்து, நிகழ்ந்தனவற்றை விண்ணப்பித்தனர். சுவாமிகள், ஐயன் கருணையை எண்ணி எண்ணி உள்ளங்களிகூர்ந்து கோயிலுக்குப் போந்து செங்குந்தர்களிடம் இடபக்கொடியொன்று அளித்து வீதிவலம் செய்வித்தனர். அப்பால் ஆகம விதிப்படி யாவும் புரிந்து கொடிமரத்தருகே சென்று நின்று கொடிக்கவி எனப்படும் ஸ்ரீ பஞ்சாக்கரப் பாசுரத்தைத் திருவாய்மலர்ந்து அருளினர். உடனே கொடி ஏறியது. யாவரும் களிப்பெய்தினர். பின்னர் சுவாமிகள் கொடிக்கவிப் பாசுரவிளக்கம் அருளிச் செங்குந்தர்களை ஆசிர்வதித்து விடை ஈந்தருளினர். கொடிக்கவி நூல் தோன்றப்பட்ட வரலாறு இஃது என்பர் பெரியோர்.

பெற்றான் முத்திபெற்ற முறைமை.

தில்லை எல்லையில் காவலாளனுக இருந்தவன் பெற்றான் சாம்பான் எனப்பட்டவன். இவன் பாவத்தால் இந்தப் பிறப்பு உறினும் புண்ணியத்தால் சிவபெருமானை உள்ளன்போடு நேசித்தவன். தில்லை

மதிற்புறத்தே நின்று சுவாமி தரிசனம் செய்து சிவ னடியார்களை வழிபடுவது இவன் வழக்கம். நடராசப் பெருமான் திருவருளால் அப்பெருமானுக்கு நிவே தனம் அமைத்தற்கு நாடோறும் விறகு கொடுக்கும் திருத்தொண்டு செய்யத்தக்கது எனத் துணிந்து, அதனை அன்புடன் ஆற்றிவரலாயினன். சிவபெரு மானும் இவனது தொண்டினை ஏற்றுக்கொண்டதற் கறிகுறியாக நாடோறும் இவற்கு இரண்டுபணம் அருளிவந்தனர். பெருமான் கட்டளையின்படி அப் பணத்தைக்கொண்டு குடும்பம் பேணிவந்தனன் சாம் பான். இங்ஙனம் சிலநாட்கள் சென்றன.

ஒருநாள் வழக்கம்போல் விறகுகட்டினைக் கீழைக் கோபுரவாயிலில் இறக்கிவைத்துவிட்டுச் சாம்பானர் நிற்கும்போது, பெருமானர் அந்தணக்கோலத்தோடு அணுகி, "அன்ப! நாளைமுதல் நீ கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர் திருமடத்துக்கும் விறகு கொடுத்து வருக" என்று கூறி மறைந்தருளினர். ஆணைபெற்ற பெற்றுனர் அவ்வண்ணமே உமாபதி யார் திருமடத்துக்கும் நாடோறும் விறகு கட்டுப் போட்டுவந்தனர். திருமடத்துக்கு விறகு கொடுத்து வரத் தொடங்கியநாள் முதலாகவே முற்கூறப்பட்ட இரண்டுபணத்தொகையினை நாடோறும் நடராசப் பெருமான் சாம்பானர்க்கு உதவிவந்தனர் என்பதும் வரலாறும்.

இப்படி நிகழும் நாட்களிலே, பெத்தான் சாம்பா னர்க்குப் பிறவித்துயரம் ஒழித்தருளவும், நாம் எல் லோரும் அவர் தொண்டின் திறத்தைப் பேணும் படிச் செய்தருளவும் பெருமான் திருவுள்ளங்கொண் டருளினர். இதனல் பெருமழை பெய்தது. எங்கும்

வெள்ளக்காடு. சாம்பானூர் காடு செல்லக்கூடவில்லை. கவலைக்கடலுள் ஆழ்ந்தார். பெருமான், மெய்யடியார் கோலத்தோடு அப்பெத்தான்பக்கல் சென்று, விறகு கொடாததன் காரணத்தைக் கேட்டு, அன்றைய கட்டுகளையும் சேர்த்து அடுத்தநாள் கோயிலுக்கும் திருமடத்துக்கும் கொடுக்கக் கட்டளையிட்டு, வெள்ளம் தடைபுரியாதிருப்பதற்கு உபாயமும் சொல்லி,

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டு – படியின்மிசைப்
பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

என்ற திருப்பாசுரம் வரையப்பட்ட சீட்டு ஒன்றை அளித்து, அதனைத் திருமடத்தில் ஆசாரிய சுவாமிகளிடம் அடைவிக்குமாறு பணித்து; மறைந்தருளினர். சாம்பானூர் சாலவியப்பெய்தினர். தன் மனைவியாரிடம் நிகழ்ந்தன கூறி மகிழ்வுற்றிருந்தனர். இந்த நாளில் ஞானதேசிகர் திருமடத்தே மாகேசுரபூசைக்குக் காலம் தாழ்த்தது. ஞானதேசிகர் நிகழ்ந்துவந்த செய்தி கேட்டறிந்தார். விறகு தரும் தொண்டுபுரியும் அடியவர்வரின் தமக்குத் தெரிவிக்குமாறு அடியார்களிடம் திருவாய்மலர்ந்தருளினர்.

அம்பலவாணர் ஆணையிட்டு அருளியபடியே அடுத்தநாளில், சாம்பனூர் விறகுகட்டுக்களைச் சுமந்து செல்ல விரும்பினூர். தமது வீட்டின் ஒருபுறத்தைப் பிரித்து முறித்துக் காய்ந்த விறகைக் கட்டுகளாகக் கட்டித் தம் மனைவியோடு சுமந்து வெள்ளம் வழிவிடக் கோயிலுக்குச்சென்று போட்டுவிட்டுப்

பின்னர்த் திருமடத்துக்கும்கொண்டு சென்று இறக்கி வைத்து நின்றார். இவர் வரவு ஞானதேசிகர்க்குத் தெரிவிக்கப்பட்டது. அடியார்களோடும் திருமடத்து வாயிலில் ஞானதேசிகர் எழுந்தருளினார். பெத்தான் சாம்பானார் பன்முறைபணிந்தெழுந்து திருமுகத்தைத் தேசிகர் திருமுன்பு வைத்து வணங்கினர். ஆசாரிய சுவாமிகள் வாசித்து மகிழ்ந்தார். சாம்பானார் பக்குவ முதிர்வை ஓர்ந்து திருவருள்புரியலுற்றார். தக்ஷணமே முத்தி பயப்பது சத்தியோநிருவாண தீக்ஷை. அதனைத் திருவுளத்தேகொண்டு ஞானதேசிகர், பெற்றான் சாம் பானார்பால் திருநோக்கம் வைத்தருளினர். எழுந்தது ஒருசெழுஞ்சோதி. சாம்பானார்பொய்யுடல்மறைந்தது. பெற்றான் சாம்பானார் நன்முத்தி பெற்றார். யாவரும் அற்புதமெய்தி அடிபணிந்தனர். சாம்பானார் மனைவி யார் சாம்பினர். எவ்வளவு தேற்றியும் அரசனிடம் சென்று முறையிட்டுப்புலம்பினர். அரசன்,சுவாமிகளை விசாரிக்குங் கருத்துடன் திருமடத்தை அணுகினன். நிகழ்ந்த யாவும் அரசற்கு எடுத்துரைக்கப்பட்டன. எனினும், மன்னன், ஞானதேசிகரை நோக்கி, "இத் திருவருட்செயல் யாவர்க்கும் மெய்யெனப் புலப்படு மாறு செய்தருளவேண்டும்" என விண்ணப்பித் தான். ஞானதேசிகரும் அங்ஙனமே செய்தருளத் திருவுளங்கொண்டார்.

இஃதிவ்வாறிருக்க, முன்பொருகாலத்து முனிவர் ஒருவர் காட்டிலே பரமனைநாடிக் கடுந்தவம் புரிந்து வந்தார். சிவபெருமான் அந்தணர் வடிவோடு அம் முனிவர்முன் தோன்றி 'வேண்டுவதென்ன' என்றார். முனிவன், அவரிடம், உள்ளொன்று கருதிப் புறம் பொன்றுகூறி வரம்வேண்டினன். உடனே முனிவனை

இன்னம் பக்குவம் அடைவித்தற்பொருட்டு முள்ளிச் செடியாகுமாறு சபித்தகன்ருர் பரமர். அவ்வாறே இம் முனிவர், நம் ஞானதேசிகர் திருமடத்துக் கோமுகை யருகில் முள்ளிச்செடியாய் முளைத்துக் கிடந்தனர். நாளும் திருமடத்தே திருச்சிற்றம்பல உடையவருக்கும் அம்பலவாணருக்கும் ஆட்டப்படும் அபிடேக நீரால் வளர்ந்து, மாகேசுரபூசைக்குக் கறியமுதுக்குக் காயளித்து வந்தது அந்த முள்ளிச்செடி. அதனுல், பரிபக்குவம் அடையப்பெற்றிருந்தது. அச்செடிக்கு முத்தியளித்து அரசன் அகமகிழச்செய்யத் திருவுளம் பற்றினர் சுவாமிகள்.

அரசனும் அனைவருங்காண ஆசாரியசுவாமிகள் அம்முள்ளிச்செடிமீது ஞானநோக்கம் புரிந்தருளினர். செழுஞ்சோதி எழுந்தது. முள்ளிமறைந்தது. முனிவர் தோன்றி வணங்கி அகன்ருர். அம்முனிவர் முள்ளிமா முனீச்சுரர் எனப்பட்டார். அரசன் சுவாமிகளை அடி பணிந்து மன்னித்தருள நயந்தான். ஆசிர்வதிக்கப் பட்டான். அரசன், பெற்ருன் சாம்பானுர் மனைவியாருக்கு உற்றவை தெற்றன விளங்கினுன். விறகடி விளாகம் என்னும் ஊரினை அவ்வம்மைக்கு முற்றூட்டாக வழங்கினுன். ஜீவதசையின் பின்னர், அக் கிராமம் ஸ்ரீ உமாபதியார் ஆதீனத்தே சேர்ப்பிக்கப் படவேண்டும் என்று கட்டளையிட்டான். பின்னர், சுவாமிகளிடம் விடைபெற்றுச் சென்ருன் மன்னன். இதன்பிறகு, நம் சுவாமிகள், தம் சீடரொருவரைக் குடவுளுந்தளந்த முனிவராக்கி முத்திகொடுத்தருளினர் எனவும், கருடப்பறவையொன்றை அங்ஙனமே கருடமாமுனியாக்கி முத்திபெறச் செய்தருளினர் எனவும் வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறு நால்வர்

பக்குவர்க்கு நல்முத்தி பயந்தருளிய பின்னர், தான் பெற்ற இன்பம் வையகமும் பெறவேண்டும் எனத் திருவுளத்தேகொண்டு தம்மிடம் மூவகைத் தீக்கையும் சித்தாந்த உபதேசமும் பெற்ற ஸ்ரீ அருணமச்சிவாயர்க்கு ஒரு நன்னாளிலே ஞானபிடேகம் செய்து தமக்குத்துவிதிய ஆசாரியாக வைத்தருளினர். ஸ்ரீ உமாபதியார் காலம் கி. பி. 1270 முதல் 1315வரை என்பர்.

பின்னர், சில பகல் சென்று, தாம் பூசித்துவந்த ஆன்மார்த்த அழகிய சிற்றம்பலம் உடையவரையும், அம்பலவாணரையும் என்றும் பூசித்துவரும் அதிகாரமளித்து, அடைந்தார்க்கு அருளுபதேசம் செய்யும் முறைமையை விளக்கி, அந்நெறியில் ஸ்ரீ அருணமச்சிவாய தேவரை வைத்து, தமது கொற்றவன்குடியிலே சித்திரை மாதத்து அத்த நட்சத்திரத்திலே தமது திருவுரு ஜோதிர்மயமாக, அம்பலவாணர் திருவடி நிழலை அடைந்தருளினர் ஸ்ரீ உமாபதிதேவநாயனுர்.

இதுகாறும் கூறியவாற்ருல் தேவசந்தானத்தார் திருவருள் மரபில்வந்த புறச்சந்தான குரவர் நால்வர் ஆவார் என நாம் அறியலாம். அவர்களாவார் ஸ்ரீமெய்கண்டதேவர், ஸ்ரீ அருணந்திசிவம், ஸ்ரீ மறைஞானசம்பந்தர், ஸ்ரீ உமாபதிசிவம் எனப்படுவார்களாவர். ஸ்ரீ உமாபதி சிவாசாரியாரால் நியமனம் பெற்றவர் ஸ்ரீ அருணமச்சிவாயர் ஆவர். இவர்பால் தீக்ஷை பெற்றுச் சிவஞானம் கைவரப்பெற்றவர் சித்தமூர்த்திகளாகிய ஸ்ரீ சிவப்பிரகாசர் ஆவர். ஸ்ரீ சித்தர் சிவப்பிரகாசதேசிகர், ஸ்ரீ பஞ்சாக்கரதேசிகர் என்று பரவப்படுபவராகிய ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளைத் திருவாவடுதுறையிலே தாம்வகுத்த அறையிலே தமதாணைப்படி

எழுந்தருளியிருந்து சிவஞானபோத உபதேச சித்தாந்தசைவ பரம்பரை நிலவுலகில் நீடுமாறு ஆதீன முதல்வராக நியமித்தருளியுள்ளார்கள். இத்திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ நமசிவாய பரமாசாரிய மூர்த்திகளாலே நிலைநாட்டப்பெற்று விளங்கிவருகின்றது. ஆதலின் ஸ்ரீ பஞ்சாக்கரதேசிகர் ஆதீனம் எனவும் பெயர் வழங்கப்படும். ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் முதல் ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் இறுதியாக உள்ள ஆசாரிய பரம்பரை பூதபரம்பரை எனப்படும். முற்கூறிய தேவ பரம்பரையும் இப்பூத பரம்பரையும் உபதேசபரம்பரை என்று சிறப்புறக் கொள்ளப்படும். மேல் விளங்கி வருவது அபிஷேக பரம்பரை ஆகும்.

இங்குக் கூறிய இவற்றால் ஸ்ரீகண்டசிவம் திருஅருள் சுரந்தருளிய ஞான வெள்ளமே நம்மனோர் தவப்பயனால் திருவாவடுதுறை ஆதீனத்தே பெருகி, அடைவாரைப் புனிதமுறுவித்துப் போற்றி வருகின்றதென நாமறிதல் தக்கது.

மெய்கண்ட சாத்திர நூல்கள் பதினான்காகும். அவற்றுள் ஸ்ரீ உமாபதிதேவநாயனார் அருளிச்செய்தவை எட்டு நூல்கள் ஆகும். அவை சிவப்பிரகாசம் - திருவருட்பயன் – வினாவெண்பா – போற்றிப்பஃறொடை - கொடிக்கவி - நெஞ்சுவிடுதூது - உண்மைநெறிவிளக்கம் - சங்கற்பநிராகரணம் என்பனவாம். இவை சித்தாந்த அஷ்டகம் எனவும் பெயர்பெறும். இந்த எட்டு நூல்களையும் ஐயந்திரிபற ஓதி உணர்பவர்கள் சித்தாந்த சைவநெறியினை நன்கு தெளியப் பெற்றவர்களாவர். ஒருவர், சங்கற்பநிராகரண நூலை

முற்றக்கற்றுச் சமயபேதங்களையும் சித்தாந்த நெறியையும் அறிந்து, அந்த நன்னெறியின் உண்மைகளை உண்மைநெறி விளக்க நூலை ஓதுதலால் உணர்ந்து, பின்னர் நெஞ்சிலே ஞானசாரியரை நண்ணும் நாட்டத்தினை நெஞ்சுவிடுதூது நூலால் அடைந்து, அப்பால் ஆசாரியர் கற்பித்தருளும் சித்தாந்த நெறி ஒன்றையே கடைப்பிடித்தொழுகுவதெனக் கொடி கட்டித் துணிதலைக் கொடிக்கவி நூலறிவாற்கொண்டு, அங்ஙனம் தனக்கு நன்னெறிகாட்டியும் நிறுத்தியும் உதவவல்ல தேசிகரைச் சிவமெனவே போற்றும் பண்பினைப் போற்றிப்பஃறொடை நூலைப் படிப்பதனால் புரிந்து, அவ்வாசான் அருளால் தனது ஐயப்பாடுகளையெல்லாம் கேட்டுத் தெளிதலை வினாவெண்பா நூல் கற்றலால் எய்தி, இதன் பின்னர் யாவும் திருவருட்செயலால் நிகழ்வனவே என்ற துணிவு தோன்றி நிலையுறுதலை திருவருட்பயன் நூலினைப் பயின்று தோய்தலால் பெற்று, அம்முதிர்வினால் முடிவில் சிவப்பிரகாசத்தே கலந்து நிற்றலாகிய பேரின்பவாழ்வினைச் சிவப்பிரகாச நூலினாற் பயனாகக் கொள்ளல்கூடும் என்பதை மேலே காட்டப்பெற்ற இந்த எட்டுநூல்களின் வரிசையால் தெரியலாகும். எனவே, கேசாதிபாதமுறையாகச் சித்தாந்த அஷ்டக நூல்கள் கிடக்கின்றன என்னல் தகும்.

போற்றிப்பஃறொடை:

மேற்குறித்த எட்டு நூல்களில் ஒன்று இந்த நூல் ஆகும். இது கலிவெண்பாவால் இயன்றுள்ளது. மொத்தம் 95 கண்ணிகள் இந்நூலில் உள்ளன. ஆதலால் இந்த நூல் 190 அடிகளை உடையது.

இதனோடு ஒரு வெண்பாவும் இந்நூலின் ஈற்றில் உள்ளது. அவ்வெண்பா நான்கு அடிகளைக் கொண்டது. எனவே இந்நூலில் உள்ள மொத்தம் அடிகள் 194 ஆகும்.

கேவல நிலையில் உள்ள ஆன்மா புனித அத்துவிதம் எனப்படும் சுத்த நிலையை அடைகிற வரையில் முழுமுதல் பரம் பொருளாகிய சிவபெருமான் தம்முடைய பெரும் கருணையால் படிப்படியாகப் பாச வலியைக் கெடுத்து எப்படி ஆட்கொள்ளுகின்ருன் என்ற விஷயத்தை சுருக்கமாகவும், தெளிவாகவும் வேத ஆகம சாத்திரமுறைப்படி ஸ்ரீ உமாபதி தேவ நாயனுர் இந்நூலில் கூறியருளுகின்ருர். பரந்து கிடக்கும் பல சாத்திரங்களைப் படிப்பதனுல் ஒருவர் அறிந்துகொள்ளவேண்டிய எல்லாச் செய்திகளையும் இந்நூல் தொகுத்துத் தருகிறது. ஆதலால் இவ்வாதீனத்து வித்துவசிகாமணி ஸ்ரீ சபாபதி நாவலர் அவர்கள், 'பந்தமும் வீடும் முந்தன் அருளால் உயிர்க்கு நிகழும் முறைமையினைப் படியினில் நல்லோர் தெளிந்துய்ய' என்று இந்த நூலைப்பற்றிப் புகழ்ந்து கூறியுள்ளார்கள். மேலும், இந்நூலாசிரியரவர்கள், சிவபரம்பொருளே, ஸ்ரீ மறைஞானசம்பந்த நாயனுர் என்னும் பெயர் தாங்கி எழுந்தருளித் தம்மை ஆட்கொண்டிட்டதாகத் தெரிவித்துள்ளார்கள். இதனுல், ஆசிரியர் சிவமே ஆவர் என நாம் அறியவேண்டும் என்பது தெளியலாம். ஆகவே, இவ்வாசிரியரைப் போற்றும் முறையில் இந்தநூலை ஸ்ரீ உமாபதிதேவ நாயனுர் அருளிச்செய்துள்ளாராவர். படிப்போர்க்கு மூலநூல் தெளிவாகத் தெரியும் பொருட்டு சந்திப் பிரிவு முதலியதந்துமுகப்பில்பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலை இதன் ஆசிரியர் கி-பி 1309 ஆம் ஆண்டில் இயற்றியருளியுள்ளார் ஆவர். நாமும் பாசபந்தம் தொலையப்பெற்றுச் சிவத்தினிடம் நேசபந்தம் அடைவதற்கு இந்நூலினைப் பொருளுணர்ந்து பாராயணம் செய்தல் சிறந்ததாகும். இந்த நூலின் செய்தியைப் பொதுப்பட நோக்கினுல் இரண்டுபிரிவுகளுடையது எனப் புலப்படும். முன்பகுதி, சிவபரம்பொருள் நம்மைச் சகல நிலையில் எப்படிச் செலுத்துகிறது என்பது பற்றியதாகும். பின்பகுதி, இருவினை ஒப்பு முதலாகப் பேரின்பப்பேறு வரை சிவபரம்பொருள் ஆசாரியமூர்த்தியாகி அருள்புரிவதனைக் கூறுவதாம்.

இந்த நூலுக்குப் பழைய உரை ஒன்று உளது. அது கி-பி 17 ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் ஸ்ரீ நமசிவாயத்தம்பிரான் சுவாமிகளால் அமைந்தது என்பர். இத்தம்பிரான் சுவாமிகளாவார், இவ்வாதீனத்து ஐந்தாவது குரவராகிய ஸ்ரீ வேலப்பதேசிகரவர்களுடைய ஞானபுத்திரர் ஆவர். இவர் அருளிய உரை இனிமையும் எளிமையும் உடையது எனினும், இக்காலத்து எம்போன்ருேர் எளிதில் உணரும் தரமுடையதன்று. ஆதலால், இந்த ஏற்புக்கட்டுரை எழுதலாயிற்று. இதனை ஓதுதலால், ஒருயிரின் பூரணயாத்திரை இன்னதென நன்கு அறியப்பெற்று, நமது யாத்திரையின் பிற்பகுதியை எப்படி எம்முறையில் மேற்கொள்ளவேண்டும் என்பதை உணரலாகும்.

முடிவுரை:

பிறப்பினை நன்னெறியிற்படுத்திச் சிறப்படையச் செய்ய வேண்டுவதே நம் கடமை ஆகும். ஆதலால், இந்தச்சித்தாந்த சாத்திர நூல்களை ஓதவேண்டுவது

வேண்டுவதொரு செயலாகும். நூல்களின் உரையினை அறிதல் அவசியமானது. இத்தகைய அபரஞான வாய்ப்பின் பின்னர், ஞானசாரியரை அடைந்து அவரது திருவருளுக்கு இலக்காகி ஞானஉபதேசம் பெறவேண்டும். பின்னர், அந்நெறிநிற்றலொன்றே அமையும். இதுவே பதிஞானவாய்ப்பு எனப்படும். இதுவே திருவருட்பயனும் ஆம். இவ்வாழ்வு முறையினை ஸ்ரீ உமாபதிதேவ நாயனருடைய வரலாறு நமக்கு நன்கு தெரிந்துணரவைக்கிறது என்னலாம். ஆதலின், இத்தகைய மெய்ஞ்ஞானப் பனுவல்களை ஓதியும், உபதேசம் பெற்றும், அடங்கியொழுகியும் உய்திபெறுவோமாக! "He gaveth lips to praise Him" என்பது ஆங்கில நூல்.

ஸ்ரீ உமாபதிதேவநாயனர் திருவடி வாழ்க!

தே. ஆ. ஸ்ரீநிவாஸன்.

உ

சிவமயம்

கொற்றவன்குடி

ஸ்ரீ உமாபதிதேவநாயனுர் துதி.

அடியார்க் கெளியன் எனத்தில்லை
அண்ணல் அருளும் திருமுகத்தின்
படியே பெற்ருன் சாம்பாற்குப்
பரம முத்தி அப்பொழுதே
உடலும் கரைவுற் றடைந்திடுவான்
உயர்தீக் கையினை அருள்நோக்கால்
கடிதிற் புரிகொற் றங்குடியார்
கமல மலரின் கழல்போற்றி.

திருச்சிற்றம்பலம்

—குருபரம்பரைவிளக்கம்.



ஸ்ரீ உமாபதிதேவ நாயனர்

உ

சிவமயம்

கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதிதேவநாயனுர்

அருளிச்செய்த

போற்றிப்ப∴ருெடை

கலிவெண்பா

பூமன்னு நான்முகத்தோன் புத்தேளிர் ஆங்கவர்கோன்
மாமன்னு சோதி மணிமார்பன் - நாமன்னும்

வேதம்வே தாந்தம் விளக்கம்செய் விந்துவுடன்
நாதம்நா தாந்த(ம்) நடுவேதம் - போதத்தால்

ஆமளவும் தேட அளவிறந்த அப்பாலைச்
சேம ஒளி,எவரும் தேறும்வகை - மாமணிசூழ்

மன்றுள் நிறைந்து பிறவி வழக்(கு)அறுக்க
நின்ற நிருத்த நிலைபோற்றி; - குன்ருத

பல்உயிர்வெவ் வேறு படைத்தும், அவைகாத்தும்,
எல்லை இளைப்(பு)ஒழிய இட்டுவைத்தும், - தொல்லைஉறும்

அந்தம் அடிநடு(வு)என்(று) எண்ண அள(வு)இறந்து
வந்த பெரிய வழிபோற்றி; - முந்(து)உற்ற

நெல்லுக்(கு) உமிதவிடும் நீடுசெம்பின் காளிதமும்
தொல்லைக் கடல்தோன்றத் தோன்(று)உவரும் - எல்லாம்

ஒருபுடை ஒப்பாய்த்தான் உள்ளவா(று) உண்டாய்
அருவமாய் எவ்வுயிரும் ஆர்த்தே - உருவுடைய

மாமணியை உள்அடக்கும் மாநாகம் வன்னிதனைத்
தானடக்கும் காட்டத் தகுதியும்போல் - ஞானத்தின்

கண்ணை மறைத்த கடியதொழில் ஆணவத்தால்
எண்ணும் செயல்மாண்ட எவ்வுயிர்க்கும் - உள்நாடிக்

கட்புலனால் காணார்தம் கைக்கொடுத்த கோலேபோல்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் - முன்பால்

தனுகரண மும்புவன மும்தந்(து) அவற்றால்
மனமுதலால் வந்தவிகா ரத்தால் - வினைஇரண்டும்

காட்டி அதனால் பிறப்(பு)ஆக்கிக் கைக்கொண்டும்
மீட்(டு)அறிவு காட்டும் வினைபோற்றி; - நாட்டுகின்ற

எப்பிறப்பும் முன்செய் இருவினையால் நிச்சயித்துப்
பொற்(பு)உடைய தந்தைதாய் போகத்துள் - கர்ப்பம்ஆய்ப்

புல்லில் பனிபோல் புகும்திவலைக்(கு) உட்படுங்கால்
எல்லைப் படாஉதரத்(து) ஈண்டியதீப் - பல்வகையால்

அங்கே கிடந்த அநாதிஉயிர் தம்பசியால்
எங்கேனும் ஆக எடுக்கும்என - வெம்கும்பிக்

காயக் கருக்குழியில் காத்திருந்தும் காமியத்துக்(கு)
ஏயக்கை கால்முதலாம் எவ்வுறுப்பும் - ஆ(சு)அறவே

செய்து திருத்திப்பின்(பு) யோகிருத்தி முன்புக்க
ஐயவழி யேகொண்(டு) அணைகின்ற - பொய்யாத

வல்லபமே போற்றி; அம் மாயைக்கால் தான்மறைப்ப
நல்ல அறி(வு)ஒழிந்து நன்குதி(து) - ஒல்லைஉரு

அக்காலம் தன்னில் பசியைஅறி வித்(து)அழுவித்(து)
உக்(கு)ஆவி சோரத்தாய் உள்நடுங்கி - மிக்(கு)ஓங்கும்

சிந்தை உருக முலைஉருகும் தீம்சுவைப்பால்
வந்துமடுப் பக்கண்டு வாழ்ந்திருப்பப் - பந்தித்த

பாசப் பெருங்கயிற்றால் பல்உயிரும் பாலிக்க
நேசத்தை வைத்த நெறிபோற்றி; - ஆ(சு)அற்ற

பாளைப் பசும்பதத்தும் பாலன்ஆம் அப்பதத்தும்
நாளுக்கு நாள்சகல ஞானத்தும் - மூள்வித்துக்

கொண்(டு)ஆள ஆளக் கருவிகொடுத்(து) ஒக்கநின்று
பண்டாரி ஆன படிபோற்றி; - தண்டாத

புன்புலால் போர்த்த புழுக்குரம்பை மாமனையில்
அன்புசேர் கின்றனகட்(டு) ஐந்(து) ஆக்கி - முன்(பு)உள்ள

உண்மை நிலைமை ஒருகால் அகலாது
திண்மை மலத்தால் சிறைஆக்கிக் - கண்மறைத்து

மூலஅரும் கட்டில்உயிர் மூடமாய் உள்கிடப்பக்
காலம் நியதி அதுகாட்டி - மேல்ஓங்கும்

உந்திவியன் கட்டில்உயிர் சேர்த்துக் கலைவித்தை
அந்த அராகம் அவைமுன்பு - தந்த

தொழில்அறி(வு) இச்சை துணைஆக மானின்
எழில்உடைய முக்குணமும் எய்தி - மருளோடு

மன்னும் இதயத்தில் சித்தத்தால் கண்டபொருள்
இன்ன பொருள்என்(று) இயம்பஒண்ணு - அந்நிலைபோய்க்

கண்டவியன் கட்டில் கருவிகள்ஈர் ஐந்(து)ஒழியக்
கொண்டுநிய மித்(து)அற்றை நாள்கொடுப்பப் - பண்டை

இருவினையால் முன்புள்ள இன்பத்துன் பங்கள்
மருவும்வகை அங்கே மருவி - உருவுடன்நின்(று)

ஓங்கு நுதல்ஆய ஓலக்க மண்டபத்தில்
போம்கருவி எல்லாம் புகுந்(து)ஈண்டி - நீங்காத

முன்னை மலத்(து)இருள்உள் மூடா வகைஅகத்துள்
துன்னும்இருள் நீக்கும் சுடரேபோல் - அந்நிலையே

சூக்கம் சுடர்உருவில் பெய்து தொழிற்(கு)உரியர்
ஆக்கிப் பணித்த அறம்போற்றி; - வேட்கைமிகும்

உண்டிப் பொருட்டால் ஒருகால் அவியாது
மண்டிஎரி யும்பெருந்தீ மாற்றுதற்குத் - திண்டிறல்சேர்

வல்லார்கள் வல்ல வகையால் தொழில்புரிதல்
எல்லாம் உடனே ஒருங்(கு) இசைந்து - சொல்காலை

முட்டாமல் செய்வினைக்கும் முன்செய்வினைக் கும்செலவு
பட்டோலை திட்டும் படிபோற்றி; - நட்(டு)ஓங்கும்

இந்நிலைமை மானுடருக் கேஅன்றி எண்இலா
மன்உயிர்க்கும் இந்த வழக்கேஆய் - முன்உடைய

நாள்நாள் வரையில் உடல்பிரித்து நல்வினைக்கண்
வாழ்நாளின் மால்ஆய் அயன்ஆகி - நீள்நாகர்

வான்நாடர் கோமுதல்ஆய் வந்த பெரும்பதத்து
நானா விதத்தால் நலம்பெறுநாள் - தான்மாள

வெற்றிக் கடும்தூதர் வேகத் துடன்வந்து
பற்றித்தம் வெம்குருவின் பால்காட்ட - இற்றைக்கும்

இல்லையோ பாவி பிறவாமை என்(று)எடுத்து
நல்ல(து)ஓர் இன்சொல் நடுஆகச் - சொல்லி இவர்

செய்திக்குத் தக்க செயல்உறுத்து வீர்என்று
வெய்துற்(று) உரைக்க விடைகொண்டு - மையல்தரும்

செக்கினிடைத் திரித்தும் தீவாயில் இட்டெரித்தும்
தக்கநெருப் புத்தூண் தழுவுவித்தும் - மிக்(கு)ஓங்கும்

நாராசம் காய்ச்சிச் செவிமடுத்தும் நாஅரிந்தும்
ஈராஉன் ஊனைத்தின் என்(று)அடித்தும் - பேராமல்

அங்(கு)ஆழ் நரகத்(து) அழுத்துவித்தும் பின்னும்தம்
வெம்கோபம் மாறாத வேட்கையர்ஆய் - இங்(கு)ஒருநாள்

எண்ணிமுதல் காணாத இன்னல் கடுநரகம்
பல்நெடுநாள் செல்லும் பணிகொண்டு - முன்நாடிக்

கண்டு கடன்கழித்தல் காரியம்ஆம் என்(று) எண்ணிக்
கொண்டுவரும் நோயின் குறிப்(பு)அறிவார் - மண்(டு)எரியில்

காய்ச்சிச் சுடஅறுக்கக் கண்உரிக்க நல்நிதியம்
ஈய்த்துத்தாய் தந்தைதமர் இன்(பு)உறுதல்-வாய்த்தநெறி

ஓடியதே ரின்கீழ் உயிர்போன கன்றாலே
நீடுபெரும் பாவம்இன்றே நீங்கும்என - நாடித்தன்

மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே வழக்(கு)ஆக
நஞ்(சு)அனைய சிந்தை நமன்தூதர் - வெம்சினத்தால்

அல்லல் உறுத்தும் அருநரகம் கண்டுநிற்க
வல்ல கருணை மறம்போற்றி; - பல்உயிர்க்கும்

இன்ன வகையால் இருவினைக்கண் நின்(று)அருத்தி
முன்னை முதல்என்ன முதல்இல்லோன் - நல்வினைக்கண்

எல்லா உலகும் எடுப்புண்(டு) எடுப்புண்டு
செல்காலம் பின்நரகம் சேராமே - நல்லநெறி

எய்துவ(து)ஓர் காலம்தன் அன்பரைக்கண்(டு) இன்புறுதல்
உய்யும் நெறிசிறிதே உண்டாக்கிப் - பையவே

மட்டாய் மலராய் வருநாளில் முன்னைநாள்
மொட்(டு)ஆய் உருஆம் முறைபோலக் - கிட்டிய(து)ஓர்

நல்ல பிறப்பில் பிறப்பித்து நாடும்வினை
எல்லை இரண்டும் இடைஒப்பில் - பல்பிறவி

அத்தம்அதில் அன்றோ அள(வு)என்று பார்த்(து)இருந்து
சத்தி பதிக்கும் தரம்போற்றி; - முத்திதரும்

நல்நெறிவிஞ் ஞானகலர் நாடுமலம் ஒன்றினையும்
அந்நிலையே உள்நின்(று) அறுத்தருளிப் - பின் அன்பு

மேவா விளங்கும் பிரளயா கலருக்குத்
தேவாய் மலகன்மம் தீர்த்தருளிப் - பூவலயம்

தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல [னுக்(கு)
முன்னின்று மும்மலம்தீர்த்(து) ஆட்கொள்கை - அன்னவ

ஆதிகுணம் ஆதலினல் ஆடும் திருத்தொழிலும்
சோதி மணிமிடற்றுச் சுந்தரமும் - பாதிஆம்

பச்சை இடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியும் மதிக்கொழுந்தும் - அச்சம்உற

ஆடும் அரவும் அழ(கு)ஆர் திருநுதல்மேல்
நீ(டு)உருவ வன்னி நெடும்கண்ணும் - கே(டு) இ(ல்)லயம்

கூட்டும் தமருகமும் கோல எரிஅகலும்
பூட்(டு)அரவக் கச்சும் புலிஅதளும் - வீட்டின்ப

வெள்ளத்(து) அழுத்தி விடும்தாளி னும்அடியார்
உள்ளத்தினும் பிரியா ஒண்சிலம்பும் - கள்ளவினை

வென்று பிறப்(பு)அறுக்கச் சாத்தியவீ ரக்கழலும்
ஒன்றும்உருத் தோன்ருமல் உள்ளடக்கி - என்றும்

இறவாத இன்பத்(து) எமைஇருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து - நற(வு)ஆரும்

தார்உலா வும்புயத்துச் சம்பந்த நாதன்என்று
பேர்இலா நாதன்ஒரு பேர்புனைந்து - பாரோர்தம்

உண்டி உறக்கம் பயம்இன்பம் ஒத்(து)ஒழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம்போற்றி; - மிண்(டு)ஆய

ஆறு சமயப் பொருளும்அறி வித்(து)அவற்றில்
பே(று)இன்மை எங்களுக்கே பே(று)ஆக்கித் - தேருத

சித்தம் தெளியத் திருமேனி கொண்டுவரும்
அத்தகைமை தானே அமையாமல் - வித்தகம்ஆம்

சைவ நெறியில் சமயம் முதல்ஆக
எய்தும் அபிடேகம் எய்துவித்துச் - செய்யதிருக்

கண்அருளால் நோக்கிக் கடியபிறப் பால்பட்ட
புண்ணும் இருவினையும் போய்அகல - வண்ணமலர்க்

கைத்தலத்தை வைத்தருளிக் கல்ஆய நெஞ்(சு)உருக்கி
மெய்த்தகைமை எல்லாம் விரித்(து)ஓதி - ஒத்(து)ஒழுகும்

சேண்ஆர் இருள்வடிவம் செங்கதிரோன் பால்நிற்பக்
காணா(து) ஒழியும் கணக்கேபோல் - ஆணவத்தின்

ஆதி குறையாமல் என்பால் அணுகாமல்
நீதி நிறுத்தும் நிலைபோற்றி; - மேதக்கோர்

செய்யும் சரியை திகழ்கிரியா யோகத்தால்
எய்தும்சீர் முத்திபதம் எய்துவித்து - மெய்அன்பால்

காணத் தகுவார்கள் கண்டால் தமைப்பின்பு
நாணத் தகும்ஞான நல்நெறியை - வீணே

எனக்குத் தரவேண்டி எல்லாப் பொருட்கும்
மனக்கும் மலர்அயன்மால் வானோர் - நினைப்பினுக்கும்

தூரம்போ லேஅணிய சுந்தரத்தாள் என்தலைமேல்
ஆரும் படிதந்(து) அருள்செய்த - பேராளன்

தந்தபொருள் ஏ(து)என்னில் தான்வேறு நான்வேறாய்
வந்து,புணரா வழக்(கு)ஆக்கி - முந்திஎன்தன்

உள்ளம்என்றும் நீங்கா(து) ஒளித்திருந்து தோன்றிநிற்கும்
கள்ளம்இன்று காட்டும் கழல்போற்றி; - வள்ளமையால்

தன்னைத் தெரிவித்துத் தன்தாளின் உட்கிடந்த
என்னைத் தெரிவித்த எல்லையின்கண் - மின்ஆரும்

வண்ணம் உருவம் மருவும் குணமயக்கம்
எண்ணும் கலைகாலம் எப்பொருளும் - முன்னம்எனக்(கு)

இல்லாமை காட்டிப்பின்(பு) எய்தியவா காட்டிஇனிச்
செல்லாமை காட்டும் செயல்போற்றி; - எல்லாம்போய்த்

தம்மைத் தெளிந்தாராய்த் தாமே பொருள்ஆகி
எம்மைப் புறம்கூறி இன்புற்றுச் - செம்மை

அவிகாரம் பேசும் அகம்பிரமக் காரர்
வெளியாம் இருளில் விடாதே - ஒளியாய்நீ

நின்ற நிலையே நிகழ்த்தி ஒருபொருள்வே(று)
இன்றியமை யாமை எடுத்(து)ஓதி - ஒன்றாகச்

சாதித்துத் தம்மைச் சிவமாக்கி இப்பிறவிப்
பேதம் தனில்இன்பப் பேதம்உறாப் பாதகரோ(டு)

ஏகமாய்ப் போகாமல் எவ்விடத்தும் காட்சிதந்து
போகமாம் பொன்தாளின் உள்புணர்த்தி - ஆதியுடன்

நிற்க அழியா நிலைஇதுவே என்(று)அருளி
ஒக்க வியாபகம்தன் உள்காட்டி - மிக்(கு)ஓங்கும்

ஆநந்த மாக்கடலில் ஆரா அமு(து)அளித்துத்
தான்வந்து செய்யும் தகுதியினால் - ஊன்உயிர்தான்

முன்கண்ட காலத்தும் நீங்காத முன்னோனை
என்கொண்டு போற்(று)இசைப்பே னியான்.

வெண்பா

போற்றி திருத்தில்லை போற்றி சிவபோகம்
போற்றிஅவன் மெய்ஞ்ஞானப் புண்ணியநூல்-போற்றிஎங்கள்
வெம்பந்த வாழ்க்கைவிட வேறாய்வந்(து) உள்நின்ற
சம்பந்த மாமுனிபொன் தாள்.

போற்றிப்பஃறொடை முற்றும்.

உ
சிவமயம்

போற்றிப்பஃறொடை ஏற்புக்கட்டுரை

1. 'பூமன்னும்' என்பது முதல் 'நிருத்தநிலை போற்றி' என்பது வரையில் ஒருதொடர்.

பதிபுரியும் ஆனந்த நிருத்தம்

மக்களாகப் பிறப்பெடுத்துள்ள நாம், நம்மையே பிறப்பால் பெருமை படைத்தவராகவும், பதவி படைத்தவராகவும், செல்வம் படைத்தவராகவும், அறிவு படைத்தவராகவும் மதித்து, நமது பெருமை, பதவி, செல்வம், அறிவு முதலியவற்றிக்குக் காரணராக உள்ள இறைவனை எண்ணுமலே வாழ்கின்றோம். இதுவே, நம்மிடம் உள்ள எல்லாப் பிழைகளுக்கும் முதன்மை பூண்டதாகும். பற்பல சமய நூல்களின் பூர்வபக்ஷங்களும் இந்தச் செய்தியைத்தான் நினைவூட்டு கின்றன. நாம் பெற்றுள்ள இம் மானிடப்பிறப்பை நாமாக அடைந்துவிடவில்லை. அப்படி நாமே அடைய முடிவதானால், அங்கஈனம், அழகின்மை முதலான குறைபாடுகளை உடைத்தாயிருக்கமாட்டோம். அன்றி யும், ஒவ்வொருவரும் ஒருவிதப் பதவியைப்பெற்று வாழ்கிறோம்.

நல்லதும் உயர்வுடையதுமான பதவி வேண்டும் என்ற ஆசை எவர்க்கும் உள்ளது. ஆனால் அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ள நமக்குத் திறமை போதவில்லை. அப்படி ஒருவேளை ஒருயர்பதவியை

அடையப்பெற்றுலும், அதிலே நிலைத்திருக்கவும் முடிய வில்லை. செல்வத்தின் செய்தியும் இப்படிப்பட்டது தான். குபேரஞக வாழவேண்டும் என்ற விருப்பம் நம் யாரிடமும் குடிகொண்டுள்ளது. அதற்காகப் பற்பல முயற்சிகளும் செய்கின்றேம். ஆனுல், குறிப்பிட்ட அளவு செல்வம் அடையமுடிவதில்லை. அடைந்தாலும் அதனை அநுபவிக்க முடிவதில்லை. இடையே செல்வம் நீங்கிப் போதலையும் நாம் காண்கிறேம். மக்கட்பிறப் பினர் எவரும் பேரறிவாளராக - பூரண அறிவாளராக - இருத்தற்கும் கூடவில்லை. ஒன்றை அறியமாட்டாமல் விழிக்கின்றேம்; விபரீதமாக அறிகின்றேம்; அறிந்த ஒன்றை மறக்கின்றேம்; பிறகு நினைக்கின்றேம்; நினை வுக்கும் கோணரமுடியாமல் அலமருகின்றேம்.

நம்மிடம் உள்ள அறிவு இரண்டுவகைப்பட்டுள் ளது. ஒன்று சுட்டறிவு எனப்படும். ஒரு பொருளைப் புலன்கள் முதலிய கருவிகளின் துணைகொண்டு அறிவதே சுட்டறிவு ஆகும். ஆகவே, துணையின்றி இவ்வறிவு நிகழ்வதில்லை. மற்றெருவிதமான அறிவு சிற்றறிவு எனப்படும். இது ஆராய்ச்சியறிவு ஆகும். இஃது அந்தக்கரணங்களின் துணைகொண்டு புரியப் படுவதாகும். மேலும், நம் அறிவோடு ஆணவம் எனப்படும் அறியாமையாம் இருள் சரிக்குச்சரி கலந் திருத்தலால் விரைந்தும், சரியாகவும் ஆராய முடிவ தில்லை. ஒருவர் செய்து சொன்ன ஆராய்ச்சியானது பின்னே ஒருவரால் பிழை என்று நிரூபிக்கப்படுகிறது. 'அரிஸ்டாடில்' கண்ட முடிபுகள் அவர் பின்வந்தோ ரால் மறுக்கப்பட்டிருத்தலை விஞ்ஞானிகள் அறிவர். ஆகவே, ஆராய்ச்சி என்பது உண்மையைத் தேடப் பயன்படுகிறதேயல்லாமல் நாடி முடிபு கட்டுதற்கண்

உறுதியாகப் பயன்படுவதில்லை. இவ்வளவு தூரம் சொல்லியவைகொண்டு மனிதருடைய அறிவு குற்ற மற்ற பூரணமுடையது அன்று என்று தெரியலாம். ஒரு நூலுக்கே, அத்துவைதம், விசிட்டாத்துவைதம், துவைதம் முதலான உரைகள் பண்டைப் பெரு மக்களால் ஒன்றையொன்று மறுக்கும் வகையிலும் உடன்படா நிலையிலும் செய்யப்பட்டிருத்தல் ஜீவ போதத்தின் பலவீனத்தைத் தெளிவிப்பதாகும். இத் தகையதாம் குறையறிவுகொண்டு பூரண அறிவுடைய இறைவனை அறிதல் ஒருபோதும் இயலாது என்க. இதுகாறும் கூறியவற்றால், மக்களாவார், தமது யாக்கை வலிமை, பதவி வல்லமை, செல்வச்செருக்கு, அறிவின் ஆற்றல் ஆகிய இவைகொண்டு அறியக் கூடியதாம் எளியதொரு பொருளல்லன் இறைவன் என்பது தெளியப்படவேண்டும். "உணர்ந்துணர்ந்து உணரினும் இறைநிலை உணர்வரிது உயிர்காள்!" என்பது ஆழ்வார் வாக்காகும். இனி, இக்கருத்துக் கான உதாரணங்கள் காட்டும் முறையில் பாட்டுத் தொடங்கிச் செல்லுகின்றது.

இறைவனின் அறிதரவாரா நிலை

பூ மன்னும் நான்முகத்தோன், புத்தேளிர் ஆங்கு அவர்கோன், மாமன்னு சோதி மணி மார்பன், நாமன் னும் வேதம், வேதாந்தம், விளக்கம்செய் விந்துவுடன், நாதம், நாதாந்தம், நடுவே தம் போதத்தால் ஆம் அளவும் தேட அளவு இறந்த அப்பாலைச் சேம ஒளி:

இந்நூலின் தொடக்கத்துக்கான மங்கல மொழி யாகப் "பூ" என்ற சொல் உள்ளது. எந்த நூலையும்

மங்கல மொழியால் தொடங்குவது கவிமரபு ஆதலால் இங்ஙனம் இந்நூலாசிரியர் தொடங்கலுற்றாராவர். மக்களாவார்க்கு வேண்டுவதும் மங்கலமேயாதலே இச்சொல் நினைவூட்ட வல்லதாகும். அன்றியும் 'பூ' என்பது பூமி என்றும் தமிழ் முறையில் பொருள்படும். அவ்வாறு கொள்ளுங்கால், பூமியின்கண் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் நாம்; இது நம்மனோர்க்கு நிலையாயதோர் இடமன்று என்பதையும் குறிப்பிக்கும் தன்மையுடையது இச்சொல் என்னலாம். இதனால் மாயை ஆகிய பூமியின்கண் வாழ்பவர்களாகிய நாம், மாயை நீங்கிய மங்கல நிலையினை எய்தவேண்டிய கடமை பூண்டுள்ளோம் என்பது தெளியப்படும்.

பூ மன்னும் நான்முகத்தோன் (பிரமன்):

இறைவனை அறியமாட்டாதார் எவர் எவர் என்பதை இச்சொற்றொடர் முதலாகக்கூறி ஆசிரியர் நமக்குணர்த்துகின்றாராவர். பிரமனாதியோரை வரிசைப்படக்கூறி இவர்களாலும் இறைநிலை உணர்வரிது என்று கூறுவதனால் சகலவர்க்கத்துப் பசுக்களிற் கடைப்பட்ட நம்மனோரால் இறைநிலை அறிதல் இயலாது என்பது புலப்படும். இங்ஙனம் கூறுதல், 'காவிய அர்த்தாபத்தி' என்னும் அலங்காரநயம் கொண்டதாகும். பிரமன், படைத்தல் தொழில் புரிபவன். என்றாலும், சிவம், தனது அதிகாரசத்தி கொண்டு உணர்த்துவதனால் பிரமன் இப்படைப்புத் தொழிலைச் செய்யவல்லவன் ஆகின்றான். இங்ஙனம் உணர்த்த உணருமியல்பு பிரமற்கு இருத்தலால், இத்தகையினரையும் பசுவர்க்கத்திலே சேர்த்துரைப்பர். இவற்கு அதிகாரமலமிருத்தலின் இறைவனுணைப்படி

இத்தொழிலைச் செய்கின்றானல்லால் தனக்கு உரிய சுதந்திரத்தால் செய்வதிலன். புராணங்களில் ஆதிப் பிரமற்குப் பரமன் படைப்புத் தொழிலை உணர்த்திய வரலாறுகள் கூறப்படுதலும் இதனைத் தெரிவிக்கும். நம்மைப் படைப்போனுக்கே இத்தகைய குறை இருத்தலால், நமக்கு இக்குறை இருத்தல் வியப்பன்றாம். "ஆராயும் வேளையில் பிரமாதி ஆனாலும் ஐய ஒரு செயலும் இல்லை" என்பது தாயுமானவர் பாடலடி ஆகும்.

"ब्रह्मविष्णुरुद्रेन्द्रा स्संप्रसूयन्ते नकारणम्
ब्रह्माविष्णुश्च रुद्रश्च सर्वेवा भूतजातयः
नाशमेवानुधावन्ति"

"ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ் ஸம்ப்ரஸூயந்தே நகாரணம், ப்ரஹ்மாவிஷ்ணுச்ச ருத்ரச்ச ஸர்வேவா பூத ஜாதய:, நாசமேவாநுதாவந்தி"

என்னும் அத்ரவசிகை வாசகங்களும் இச்செய்தியே செப்புவது காணலாம். நமக்கெல்லாம் ஒரு முகமே உள்ளது. பிரமனுக்கோ நான்கு முகங்கள் உண்டு. எனவே ஒரேகாலத்தில் நாற்றிசையும் பார்க்கவல்ல திறமை பிரமனுக்கு உள்ளது. எனவே எத்திசையும் இருந்தபடியிருந்தே காணவல்ல ஆற்றல் படைத்த பிரமனாலும் எங்கும் நிறைந்துள்ள இறைவனைக் காண முடியாமையை உணர்த்தும்பொருட்டே நான்முகன் என்கிறார் ஆசிரியர்.

பூ மன்னும் என்ற தொடர், அப்பிரமன் தாமரை மலரில் இருத்தலைத் தெரிவிக்கும். திருமாலின் உந்திக் கமலம் எனினும் சரியே. எனவே, தான் இருத்தற்கே

பிறிதொருபொருளை ஆதாரமாகக் கொண்டுள்ளான் பிரமன் என்பது இதனால் தெரியவரும். நிராதாரமாய், யாவற்றிற்கும் தான் ஆதாரப்பொருளாய் எங்கும் நிறைவுடையதே இறைநிலை. இங்ஙனம், தன் இருப்புக்கே ஒராதாரத்தை நாடும் பிரமன், நிராதாரமாய் விளங்கும் பரமனை அறிதல் ஒருபோதும் இயலாதென நாம் அறியலாம். அன்றியும், புறத்தே பவுதிகமாயுள்ள பூவிலே மன்னுபவன் பிரமன். இறைவனோ, அகத்தே மன்னுபவன். ஆதலால் சூட்சுமமானவன். "மலர் மிசை ஏகினான்" என்பர் திருவள்ளுவர். தூலம், சூக்குமத்தை அறிதல் ஒருபோதும் இயலாது. மேலும், இருக்கையில் சுகம் காண்பவன் பிரமன். ஆதலால், பரம சுகத்தைக் காணும் பெற்றியனல்லன் பிரமன் என்னலாம். மன்னும் என்ற சொல் இவ்வற்ப சுகத்தை உவர்த்து நீத்துப் பேரின்பசுகத்தை நாடும் நாட்டந் தானும் நான்முகற்கு இல்லைபோலும்! என்பதை உணர்த்தி நிற்கின்றதென்னலாம். மற்றும், அடிமுடி தேடிய கதையிலும், பிரமன் இறைவனை அறிய முடியாமை கூறப்பட்டுள்ளமை தெரியலாம்.

பின்னும் சொல்லப்புகின், பிரமன், தன் ஐந்தாம் சிரம், சிவத்தால் கிள்ளி எறியப்பட்டவன். இது, பிரமனுடைய தற்போத இழிவால் நிகழ்வுற்றது. ஆகவே, தம் போதத்தால் தேடினார்க்கு அறிவரியன் சிவன் என்பதும் கருதப்பட வேண்டும். இப்படி, பூ மன்னும் நான்முகத்தோனும் தற்போதத்தால் ஆமளவும் தேடினாலும் அகப்படாதவன் இறைவன் என்று கூறியுள்ள தன்மை கொண்டு, பூ (மி) மன்னும் ஒரு முகத்தோராகிய நாம் நம்பசுபோதத்தால் ஒருபோதும் அறிதல் இயலாது என்பது வெள்ளிடை விலங்கல் என

விளங்கும். இதனுல், யாக்கை நலம்கொண்டு மயங்கு மறிவால் இறைவனை ஒருசிறிதும் காண்டல் இயலாது" என்க.

புத்தேளிர் ஆங்கு அவர்கோன் :

தேவர்கள், சுவர்க்கத்தே உறைபவர். இஃது இவரது புண்ணியப்பயனின் விளைவாம். இவர்கள், நிஷ்காமியமாகச் சிவபுண்ணியம் புரியாமல், தாம் செய்த புண்ணிய பயனைத் தாமே அநுபவிக்கும் அவா உடையவர்கள் ஆவர். இதனுல், புண்ணியப்பயன் உள்ள அளவுக்கே இவர்கட்குச் சொர்க்கசுகம் உண்டு. பின்னர், பூவுலகில் பிறப்பெடுத்தே தீருவர். இவர்கள் சொர்க்க இன்பம் என்கின்ற நிலையாத இன்பத்தில் மயங்கி, இறைவனை மறந்து திரிவர். இவர்கள், மக்கட் பிறப்பினரைவிடச் சற்று மேன்மை உடையவராயிருப் பினும், அறிவு மயக்கமே பெரிதும் பெற்றிருத்தலின் இறைநிலையை இவர்கள் தமது மயக்க அறிவுகொண்டு காணமாட்டாதவராயினர். முன்னே சென்றேன் இருளில் தடுக்கிக் குழியில் விழுதல், பின்னே செல்பவ னுக்கு விளக்குப் பிடித்தது போலாகும். இந்த முறை யினை எண்ணிப் பார்த்தால் நாம், புத்தேளிர் கதியின் பலவீனத்தைக் கண்டு உண்மை தெளியவேண்டும் என்பது புலப்படும். தேவர்கள், பலப்பல தடவை களில் அவதியுற்றுக் குமரனுலும், அரனுலும் துன்ப விடுதலை செய்யப்பட்ட செய்திகளைப் புராணங்கள் புகலுவதனுல் அறியலாம்.

இந்திரன், புத்தேளிர்க்கு இறைவன் ஆவன். இந்திரனும், வேள்விப் புண்ணிய பலத்தால் இப்பதவி

எய்தியவன் என்பர். இவனும், புண்ணிய பலனைச் சிவார்ப்பணம் செய்யாதநிலையினனே ஆவன். "சர்ப்ப, சர்ப்ப" என்று சொல்லிச் சாபம் எய்திய வரலாறுகளும் இந்திரனின் இழிவினைப் புலஞ்செய்யும், 'ஆயிரங் கண்ணன்' என்னும் பெயரை இந்திரன் பெற்றுள்ளமை இவனது அறிவு மயக்கத்தைக் காட்டவல்ல கதையாகும். இத்தகைய குறைபாடுகளுடைய இந்திரனும் தற்போதத்தால் சிவனை அறியமாட்டாதவன் ஆவன் என்கிறார் ஆசிரியர். தான், பிறரை நல்வழிப்படுத்துங் கடப்பாடுடைய அரசனுயிருந்தும் இந்திரன் அங்ஙனம் செய்யகில்லாமையினை, 'ஆங்கு அவர் கோன்' என்று கூறியுள்ளமையால் நாம் அறியலாம். இதனால், பதவி மோக அறிவுச்செருக்காலும் பரமன் காண்டற்கரியன் என்பதை நாம் தெரியவேண்டும்.

மா மன்னு சோதி மணி மார்பன் :

செல்வத்திலே சிறந்தவன் குபேரன் என்பர். ஏனெனில், அவன்பால் திருமகளின் கடாக்ஷம் உள்ளது. நவமணியும், எல்லாவித (எட்டுவித)ச் செல்வங்களும் திருமகள் கடைநோக்கு ஒருவருக்குக் கிடைக்குமேல் நிறையும். ஆதலால் இலக்குமியைத் திருமகள் என்றழைப்பாராயினர் உலகோர். அத்தகைய திருவும், தான் அடையப்பெறவேண்டுமென்று மால் கொள்ளப்பெற்ற அழகு ஆதிய செல்வம் உடையவன் திருமால் எனப்படும் விஷ்ணு ஆவன். இத்தகையோனுகிய திருமாலின் வலத்தை நாடியே திருமகள், என்றும் நீங்காச்செல்வமகள் ஆயினள். இத்திருமகள் இதற்காகவே திருமாலினுடைய வலமார்பில் நீங்காமல் நித்தியமாய் உறையலுற்றனள். நீலவானத்திலே

செஞ்ஞாயிறு அழகுற விளங்குமாப்போலே, திருமகள், திருமாலின் வலமார்பில் தங்கிச் சிறப்புறுவாளாயினள். இத்தகைய வடிவு அமைந்த மார்பத்திலே தங்கப் பெற்றமையால் திருமகள் அழகுறவிளங்கும் சீருடைச் செல்வத்தையும் பெறலுற்றுளாவள். இதனால் அவட்கு வாழ்வு சிறப்புற்றது. இதனை, "வடிவாய் நின் வல மார்பினின் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டே" என்ற பெரியார் திருவாக்குப் புலப்படுத்தும்.

இப்பேரழகு தனக்கு நிலைத்தற்கருதியே தாமரை யினும் விரும்பித் தடமார்பில் தங்கியிருத்தலானுள் அலர்மகள். இதனாலே பெரிய பிராட்டியாயினள். "அகலகில்லேன் என்று அலர்மேல் மங்கை உறை மார்பன்" என ஆழ்வார் அருளிச்செய்தலால் திருமால் சிறப்பு உணரப்படும். இவ்வாறு செல்வத்துச் செல்வனாக விளங்குபவன் திருமால் என்பதை மா மன்னு மார்பன் என்ற தொடர் குறிக்கவல்லதாகும். மற்றும், பாற்கடலிற் பிறந்த கவுத்துவமணி என்னும் வற்றா வளத்துச் செல்வமணியையும் திருமால் தனது மார்பிலே அணிந்துள்ளானுவன். இம்மணி, யாவகை மணியினும் சோதிமிக்கது. ஆதலின், இது திருமகளுக்கும் அரிதாம். செல்வீக ஒளிமணியாம். ஆதலால் ஆசிரியர் இதனைச் சோதிமணி என்றுள்ளார். இவ்வாறெல்லாம் அடையமுடியாத திருவும் செல்வமும் திருமால் குறை யறப் பெற்றவனுயினும், இந்தச் செல்வச் செழுமை யால் சிவத்தை அறியும் ஆற்றலுடையவன் ஆகான். இச்செல்வங்களைப் பெற்றதன் பயனாகச் "செல்வத்துப் பயனே ஈதல்" என்பதற்கொப்ப இவ்விண்டுமூர்த்தி, காத்தற் கடவுளாயினன். இங்கும் சிவத்தினது காத்தற் சத்தியமிசமே விஷ்ணுவுக்கு இந்தத் தொழிலையும்

தொலையாத செல்வத்தையும் தந்ததாயிற்று என நாம் கருதுதல்வேண்டும்.

இவ்விஷ்ணு. சிவத்தாணுவின் அடிகாண ஆதிக் கோல மாகியும் இயலமாட்டாதவனுனன் என்பது வரலாறு. மேலும், மாபலிபக்கல் இரத்தல் நிகழ்த்தலும் வேண்டிக் கிடந்தது செல்வத்திருமாலுக்கு. இவற்ரு லெல்லாம் நாம் உணரக்கிடப்பது, எவ்வளவுதான் செல்வச்சிறப்புப் பெற்றிருப்பினும் இச்சிறப்புத் துணை கொண்டு இறைவனைக் காண்டல் ஒருபோதும் இயலா தென்பதாம். இங்கு உபலட்சண முறையால் குண ருத்திரனையும் நாம் கூட்டிச்சொல்லல் ஒல்லும். ஆகவே, இவ்வதிகாரிகள் எவரும் பெரும்பொருளாம் இறைவ னின் பேரருளால் தத்தமக்குரிய அதிகாரமும், எல்லை யும், நாளும் பெற்று முடிவில் முடிபவரேயாவர் என்பது தெளியப்படும். சிவத்தின் தொடர்பு இன்றி இவர்கள் ஏதும் செய்ய இயலாது. இவர்களும் சிவம் அறிவிக்க அறியும் உளத்தரே ஆவர். இக்கருத்தினை, "பரத்திலே ஒன்ருய் உள் ஆய்ப் புறம் ஆகி - வரத்தி னுள் மாயவனய் அயனகித் - தரத்தினுள் தான் பல தன்மைய னகிக் - கரத்தினுள் நின்று கழிவு செய் தானே" என்னும் திருமந்திரப்பாடலால் நாமறியலாம்.

இனி, ஞானம்கொண்ட வேதபுருஷனுலும் சிவம் அறிதக்கான் ஆகான் என்பதை, "வேதம், வேதாந்தம் … ஆமளவும் தேட … அப்பாலைச் சேமஒளி" என்னும் ஆசிரியர் கூற்றுத் தெரிவிக்கும். வேதம், சிவத்தால் வெளியிடப்பட்ட தன்மையது ஆதலால் சிவத்தை அது முற்ற அறிதற்பான்மையதன்று. வேதபுருஷன் இறைவனைச் சதா வழிபாடியற்றிக்கொண்டிருப்பவன்

என்னும் சுருதிவாசகமே இஃதுணர்த்தும். வேதாந்தமும் முனிவர்களின் முடிபுக் கூற்ருதலின் வேதம் போன்ற இயல்பினதேயாகும். ஒரு குழந்தையானது எவ்வளவுதான் சிறப்புடையதாஞலும், தன்னுடைய தாயைக் காட்டிலும் ஒருபோதும் வயதில் பெரியதாதல் முடியாதாம். இத்தகையதே வேத வேதாந்தத்தன்மை.

இனி, வேத வேதாந்தங்களே விளக்கம் செய்தற்கண் நாதவிந்து தத்துவங்கள் துணேயாய் நிற்றலின் அவை, சிறந்த தத்துவங்களாகக் கருதப்படும். நாதவிந்துக்களின் துணேயில்லாமல், எவ்வகை எழுத்துக்கும் எவ்வகை வடிவும் இல்லேயாம். ஆதலால் வேத முதலானவற்றையும் விளங்கச்செய்யும் திறம் நாதவிந்துக்கட்கு உண்டு. எனினும் இவை சுத்தமான மாயைத்தன்மையே உடைமையின் மாயைக்கு அப்பாற்பட்ட இறைவனே அறியும் திறத்தன அல்லவாம். இவைகள் பலதிறக் கலேகளாம் தன்மை உடையவாகும். இவற்றின் தோற்றமாயுள்ள நாதாந்தம், யாவற்றையும் விளங்கச்செய்யும் சிவசத்தி கலேகளாகும். இவையும் சிவத்தின் ஒருகூறே ஆதலின் இறைமை முழுதும் அறியவல்லன அல்லவாம். ஆகவே, குடிலேயாதி தத்துவக்கூறுகள் இறையை அறியும் திறம் உடையன ஆகா என்னலாம். இறையை அறிதற்கண் நம்மைச்செலுத்தும் துணேபுரிவன இவை என்னலாம். இதனல், பசு ஞானத்தாலும், பாச ஞானத்தாலும் பார்ப்பரியவன் பரம்பரன் என்பதை இறை பெருமையாக நாம் உணரவேண்டும், இது கருதியே, நடுவே தம் போதத்தால் ஆம் அளவும் தேட அளவிறந்த ... ஒளி என்றுள்ளார் ஆசிரியர். இங்ஙனம் கூறியவதனல், நம் அறிவுகொண்டு இறைவனே அறிதல் ஒரு சிறிதும்

இயல்வதன்று எனத் தெளியலாம். இவ்விஷயத்தை, "அறிவிலாமையன்றே கண்டது ஆண்ட நாள் அறிவனே அல்லனே அருள்ஈசனே" என்னும் மணிவாசகர் வாசகத்தாலும் நாம் தெரிதல்கூடும்.

எப்பொருளையும் தன்னுட்படுத்து அவை ஏகதேசமாம்படி விளங்குபவன் இறைவனுதலால் அப்பாலை ... ஒளி என்றனர் ஆசிரியர். இதனுல், இறைவனது ஆதார சத்தித்துவம் புலப்படுத்தவாருயிற்று. இத்தகையதொரு பொருள் எவ்வுயிரையும், காப்பதே இயல்பாகக்கொண்டிருப்பதாதலால் சேமம் என்ருர். எனவே, எவ்வுயிரின் வாழ்வினது சேமிப்பும் சிவத்தின் பாலே உள்ளதாம். இத்தகைய பரம்பொருள் ஒருபோதும் மறைவதன்று; என்றும் ஒளிர்வதாகும். இதுவே, எவற்றையும் விளக்குவதும், ஒளிப்பதுமாகலால் ஒளி என்று குறிக்கலுற்ருர் ஆசிரியர். "அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய்" என்பர் தாயுமானுர்.

ஆன்மாக்களுடைய இச்சை ஞானம் கிரியைகளை மறைக்கின்றது ஆணவவல்லிருள். இதனை எந்த ஒளியும் போக்காது. அவ்வல்லிருள் வலி ஒழிந்தாலல்லது நமக்குச் சேமம் இலது. ஆதலால் சேம ஒளி எனப்பட்டது என்னலாம். சோம சூரிய நட்சத்திரங்கட்கெல்லாம் ஒளி கொடுப்பது இச்சேம ஒளியே. இதனை "மெய்ச்சுடருக்கெல்லாம் ஒளிவந்த பூங்கழல்" எனப் போற்றுவர். உமையம்மை சிவத்தினது கண் மறைத்த கதையும் சேம ஒளியின் திறம் செப்புவதேயாகும். இவ்வொளிதான், தில்லைமன்றினுள்ளே நாம் காண நிற்பது. இந்தச்செய்தியை, "பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானை" என்னும் தேவாரத்தினும்

காணலாம். இனி, இத்தகையதாம் இறையொளிபுரி செயல்கள் படிப்படியே கூறப்படும்.

எவரும் தேறும் வகை - மாமணி சூழ் மன்றுள் நிறைந்து பிறவிவழக்கு அறுக்க நின்ற நிருத்த நிலை போற்றி :

மேற்கூறப்பட்டவற்றால் இறைவன் எவராலும் அறிதற்கரியவன்; அதாவது, "உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்" என்று நாம் தெரிவது நன்றாம். இங்ஙனம் அறிவதற்கு அரிய பிரமப்பொருளானது, தன் இருப்பைத் தானே தெரியச்செய்தாலன்றி நம் போல்வார் இம்மியும் உணர இயலாது. நம்மையும் உலகையும் உண்டாக்கி, நிலைக்கச்செய்து, ஏற்ற வண்ணம் மாற்றிமாற்றி உதவி, உண்மை உணரச் செய்தற்கானவகை மறைப்புச் செய்து, உண்மை உணர்த்தித் தன்னோடு உயிரை ஒன்றுபடச் செய்வ தற்கு இறைவனே பேரருள்கொண்டு இயங்கி இயக்கு கின்றானவன்.

ஒரு பெருங்கல்லைச் சும்மா வைத்திருப்பின், அத னிடம் ஆற்றலிருப்பதை அறியமுடியாது. அதனை அசைத்து வீழ்த்தினும், உருட்டினும் அதனிடம் உள்ள சக்தியை அதன் செயல்கொண்டு நாம் உணர முடிகிறது. எனவே, ஒரு பொருளின் ஆற்றல் அப் பொருளினுள் அடங்கிக்கிடக்கும் நிலையே அந்தப் பொருளின் தன்னிலை அல்லது அசையாநிலை ஆகும். அப்பொருளை அசையச்செய்து செயற்படுத்தும் நிலை யானது அப்பொருளின் ஆற்றல் வெளிப்பட்டுப் பொருளையும் பிறவற்றையும் இயக்கும் அசைவுநிலை எனப்படும்.

தேங்கிக்கிடக்கும் தண்ணீரானது, ஓடத்தலைப் பட்டால், தன் அசைவுமண்டலத்துட்பட்டவற்றை அடித்துச்செல்லுகிறது. தேங்கிக்கிடக்கையில், நீரின் ஆற்றல் அதற்குள் அடங்கிக்கிடக்கிறது. அப்போது, ஆற்றலானது நீரினுள் நீரின்வழிப்பட்டுள்ளது. நீர் ஓடத் தொடங்குகையில் ஆற்றல் நீரினின்றும் வெளிப் பட்டுப் பற்பல காரியங்களைச் செய்கிறது. அப்போது ஆற்றலின்வழி நீர் பிணைந்து நிற்கிறது. ஆற்றல் நீரி னின்றும் வெளிப்பட்டுப் பலதிறப்பட நடப்பினும் நீரின் தொடக்கிலேயே நோக்கியுள்ளது. இந்த நிலைமை களை நாம் கண்ணால் காண்கிறோம்; அதன்வழி இயங்கிப் பயன்களைத் துய்த்து நலம் அடைகிறோம். நீர், கல் முதலன உருவப்பொருளாதலின், கண்கூடாகக் காண வும் உணரவும் முடிகிறது. இறைவன், உருவம் கடந்த அருவமும் அதீதமுமானவன். ஆகையால், அவன் புரி செயல்களை - நமக்காகப் புரிகின்ற காரியங்களை - நாம் அறியமுடிவதில்லை. ஆனால் காரியம் என்னவோ நிகழ்ந்துகொண்டேதான் இருக்கிறது.

நாம் கண்ணால் பார்க்கவில்லை என்பதற்காகக் கங்கைநதி பாய்ந்து ஓடாமல் ஒய்ந்துகிடக்கவில்லை. அது, தன் காரியத்தைத் தன்போக்கிலே புரிந்து, நாடு வார் ஆடுவார் பாவங்களைக் கழிக்கின்றது, இப்படித் தான், நாம் அறியாமலே, நமக்காக அருவப்பொருளாம் இறைவன், தன் ஆற்றலை வெளிப்படுத்தி, நமக்காவன செய்துகொண்டே இருக்கிறான். இதில் அவற்கு ஒய்வு இல்லை. இந்தத் தத்துவத்தையே சிதம்பரத்திலே நட ராசப்பெருமானது நடிப்புத் தெரிவித்துக்கொண்டே உள்ளது. நீர், கல், முதலியவை சடப்பொருளாதலால் அவற்றை அவற்றின் வேறுமொருவன் அசைக்க

வேண்டியுள்ளது. இறைவன் அத்தகையன் அல்லன். அவன் இந்த அசைப்பைத் தன் ஞானத்தாலேயே நிகழ்த்துகிருன். அதாவது, தன் திருவருட் கருத்தாலேயே செய்கின்ருனுவன். ஒருபொருளை அசைப்பதற்கு, நமக்கு உடம்பின் உதவி தேவைப்படுகிறது. ஆனுல் அதனை அசைக்கநினைப்பதற்குக் கை, கால்களின் துணை தேவையில்லை. தன் நினைப்பே இது செய்யும். இப்படித்தான் இறைதிருவுள்ளம் எவற்றையும் சங்கற்பித்தே செயற்படுத்துகின்றது.

மக்களாகப்பிறந்துள்ள நாம், இப்படி இறைவன் நினைத்தும் அசைந்தும் நம்மை இயக்கி நல்வழிச் செலுத்துகின்ருன் என்ற உண்மையினை உணர வேண்டும். இறைவன், தன் ஞானவெளியில் நின்றே நமக்கான ஐந்தொழிலும் புரிகின்ருனுவன். அண்டங்கட்கும், உடம்பெடுத்த உயிர்கட்கும் எப்படி ஊன வெளி - பவுதிக ஆகாசம் - நிலைத்திருத்தற்கு வேண்டியுள்ளதோ அப்படியே இறைவற்கு ஐந்தொழிலாற்றற்கண் ஞானவெளி - சித் அம்பரம் - நிலைக்களனுகின்றது. இந்த விஷயத்தையே சிதம்பரம் நடராசர் காட்சியானது யாவர்க்கும் கட்புலனுகக் காட்டி உணர்த்துகின்றது என்னலாம்.

உள்ளத்தின் அசைவால் ஒருவனிடமிருந்து எண்ணங்கள் கோடிக்கணக்காகக் கிளம்புகின்றன. விசிறியின் அசைப்பால் காற்று வெளிப்படுகின்றது. கட்டைகளை உராயச்செய்தால் நெருப்பு வெளிப்படுகின்றது. இப்படித்தான் இறைவனின் திருவுளத்தாலும் ஆற்றலாலும் அவன்பால், செயலற்றகாலை உயிர்களையும் ஒடுக்கிக்கொண்டு ஒளிந்துகிடந்த மாயை அண்டங்கள்

வெளிப்படுகின்றன. இவை யாவும், மேற்குறிக்கப் பட்ட ஆற்றலின்வழியே ஒழுக, அவ்வாற்றல், இறைவன் திருவுளத்து - ஞானத்து - வழியே நோக்கிக் கிடக்கின்றது. நாம், அம்மையைத் தரிசிக்க, அம்மை, இறைவனை - நடத்தை - நோக்கி நிற்கும் தன்மை சிற்றம்பலத்தே காணக்கிடப்பதாகும். இங்ஙனம், அண்டகோடிகளெல்லாம் ஞானவெளியிலே - அருள் வெளியிலே சுழல அவ்வருள்வெளி அருநடத்தோடும் அமைந்துள்ள காட்சியே சிருட்டிமுதல் நிகழும் நிகழ்ச்சியாம். இதனையே, மாமணிசூழ் மன்று என்ற தொடர் நமக்குக் குறிப்பிக்கின்றதாகும். சிறந்த மணிகள் தங்கிய சபை என்பது சாதாரணமாக இந்தத்தொடரின் பொருளாகத் தரப்படும். உட்பொருளே மேல் உரைக்கப்பட்டது.

இப்படியான, சிதம்பரக்காட்சி ஒன்று இல்லையாயின், எவரும் இந்த இறைநிலைபுரிசெயலை அறிய ஒண்ணாது. இதுபற்றியே ஆசிரியர், எவரும் தேரும் வகை ... நின்ற நிலை எனலானார். 'தேறுதல்' என்பது ஐயமறத் தெளிதலாம். ஐயம் அறுதற்கு வழிகள் இரண்டு உள. ஒன்று, தானே ஆய்ந்து உண்மை காண்டல்; மற்றது, அநுபூதியாளர் அறிந்து கூறியுள்ள முடிபினை அப்படியே நம்புதல். இவற்றுள் பிற்கூறப் பட்டது எளிதும் பிழைபடாததுமாம். இதற்கு வேண்டுவது நம்பிக்கை அல்லது பத்தியேயாகும். ஆதலால், நாம் உள்ளத்தே மாசற்ற பத்தி மன்னப்பெற்றால் இறைபுரி நிருத்தத்தினை எளிதின் தரிசிக்கப்பெறலாம், "பத்தி வலையிற் படுவோன்" ஆதலால், பத்தியொன்று வாய்ப்புண்ட எல்லோரும் காணக்கூடும் என்பதுபற்றி எவரும் என்றார்.

பிறவி வழக்கு அறுக்க நின்ற நிருத்தநிலை :

தொட்டிலிற்கிடக்கும் குழந்தைக்குப் பாலூட்டவும், பாதுகாக்கவும் வேண்டிய அதன் அன்னை அத்தொட்டிலடியிலேயே கிடத்தல்போலவும், பயிரைப் பாதுகாக்கக் கருதும் குடியானவன், பலன் பழுது போகாமலிருக்கும்பொருட்டுப் பயிருள்ள வயலிலேயே பரண்கட்டி நின்று பாதுகாப்பதுபோலவும், இறைவன் நம் கண்காணச் சிற்றம்பலத்தே விளங்குகின்றனுவன். அம்மையும் அப்பனுமாகிய இருவகை நிலையினையும், கூடமும் மன்றும் ஆகியுள்ள சிற்றம்பலம் தெரிவிப்பதாம். இங்ஙனம் மணிமன்றினுள் இறைவன் நிருத்தம் புரிதல் நம்மனோரின் பிறவித் துயரம் நீங்குதற் பொருட்டே ஆகும்.

ஆன்மாக்கட்குக் கேவலநிலையும், சகலநிலையும் நோய் போல்வனவாம். அவற்றுள் பிறப்பு எடுத்துவிட்ட நாம், கேவலநிலையினை நீங்கிச் சகலநிலையில் தற்போது உள்ளோம். கேவலநிலையில், நமக்கு உடம்பும் இல்லை. அறிவும் தொழிற்படவில்லை. ஆகவே, உடம்பின்மையால் செயலின்மையும், அறிவு தொழிற்படாமையால் ஞானமின்மையும் கொண்டவராகிச் சூக்குமமான இச்சையொன்றே உடையராகிக் கிடந்தோம். இந்தச் சூக்கும இச்சையினை அறிந்து ஏற்ற வண்ணம் நமக்கு, அறிவு இச்சை செயல்கள் மூன்றும் தொழிற்படும்வண்ணம் பிறப்புக்கள் நம் முதல்வனுலேயே தரப்பட்டுள்ளன. அவன் அப்படிக் கருணை கூர்ந்து தாராவிடில் நாம் சடப்பொருள்போல் ஆணவக் கருவறையில் கிடக்கவேண்டி இருந்திருப்போம், ஆதலால், இங்குக் கூறப்பட்ட நிருத்த நிலையானது நமக்கு

இறைவன் பிறவி வழங்கிய வழக்கினை நினைப்பூட்டுகின்றமை தெரியலாம்.

நாம், மேற்கூறப்பட்ட சகலநிலையினையும் நீங்கி அடையவேண்டுவது சுத்தநிலை எனப்படும். இதனைச் சுத்த அத்துவிதநிலை என்றும் கூறுவர் பெரியோர். "மரம் நட்டவன் தண்ணீர் ஊற்றுவான்" என்ற பழமொழிக்கேற்ப, நமக்கு முதற்கண் பிறப்புக்கான வழி செய்தருளிய இறைவனே நம் ஆணவ வல்லிருள்பற்றியமையும் பிறப்பினைப்போக்கியருளவேண்டியுள்ளான். இந்த நற்செயலைத் தன் பொறுப்பாக இறைவன் ஏற்றுக்கொண்டு அதற்காக ஐந்து தொழில்களை ஆற்றவேண்டியுள்ளான். இங்ஙனம், நமக்காகத்தான் ஐந்தொழிலாற்றும் செயலை - பிறவி வழக்கு அறுக்கும் செயலை - நிகழ்த்தியருளுதலை நாம் காணச் செய்துகொண்டே உள்ள நிலைதான் நிருத்தநிலை எனப்பட்டது. இதனாலேயே, தரிசிக்க முத்திதரும் தலம் என்ற சிறப்புச் சிதம்பரதலத்துக்குக் கூறப்படுகின்றதாகும். நிருத்தம் பற்றிய விரிவான செய்திகளை இதர சாத்திர நூல்கள் விளக்கங்கொண்டு அறியலாகும்.

உலகில், பிறப்போரும் இறப்போரும் எப்போதும் இருந்துகொண்டே இருத்தல்பற்றி, இறைவனும் என்றும் நிருத்தம்புரிந்தவண்ணமாகவே உள்ளான். இதனாலேயே அறுக்க நின்ற நிலை என்றார் ஆசிரியர். பிற ஆசிரியர்களும் இங்ஙனமாய இறைநிலையைக் குறிக்குங்கால், "என்றும் நின்றான் இவன்" எனக் குறிப்பிடலாயினர். ஆதலின், இந்த ஆடல் இன்றேல், உயிர்கட்கு உய்தி இன்றாம். இதனாலேயே ஆசிரியர், முதலில் தில்லைக்கூத்தனை நிலையினைப் போற்றலாயினர்.

ஆகவே இச்சொல் வழுத்துதலும், வாழவைக்குமாறு வேண்டிக்கொள்ளுதலும் என்கின்ற இரண்டுவிதப் பொருளும் பயப்பதாகும். இதனுல், உயிர்கட்காக, முதல்வன் புரிந்தருளும் முதல் உதவியான ஆடுதல் புலப்படுத்தப்பட்டதென்க.

2. 'குன்ருத' என்பது முதல் 'பெரிய வழி போற்றி' என்பது வரையில் ஒரு தொடர்.

இறைபுரி கிருத்தியம்

குன்ருத பல் உயிர் :

உயிர்களின் எண்ணிக்கைக்கு வரம்பில்லை. உயிர், இன்னதுதான் என்பதுபற்றி மதவாதிகட்குள் கருத்து வேறுபாடுகள் பல உள. சித்தாந்திகள், உயிர்கள் பல எனவும், அவைகள் மலமுடைமையின் வேறுபாடு பற்றி மூவகைப்படும் எனவும் கூறுவர். இவ்வகையாய உயிர்களேயன்றி, முத்தி எய்திய உயிர்களும் எண்ணிலாதனவாகும். ஒரு பெருந்தொகையினின்று எடுத்துச் செலவு செய்யச்செய்ய அத்தொகையின் அளவு குன்றும். இதுபோலவே, உயிர்த்தொகையும், முத்தி பெறப்பெற அளவில்குன்றி, இனி உயிரே இல்லை என்னும்படி சூனியமாகிவிடும் என்று நாம் எண்ணுதல் தவருகும். உயிர்த்தொகை என்றும் வற்ரு இயல்பினது. உயிர், சடப்பொருளாயின் குன்றுதலடையும். அஃது அங்ஙனமாயதன்று. ஆதலின், இதன் எண்ணிக்கைக்கு வரம்பென்பதே இல்லை. ஆனதுபற்றியே **குன்ருத** என்ருர். ஒவ்வோர் உயிரும் பல்வகைப் பிறப்புப்பற்றித் தோன்றியவண்ணமாக உள்ளன. ஆதலால் **பல் உயிர்** என்ருர். இங்ஙனம், உயிர்வருக்கம்,

குறைவுபடாமையும், பல்வகைப்படுதலும் உடைமை யின், இறைவனும் என்றும் நின்றே அவற்றை ஈடேற்ற வேண்டியவனாயினன்.

வெவ்வேறு படைத்தும், அவை காத்தும், எல்லை இளைப்பு ஒழிய விட்டுவைத்தும் :

உயிர்கள், அவை கொண்டடையும் அறிவு விளக்க நிலைகளுக்கு ஏற்ப வேறு வேறு இயல்புடையனவாம். மற்றும், அவைபுரி வினைகளும் வெவ்வேறு திறத்தன. இங்ஙனம், மல மறைப்புக்கேற்ற அறிவு வேறுபாடு களும், அறிவு வேறுபாட்டிற்கேற்ற வினை வேறுபாடு களும், சார்ந்ததன்வண்ணமாம் தன்மையும் உயிர்கள் பெற்றிருத்தலின் வெவ்வேறு வகைகளில் அவை களைப் பாகுபடுத்தி நடத்தவேண்டியுள்ளது. ஆதலின் ஆசிரியர் வெவ்வேறு எனலாயினர்.

உயிர்கள், மல மறைப்பைப் பெற்றுள்ளபடியி னால், தாமாக அறியும் தரத்தன ஆகமாட்டா. கருவி, கரணங்களோடு கூடினால் ஓரளவு அறியவல்லனவாம். தாமாகவே, தத்தமக்கு ஏற்ற கருவி கரணங்களை ஆக் கிக்கொள்ளும் திறமை உயிர்கட்கில்லை. அவை சுதந் தரவினமுடையன. ஆதலால், அந்த அந்த உயிர்க்கும் ஏற்றவாறு மாயையினின்றும் கருவி கரணங்களை ஆக் கித்தர வேண்டியுள்ளது. இங்ஙனம், மூல உடலை ஆக்கியுதவியும், பின்னர்ப் பிறவிதோறும் ஏற்ற உட லங்களை ஆக்குவித்தும் இறைவன் உதவவேண்டி யுள்ளான். இவ்வாறு இறைவன் உயிர்கட்கு உதவு நிலையே உயிர்களின் பிறப்புநிலை எனப்படும். இதனையே படைத்தல் தொழில் என்பர். எனவே, படைப்பு

என்பது உயிரைப் படைப்பதன்று; உயிருக்கு வேண்டுவதான உடம்பைப் படைப்பதாகும். கேவலம் எனப்படும் அறியாமையினின்றும் உயிர்களை நீங்கச் செய்தல் இறைவன் உயிர்கட்குப் புரியும் முதற்செயல் ஆகின்றது. இதனால் உயிர்கட்கு உய்திக்குரிய நிலை ஏற்படுகின்றது. இது, சூரியன், தன்னுடைய சந்நிதியில் சூரியகாந்தக்கல்லில் நெருப்புத் தோன்றச்செய்தல் போல்வதாகும். இச்செயல் - படைப்பு - பதியின் அருட்டன்மையால் நிகழ்வதேயாம். இதுவே, உயிரின் மலபரிபாகத்திற்குரிய தொடக்கம் ஆகும்.

அப்பால், உயிருக்குவேண்டிய கருவியாதிகளைத் தந்தளிக்க வேண்டியுள்ளது. தச்சன், அறிவுடையனுயிருந்தாலும், அவனுக்கு மரமும் கருவிகளும் தரப் படாவிடில், அவன் மரச்சாமான் ஏதும் செய்து பயன் பட முடியாமற்போவான். அவ்வாறே, ஆன்மாவுக்கும் சில உதவியாகிய கருவிகள் தேவைப்படுகின்றன. இக்கருவிகளை இறைவனே உயிர்கட்குக் கூட்டி உதவுகின்றான். இதுவே, உயிரானது மாயையோடு கூடி நிற்கும் நிலை எனப்படும். உயிர்கள் தாமாக இத்தத்துவங்களை ஆக்கிக்கொள்ளும் திறத்தின அல்ல. ஆதலால், முதல்வனே, தத்துவ தாத்துவிகங்களை உயிர்கட்கு அளித்து இரட்சிக்கின்றான். இப்படிச் செய்யாவிடில் ஆன்மாக்கட்குப் பகுத்துணர்வு உண்டாகிப் பயனளியாது. இவ்வாறு இறைபுரி உதவியானது, சூரியன் தன் சந்நிதியில் தாமரையை அலரும்படிச் செய்வதுபோலாம்.

இதற்குப் பின்னர், உயிரானது பற்பல வினைகளைச் செய்தலுறுகின்றது. இவ்வினைகளால் உயிர்,

அனுபவத்தை அடைகிறது. அனுபவமே, ஒருவருக்கு உண்மையை உணர்த்தும். ஆதலால், ஆன்மா, தான் புரி வினைகட்கு ஏற்ப மாறிமாறிப் பிறக்கவேண்டியுள் ளது. இங்ஙனம், வினைக்கேற்பச் சாதி, ஆயுள்முதலான சூழ்நிலைகளை உயிர் அடையும்படி உதவுபவனும் முதல் வனே ஆவன். இங்ஙனம் உருமாறிப் பல பிறப்புப் பிறந்தும் செத்தும் உயிரானது ஊசலாடுதலால், அதற்கு அறிவினிடமாக இளைப்பு ஏற்பட்டேதீரும். இங்ஙனம், உயிருக்கு அறிவினிடமாக ஏற்படும் சோர் வினை நீக்கியருளுதற்பொருட்டே இறைவன் அழித்தல் தொழிலைச் செய்கின்றுறுவன். இது, சூரியன், பூமியில் நீரைச் சுவறச்செய்வது போன்றது ஆகும். எனவே உயிரின் இளைப்புத்தொழிற்கான காரியங்களை அவ்வ வற்றின் காரணங்களில் கன்மத்தோடும் ஒடுங்கச் செய்து, பிறகுதான் புனருற்பவம் செய்தருளுகின்றுன் ஈசன். இச்செயலும் இறைவன், தன் அருளுடைமை யால் செய்வதேயாம்.

இவையன்றி, மறைத்தல், அருளல் என்னும் இரு தொழில்களையுங்கூட இறைவன், உயிரினிடமாகச் செய் தருளுகின்றுன். இவ்விரு தொழில்களையும் மேற்கூறப் பட்ட முத்தொழில்களுள் இரண்டில் அடக்கிவிடுவ துண்டு. ஆதலால், ஆசிரியர், இங்கு முத்தொழிலே கூறிக்காட்டியுள்ளார் ஆவர். இங்ஙனம், முத்தொழில் செய்தலால் இறைவன் எவ்வகை விகாரப்பாடும் எய்து வதிலன். இதனை, "தோற்றுவித்தளித்துப் பின்னும் துடைத்தருள் தொழில்கள் மூன்றும் போற்றவே உடையன் ஈசன்" என்றுரைத்துக்காட்டும் சித்தியார் நூல். இங்குப் "போற்றவே" என்று கூறப்படுதல் கொண்டு உயிர்களைக் காத்தற்பொருட்டே இறைவன்

இத்தொழில்களை ஆற்றுகின்றான் என்பது தெரியலாம். இப்படி அநாதியாய் எண்ணிறந்த ஆன்மாக்களும் மோக்ஷம் அடைதற்பொருட்டாக எழுவகையும், நாற் கதியுமான பிறப்புக்களில் அவ்வவற்றின் கன்மத்துக் கான முறையில் செலுத்தி உதவுதல்மாத்திரமன்றிப் பெத்தான்மாக்கட்கு அவ்வப்போதும் புரிந்தருளுகின்ற உதவிகள் இவ்வாறுனவை பலவாம். இங்ஙனம், தொல்லைக் காலமுதல் சூக்குமம், தூலம், அதிசூக்கு மம் என்கிறவகையில் ஐந்தொழில்களையும் உயிர்கட் காக இறைவன் நிகழ்த்தாவிட்டால், ஆன்மாக்கள் உய்வுபெற வழியே இல்லையாகும். ஆதலின், இந்த ஆதி, நடு, அந்தமெனப்படும் தொழில்கள் யாண்டும் உயிர்களின் நன்மைகுறித்து நடைபெற்றுக்கொண்டே இருக்கவேண்டும் என்பதை இங்கு ஆசிரியர், தொல்லை உறும் அந்தம் அடி நடு என்று எண்ண அளவு இறந்து வந்த பெரிய வழி போற்றி எனக் கூறிப் போற்றுவாராயினர். இதுவரை கூறியவற்றால், இறை வன், உயிர்களுடைய நன்மை கருதித் தான் ஆடுவதே யன்றி, அவற்றையும் ஆட்டியுதவுகின்றான் என்பது போதரும். இதனால், உயிர்களை ஆட்டுவித்து மலம் போக்கும் பொறுப்பும் இறைவனே வகித்து உதவுதல் புலப்படுத்தப்பட்டதென்க. இனி, இறைபுரிந்தருளும் மூன்றும்செயல் கூறப்படுதல் காண்போம்.

3. 'முந்துற்ற' என்பது முதல் 'வினைபோற்றி' என்பது வரையில் ஒருதொடர்.

கலாதிஞானக் காட்சி

முந்து உற்ற நெல்லுக்கு உமி தவிடும்......ஆய் :

உயிர்கள் நித்தியமானவை. அப்படியிருக்க அவை ஏன் படைப்புக்கு உட்படுகின்றன ? வாழ்கின்றன ? பின்னர் சங்கரிக்கப்படுகின்றன ? என்ற ஐயம் எழுவது இயல்பே. இங்ஙனம் இவை முத்தொழிற்படுதற்கு இவற்றினிடம் ஏதோ குற்றம் இருந்தே தீரவேண்டும். நோயற்றவனுக்கு மருந்தின் தேவை இல்லை; நோயுற்றவனுக்கு மருந்தின் துணை தேவையே. இப்படியே உயிரானது குற்றம்பற்றி நிற்றலால், அதனை நீக்கிக் கொள்வதற்காக அது மேற்கூறப்பட்ட முத்தொழிற் படவேண்டியுள்ளது.

உயிருக்குச் சம்பந்தம், அநுபந்தம், பிரதிபந்தம் என்கிற மூவகையான குற்றம் உண்டு. இவற்றுள் உயிர்களிடம் அநாதியே கலந்துநின்று, அவற்றின் அறிவு இச்சை செயல்களை ஆணவம் என்னும் மலம் (குற்றம்) தடைசெய்கிறது. ஆதலால், ஆணவம் எனப் படும் சகஜமலமானது பிரதிபந்தம் எனப்படும். இனி, உயிர்கள் புரியும் கன்மங்களும் அவற்றிற்குக் குற்றமாகவே உள்ளன. இக்கன்மமலமானது, உயிர்கள் செல்லும் இடந்தோறும் தாமும் தொடர்ந்து சென்று சுகதுக்கங்களை உயிர்கட்குக்கூட்டுகின்றன. இவ்வாறு தொடர்ந்துசெல்லும் தன்மை கன்மத்திற்கு இருத்தலால் இதனை அநுபந்தம் என்பர். "ஊழ்வினை, தன்னைச் செய்தாரை உருத்துவந்து ஊட்டும்" என்பர் சிலப்பதிகாரத்தும். "மற்றொன்று சூழினும் தான்முந்துறும்" என்பர் வள்ளுவரும். சூழ்தல் = தங்குதல். சுகதுக்கங்களை அனுபவித்தற்கும், அக்கன்மங்களைச் செய்தற்கும் உயிர்கட்குப் பல்வேறுதரப்பட்ட தனு கரணம் முதலியவை வேண்டியுள்ளன. ஆகவே, மாயாமலமென்பது உயிரோடு கூடித் தனுமுதலனவாக நிற்கின்றமையால்

இது சம்பந்தம் எனப்படும். இக்கருத்தினை "பந்தம், போகம், போக நிறுத்தலும் வந்தது மாயை வினை மலத்து" என்று கூறும் ஞானமிர்தநூல்.

இந்த மூன்றுவகை மலங்களையும் உயிர்கள் பெற்றிருத்தலை நமக்கு விளக்குதற்பொருட்டே முளை-உமி - தவிடு என்னும் இவைகொண்ட நெல் உவமை யாகக் கூறப்படுகின்றது. நெல்லுக்கு முளைத்தல் சத்தி யும் தவிடும் உமியும் உள்ளன. இவை, அரிசியின் வடிவை மறைத்து மாற்றுகின்றன. முளைத்தற்சத்தி, முளையைத்தோற்றுவிக்கின்றது. தவிடு, முளைப்பதற்கு உதவிசெய்து நிற்கின்றது. உமியானது, அந்த முளை தோன்றுவதற்கு நிமித்தமாய்ப் பற்றிநிற்கின்றது. இப் படியே, கன்மமலமானது, பொய்த்தன்மைவாய்ந்தவை யான சுக துக்கங்களை உயிர்க்குத் தோற்றுவிக்கின்றது, மாயாமலமானது, அந்த இன்பதுன்பங்கள் தோன்று வதற்கு உதவியாக வேண்டியுள்ள உடல், கரணம் முதலியவற்றைத் தோற்றுவிக்கின்றது, ஆணவ மல மானது, அந்தச் சுகதுக்கங்களை உயிர் நுகருவதற்கேற்ற கருத்தாத்தன்மையைச் செய்து நிற்கின்றது. சுருக்க மாய்ச் சொன்னால், கன்மம், போகம் செய்வதெனவும், மாயை பந்தம்செய்வது எனவும், ஆணவம் போத் திருத்துவம் செய்வது எனவும் கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட உவமானத்தில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை ஒன்றும் உள்ளது. அதாவது, மும்மலங்களும் உயிரைக் கட்டுப்படுத்துத லுக்கும், கட்டின் காரணமாதற்கும்மட்டில் மேற் சொன்ன உவமையானது பொருந்துவதாம் எனத் தெரிதல்வேண்டும். அவ்வாறன்றி, உயிரும் மலங்களும்

கூடிநிற்கும் சம்பந்தத்துக்கு இவ்வுவமை பொருத்தப் படாது. ஏனென்றால், முளைத்தல் சத்தியானது, அரிசியினுள் அடங்கி நின்று பந்தப்படுத்துவதுபோலக் கன்மம் என்கிற மலம் ஆன்மாவினுள் அடங்கி நிற்பதன்று; ஆன்மாவினால் செய்யப்படுவதாகும். தவிடானது, அரிசியைத் தொடர்ந்துநின்று பந்தப்படுத்துவதுபோல, மாயையானது உயிரைத் தொடர்ந்துநின்று பந்தப் படுத்துவதன்று; கூடிநின்று பந்தப்படுத்துவதாகும். உமியானது, அரிசியின் வேறாய்நின்று பந்தப்படுத்துகின்றமைபோன்று, ஆணவமலம் உயிரின் வேறாய் நின்று பந்தம் செய்வதன்று; கலந்து நின்று பந்தம் செய்வதாம், ஆகையால், மேற்கூறப்பட்ட உவமைகளை எந்த அளவுக்கு உவமித்துக்கொள்ளவேண்டும் என்பதையும் நாம் உணர்தல் நன்றாம்.

இதுவரை கூறியவற்றால், சுகதுக்ககாரியங்கட்குக் கன்மமலம் முதற்காரணமாம் என்றும், மாயாமலம் துணைக்காரணமாம் என்றும், ஆணவமலம் நிமித்த காரணமாம் என்றும் நாம் தெரியலாம். மற்றும், இவ்வுவமையின் விரிவுகளைப் பிற சாத்திர நூல்களால் நன்கு அறிதல் கூடுமாதலின். இவ்வளவோடு இதன் விரிவு முடிக்கப்படுகின்றது. இந்த விரிவுகட்கெல்லாம் இடம் தந்து நிற்பன முந்து என்றும் உற்ற என்றும் ஆசிரியர் கூறியுள்ள சொற்களாகும். 'உமிதவிடு'என்று கூறியுள்ளமைகொண்டு 'முளை' என்பது நாம் உப லக்ஷணத்தால் கூட்டி உரைத்துக்கொள்ளலாகும். இவற்றால், நித்தமான உயிரானது, தனுகரண முதலனவற்றைப் பொருந்துதற்கும், அவற்றில் நிலைத்திருத்தற்கும், அவற்றில்நின்று மாறுதற்கும் முத்தொழில் தேவைப்படுகின்றதென நாம் தெரிதல் கூடும். மேலும்,

ஆணவம் முதலியவை உயிரின் குணமல்ல, குற்றம் என்பதும், இவற்ருல் இறைவனுணைப்படி உயிரானது கொள்ளிவட்டமும் காற்ருடியும் போலப் பலமுறை சுழன்று சுழன்று சுவர்க்கம், பூமி, நரகங்களிலே போக்குவரத்துப்புரியும் என்பதும் தெரியப்படும்.

நீடு செம்பில் காளிதமும் :

உயிர் அறிவுடையபொருளாகும். அப்படியிருந்தும் ஏன் அறியாமைவயப்பட்டிருக்கிறதென்ருல், அதன் அறிவை ஆணவம் எனப்படும்குற்றம்(மலம்)மறைத்து நிற்கிறதனுல் ஆம். தாமிரம் என்னும் உலோகமானது செம்பொன்தன்மை உடையத்து என்ருலும், அதனேடு களிம்பு என்கிற குற்றம் கலந்திருக்கிறது. அந்தக் களிம்பை நீக்கிவிட்டால், தாமிரம் தங்கமாகிவிடும். தாமிரத்தை எத்தனைதடவைகள், புளி முதலியவற்ருல் தேய்த்துக்கழுவிச் சுத்தம் செய்தாலும் அதன் களிம்பு நீங்குவதில்லை. இரசவாதம் தெரிந்தவன், தாமிரத்தின் ஒவ்வோர் அணுவிலும் சமமாகக்கலந்துள்ள களிம்பு அணுவைப்பிரித்து நீக்கிவிடுவானுயின் பிறகு செம்பு, செம்பொன்னுக மாறி மதிப்பிலும் நயத்திலும் மேம் பட்டுவிடுகிறது. தாமிரத்துக்குக் களிம்பு எப்போது உண்டாயிற்று என்ருல், தாமிரம் உண்டாம்போதே களிம்பும் உடன்தோன்றியதாகும். இங்ஙனம், இயற் கைச் சேர்க்கையாயிருத்தலால்தான், களிம்பை வேறு வகைக்கிரியைகளால் நீக்கிச் செம்பைச் சுத்தப்படுத்த முடிவதில்லை. இவ்வாறு, காளிதம், செம்பில் அநாதி முதலே கலந்திருப்பதனைக் குறிப்பிடுதற்கே இங்கு ஆசிரியர் நீடு என்ற சொல்லைச் சேர்த்துள்ளாராவர். ஒரேபூமியினிடமிருந்து வெட்டி எடுக்கப்படினும்

இரத்தினம் மாசற விளங்குகிறது. ஆனால், செம்பு, மாசோடு கூடியே உள்ளது. இஃது இவைகளுடைய இயல்பு ஆகும். இதற்குக் காரணம் ஆராயப்படத் தேவையில்லையாம்.

இனி, இந்த உவமையைக்கொண்டு, உயிரின் சகஜ மாக உள்ள ஆணவமலத்தின் இயல்பினைப்பார்ப்போம். ஆணவமலம் என்பது ஆன்மாக்களுடன் கூடவே தோன்றியுள்ளதான குற்றம் ஆகும். இது ஆன்மா வின் குணமன்று. இக்குற்றம், அளவில்லாத எல்லா உயிர்களுடனும் கூடி இருப்பதாகும். ஆணவத்தால் மறைக்கப்படும் உயிர்கள் பல ஆம். ஆனால், ஆணவம் பலவாதல் இல்லை; ஒன்றேயாம். இருள் ஒன்றாயிருந்தே பல கண்களுடன் கூடி மறைப்பதுபோலவே, ஆண வம், ஒன்றாயிருந்தே பல உயிர்களுடன் கலந்து நின்று அளவில்லாத சத்திகளை உடையதாய் ஆன்மாவின் வியாபக அறிவை மறைத்தல் செய்கின்றது. இம்மல மானது, ஆன்மா கேவல அவத்தையில் இருக்கும் போது, அறிவு தொழில்களை உயிர்க்கு நிகழவொட் டாமல் தன் சத்தியால் மறைக்கின்றது. ஆன்மா, பிறப்பெடுத்துத் தனு கரண புவன போகங்களுடன் கூடிச் சிறிது அறிவுவிளக்கம் பெற்றிருக்கும்போது, மலமானது தனது கீழ்ச்செலுத்தும் சத்தியால் மோக முதலவற்றை உயிர்க்கு விளைத்துப் போக அனுபவத் துக்கு ஏற்ற கருத்தாத் தன்மையைச் செய்துநிற்கும். ஆகவே, ஆணவமலமானது, உயிரினுக்குக் கேவல சகல நிலைகளில் அஞ்ஞானத்தை உண்டுபண்ணும் காரணமாக உள்ளமை தெரியலாகும்.

ஆணவமலமும் வியாபகமுள்ளதே. ஆனால் இதன் வியாபகம், உயிரின் வியாபகத்துக்கு அதிகப்படாமலும்

குறைவுபடாமலும் சமமாக உள்ளது. ஆதலால்தான், சமபலமுள்ள இதனை, உயிரானது தனது வல்லமை கொண்டு போக்கிக்கொள்ள முடிவதில்லை. எப்படிக் களிம்பை இரசவாதியின் துணைகொண்டு நீக்க முடிகிறதோ அப்படியே, உயிரானது, மலத்தைக் குருவருளால் நீக்கிக்கொள்ள வல்லமை உடையதாகும். ஆணவ மலத்தைப்பற்றிச் சித்தாந்தியர் கருத்து ஈது ஆகும். ஆனால், பிறமதத்தார் வேறுவேறு விதமாகக் கூறுவர். அவைகளைப் பிறநூல்களின் துணைகொண்டு அறிதல் நன்றாம், இங்கு விரிப்பின் கட்டுரை பெருகும். இந்த ஆணவமலத்தினியல்பினை, "ஒன்றதாய் அநேக சத்தி உடையதாய்" என்னும் சித்தியார் சுபக்கச் செய்யுளால் அறிதல் கூடும். இச் செய்யுளிலும் "செம்பினிற்களிம்பு ஏய்ந்து என்றும் அஞ்ஞானம் காட்டும் ஆணவம்" என்று கூறப்பட்டிருத்தலை இவ்வாசிரியர் கூற்றோடு ஒப்பிட்டுணரலாம். இதுகாறும் கூறியவற்றால் ஆணவம், ஆன்மாவை மாற்றும் இயற்கையதன்றெனவும், ஆன்ம அறிவையே மறைக்குந்தன்மையது என்றும் நாம் தெரிதல் நன்றாம்.

அப்படியானால், ஆன்மாக்கள் யாவும், இறைவனுடைய வியாபகத்திலே அடங்கிக்கிடக்கும்போது ஆணவமலம் எப்படி ஆன்மாக்களிடம் இயல்பிலே பொருந்தி இருப்பதாயிற்று என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டிவரும். இந்த ஐயப்பாட்டினைத் தெளிவுறுத்துவது அடுத்தவரி ஆகும்.

தொல்லை கடல் தோன்ற தோன்று உவரும் :

கடல் என்று சொன்னால், கடற்பரப்புள்ள ஆகாய வெளியும், கடலினுள்ளுள்ள நீர்ப்பரப்பும் கூடியதோர்

இடத்தைக் குறிக்கும் என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே, கடல் என்பது, கடல்வெளி, கடல்நீர், அந்நீரிலுள்ள உப்பு என்கிற மூன்றும் கூடியதாகும். இவற்றுள், கடல்நீரில் சரிக்குச் சரியாக உவர்ப்புக் கலந்துள்ளது. இதனால், நீரின் வியாப்பியத்துக்கு ஏற்றபடியான வியாப்தியை உவர்ப்பு பெற்றுள்ளதெனப் புலப்படுகிறது. ஆனால், இந்த உவர்ப்பு, கடல்வெளி எனப்படும் ஆகாசத்தை (இடத்தை), நீரைப் பற்றியிருப்பதுபோலப் பற்றிக்கொண்டிருக்கவில்லை; பற்றிக்கொள்ளவும் முடியாது. ஆகவே, பற்றிக்கொள்ளும் இயல்புடையதாகிய நீரையே உப்புச் செறிந்து நிற்கிறது. தன்னைப்பற்றிக்கொள்ளும் இயல்பு அற்றதாகிய வானவெளியை உவர்ப்புப் பற்றிக்கொள்வதில்லை. இவ்விதமாக உவர்ப்பு, நீரைப் பற்றிக்கொண்டு இடத்தைப் பற்றுமலிருப்பது அநாதிமுதலே நிகழும் செயலாம். ஆனதுபற்றியே ஆசிரியர் இங்குத் தொல்லை என்ற சொல்லைப் பெய்துள்ளாராவர். தோன்றத்தோன்று என்பதனால் சகஜத்தன்மை புலப்படுத்தப்பட்டுள்ளதென்னலாம்.

இவ்வாறே, இறையின் வியாபகம், ஆன்மாவின் வியாபகம், ஆணவத்தின் வியாபகம், இம்மூன்றையும் கருதிப்பார்ப்போமாயின், இறைவியாபகமே கடல்வெளிபோன்று முதன்மையும், ஆதாரமும், பெரிதுமாயிருப்பதாகும். இதன் உட்பட்டு வியாப்பியமாக இருப்பதே ஆன்மவியாபகம். ஆகவே, இத்தன்மையானது கடலுள் நீரின்பரப்பு இருப்பதை நிகர்க்கும். அந்நீரைப்பற்றி உப்பு வியாபித்திருப்பதைப்போல்வது ஆணவமல வியாபகம். ஆகவே, ஆணவம் வியாப்தியாக இருப்பதாகும். இதனால், உயிர் உள்ளபோதே

தானும் உளதாய், முதல்வனைப் பற்றமுடியாத இயல்பினதாய், உயிர்களையே பற்றி வியாத்தியாயிருப்பதாய் உள்ள தன்மையது உயிர்க்குற்றம் எனப்படும் ஆணவ மலமாம்.

எல்லாம் ஒருபுடை ஒப்பு ஆய் :

இப்படி மேலே காட்டப்பட்ட ஒவ்வோர் உவமையும் ஆணவமலத்தின் அநாதிபந்தத்தன்மை - ஆன்ம அறிவை மறைக்கும் தன்மை - ஆன்மாக்களையே பற்றி நிற்கும் தன்மை - என்கின்ற ஒவ்வோர் இயல்புக்கும் பொருந்துவதாக உள்ளதென நாம் தெரிதல்வேண்டும் என்பதற்காகவே ஒருபுடை ஒப்பு ஆய் என்றுள்ளார் ஆசிரியர்.

தான் உள்ள ஆறு உண்டாய் அருவமாய் எ உயிரும் ஆர்த்து :

இறைவன் அநாதியானவன். இந்தத் தன்மையில் உயிர்களும், மலமும் உள்ளன. ஆதலால், இவற்றின் தோற்றத்துக்கு ஆதி கூறுதல் ஒண்ணுதென்க. மற்றும், இவ்வாணவமலம், ஆன்மாவுடன் அநாதி சையோகம் உடையதாயிருப்பதோடு, தன்னை உயிர்க்குக் காட்டாத இயல்பும் உடையதாகும். அதாவது, எல்லோருடைய கண்களையும் மறைக்கின்ற இருட்டானது, தானிருத்தலைக் கண்ணுக்குத் தெரிவிக்கிறது; ஆனால் ஆணவமானது அறிவினை மறைக்கும் இயல்புடைய தன்னை ஆன்மா அறியும்படி தெரிவதன்றும். மேலும், உயிர் வருக்கங்களில் ஒருபகுதியினரைப்பற்றியும், பிறிதொரு பகுதியினரைப் பற்றுமலும் விடுவதன்று ஆணவம். விஞ்ஞானகலர் - பிரளயாகலர் - சகலர் எனப்படும்

எல்லாவிதமான உயிர்களையும் இந்த மலம் பற்றிக் கட்டுப்படுத்துகின்றது. அதாவது, பக்குவர் - அபக் குவர் - உத்தமர் - மத்திமர் - அதமர் - அதிகாரிகள் - தேவர் - மானிடர் ஆகிய யாவரையும் ஆணவமலம் பிணிக்கும் ஆற்றலுடையதாகும் என்பதாம்.

உரு உடைய மாமணியை அடக்கும் மாநாகம் - வன்னி தனைத் தான் அடக்கும் காட்ட தருதியும்போல் - ஞானத் தின் கண்ணை மறைத்த கடிய தொழில் ஆணவத்தால் :

இனி, ஆணவமலமானது ஆன்மாவின் அறிவு வியாபகத்தை எப்படி மறைத்துநிற்கின்றதென்பதை மேலுள்ள வரிகளால் ஆசிரியர் நமக்குப் புலப்படுத்து கின்றாராவர். நல்ல நிறமும் உயர்ந்த மதிப்பும் உள்ள இரத்தினத்தை உடைய நாகமானது அதனை வெளிக் காணுவண்ணம் தன்னுடைய விஷத்தைக்கொண்ட வாய்க்குள் அடக்கி மறைக்கின்றது. இதனால், அரவின் பருமணி தனதுண்மை புலப்படாதுள்ளது. மேலும் பச்சையான கட்டையானது, காய்ந்து கடையப்படு கையில் தன்னிடமிருந்து தோன்றக்கூடிய நெருப்பை வெளித்தெரியவொட்டாமல் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறே, ஆணவமலமானது ஆன்மாவின் ஞானத்தைத் தொழிற்பட ஒட்டாமல் கேவலநிலையிலும், சகலநிலையிலும் மறைத்துநிற்கின்ற தாகும். இங்ஙனம் இருவகை நிலையிலும் முறையே அறிவு இருத்தல் அடியோடு புலப்படாதவிதமாகவும், அறிவு கிழறைபோகும் விதமாகவும் ஆணவம் புரி கின்ற செயல் மிகவும் கொடுமையான தொழிலாதலால் **கடிய தொழில்** என்றார். இதுவரை கூறியவற்றால், சிவத்துடன் அநாதி தாதான்மியமாக உள்ள ஆன்மா,

மலத்துடன் அநாதிகேவல அநாதி சையோகங்களை உடையதாய் அறிவும் தொழிலுமற்றுச் சடம்போலக் கிடக்கும் நிலைமை உணர்த்தப்பட்டதென்க.

எண்ணும் செயல் மாண்ட எவ்வுயிர்க்கும் - உள்நாடி :

மேற்கூறியுள்ளபடி ஆன்மாவானது எந்தவிதத்திலும் தானுக ஈடேறமுடியாத விதமாய் மூலகன்மம் எனப்படும் இச்சை ஒன்றே சூக்குமமாகக்கொண்டதாய், ஆனுல் அறிவும் செயலும் தொழிற்பட இயலாததாய் இருக்கும் இந்தப் பரிதாபமான நிலையை எவர் அறிந்து உதவக்கூடும்? குருடனுக்குக் குருடன் வழிகாட்ட ஒருபோதும் இயலாமைபோன்றே, ஓரான்மாவுக்கு அந்நிலையிலுள்ள பிறிதோரான்மா உதவிபுரிதல் இயலாதாம். ஆதலினுல்தான், இருட்டை, இரவி அதற்குப் பகையாமியல்பினதாயிருந்து நீக்குதல் போலவே, மலவைரியாகிய முதல்வன் ஒருவனே ஆன்மாக்களின் உய்திக்கான வழிவகைகளைச் செய்து உதவ வல்லவனுகிக் கருணைபுரிகின்றுன்.

அங்ஙனம், புரியத்தொடங்குகையில் ஆன்மாக்களின் மூலகன்ம இச்சை எவ்வெவ்விதம் உள்ளதென இறைவன் அவ்வவ்வான்மாக்களின் உள்ளும் உள்ளவனுதலாலும், பேரறிவினனுதலாலும் ஆராய்ந்து அவ்விச்சைகட்கேற்ப அருள்புரிகின்றுனுவன். ஆதலின், ஆன்மாக்கட்கு அவற்றின் இச்சையே - அவாவே - பிறப்புக்கு வித்தாயுள்ளதெனவும், அப்பிறப்புவகைகளை முத்தியுறுமளவும் மாறி மாறி ஏற்கவல்ல மூல நுண்ணுடல் முதற்கண் தரப்படுகின்றதெனவும் நாம் தெள்ளிதின் உணர்தல் நன்றும். இதுபற்றியே. "அவா

என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் - தவாப் பிறப்பீனும் வித்து'' எனப்பட்டது திருக்குறள் நூலில் என்க. இங்குச் செயல்மாண்ட என்பதனால் நமது சுதந்தரஈனமும், 'உள்நாடி' என்பதனால் இறைபுரி கருணையும் புலப்படுத்தப்பட்டுள்ளமை காணப்படும்.

கண்புலனால் காணார்தம் கை கொடுத்த கோலே போல்:

குருடராக இருப்பவர்க்குக் கை கால் முதலான உறுப்புக்கள் ஊனமற்றிருப்பதால், அங்கும் இங்கும் செல்லவேண்டும் என்கிற இச்சை இருந்தேதீருகிறது. அதனால், அவர்தம் விருப்பத்தை அறிந்தவரும் அக்குருடர்பால் இரக்கமுடையோரும், அவர்தம் விருப்பத்திற்கு இணங்க ஒரு கோலைக்கொடுத்துக் கூட்டிக் கொண்டுபோய் வேண்டுமிடங்களில் விட்டு உதவுவர். அவர்களும் கோலே கண்ணாகக்கொண்டு தட்டித் தட்டி வழி அறிந்து நடப்பர்.

பொற்பு உடைய மாயை புணர்ப்பின்கண் - முன்பால் தனு கரணமும் புவனமும் தந்து:

ஞானம் ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடக்கும் ஆன்மாக்களை அவற்றின் விருப்பம் அறிந்து, அவ்விருப்பினை அவை நிறைவேற்றிக்கொள்ளுதற்கு மாயேயமாகிய எந்த எந்த விதமான தனு கரண புவன போகங்களைத் தரவேண்டுமோ அவற்றை அவைகட்கு முதல்வன் உண்டாக்கித்தந்து இச்சித்தவண்ணம் அவற்றை அவைகளுடன் கூட்டி வினைப்போகங்களைப் புசிக்குமாறு உதவுகின்றனன். இதனால், புறத்தே கண்ணில்லாமை நிகர்ப்பது அகத்தே ஞானமின்மை என்பது உணர்த்தப்பட்டது. குருடருக்கு

உதவிபுரிவோர் அவர்பால் பரிவுகொண்டோரே ஆவர். அவ்வாறே நம்பால் பரிவுகொண்டே இறைவன் உதவி புரிகின்றுனுவன். கண்புலனுல் என்றமையால் தர உறுப்புக்கள் உண்மையும், இச்சை இருப்பதும் நாம் தெரிதல் கூடும். கோலேபோல் என்றமையால், கோல் உதவுமளவுக்கே, தனு கரணுதிகள் உதவுவன என நாம் உணரலாகும். கண் தெரிந்துவிட்டால், குருடருக்குக் கோல் தேவைப்படாது. இங்ஙனமே, ஞானப் பிராப்தி இறையருளால் நாம் பெற்றுவிட்டால், தனு கரணுதிகளின் தேவை நமக்கு இராது என்பது தெரியப்படும்.

அவற்ருல் மனம் முதலால் வந்த விகாரத்தால் :

அப்படித் தனு கரணுதிகளைத் தம் இச்சையின்படி இறைவனுல் உதவிக் கூட்டிச் செலுத்தப்படும் ஆன்மாக்கள் ஏன் ஞானமடைதற்கண் முனேயாமல் அல்லற் படுகின்றன என்ருல், ஆணவமலத்தின் மறைப்பினுல், பிறப்பு எடுத்த பிறகு மறதி ஏற்படுகிறது. இதனுல் தலைவனையும் அவன்புரி உதவிகளையும் ஆன்மாக்கள் மறந்துவிடுகின்றன. தம்மையே பெரிதாக மதிக்கும் சித்த விகார விபரீத ஞானம் தலைப்படுகின்றது. அவ் விபரீத ஞானத்தினுல் உண்மை தெரியாமல் ஆன்மாக்கள் உழலுகின்றன. இந்த நிலையிலும் இறைவனுதவி யானது, ஆன்மாக்களின் இச்சைவழி நின்று பயனளிக் கின்றதென்பதை நாம் தெரிதல் வேண்டும். இதனுல் தான், ஆன்மாக்களின் உழலுதலுக்கு இறைவன் காரணமாகான் ; ஆன்மாக்களே காரணமாகின்றன என்பர் பெரியோர். "நின்னது குற்றம் உளதோ" என்று தொடங்கிப் பட்டினத்தடிகள் இச்செய்தியை

விரிவாகக் கூறிக்காட்டுதல் இங்கு நாம் படித்துணர்தல் நன்றும். ஆகவே. மனத்தை மோகம் முதலாகிய விகார நெறிப்படுத்தும் விபரீத ஞானத்தால் ஆன்மாக்கட்கு இன்பதுன்பங்களின் நுகர்ச்சி விளைகின்றது என்பது தெளிவாம்.

வினை இரண்டும் காட்டி :

உயிர்களோடு முதல்வன் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்பன். அவ்வாறு நின்று, உயிர்களுக்கு வினைப்பயனை ஊட்டுவதற்குத் துணையாவன். "அவையே தானே" என்னும் இரண்டாம் சூத்திரம் இச்செய்தி யுணர்த்துவதாகும். இச்சூத்திரத்தால் நாம், மூவகையாய் நிற்றற்கு உரிமை பூண்ட முதல்வன், உயிர்களுக்கு முன் பிறவிகளில் சம்பாதிக்கப்பட்டு மாயையில் கட்டுப்பட்டுக் கிடந்த புண்ணிய பாவங்களின் பலனாகிய சுகதுக்கங்கள் ஆணையின் (சிற்சத்தியால்) வரச்செய்வன். இருவினை என்பது மாயையில் கட்டுப்பட்டுப் புண்ணியமெனவும் பாவமெனவும் பெயருடையதாய்ச் சூக்குமரூபமாய் இருக்கும் சஞ்சிதமாம். மாயையே, வினை கட்டுப்பட்டிருத்தற்கு ஆதாரமாகும். வித்தானது, மண்ணினிடத்தே கட்டுப்பட்டு, விதைத்தவன் தண்ணீர் பாய்ச்சினதும், பயன்தரலாகிறது. வீடு, கட்டிமுடிந்ததும் குடிபுகுதல் நிகழ்வது போல, வினை பக்குவப்பட்டுப் பிராரத்தமானதும், உயிரானது அதனைத் துய்க்கலுறுகின்றது. இங்ஙனம், தண்ணீரால் விதையானது பக்குவப்படுதல்போன்று, இறைவன் ஆணையால் வினை பக்குவப்படுத்தப்படுகின்றது. ஆகவே, சுதந்தரம் இல்லாத உயிருக்கு, மேற்பாடான சுதந்தரமுடைய இறைவனே தன் ஆணையால்

வினைப்பயனைக் காட்டி உதவுகின்றான் என்பது கருத்தாம். "ஐயனே! அழகிது உன்சொல் இந்திரசாலம் ஆய்த்தே" என்று இச்செய்தியைச் சித்தியார் நூல் செப்பிக்காட்டும். இறைவன், இங்ஙனம் புதுச் சிருட்டியைச் செய்யும் தனது சத்தியை இருவினையின் இடமாகவைத்து நடாத்துவதை, அரசன் பாசறையில் காவல்வைக்கும் தண்டத்தொழிலை உரியதோர் அதிகாரியிடம் வைத்துச் செய்வதை நிகர்க்கும் என்பர்.

அதனால் பிறப்பு ஆக்கிக் கைக்கொண்டும் :

உயிர்கள், தாம் இச்சித்ததை அனுபவித்தால்தான் ஆசையானது அறப்பெறும். இச்சையால் பலவிதத் தொழில்களைப் புரிந்து உயிர்கள் வினைகளை ஆக்கிக் கொள்ளுகின்றன. இந்த வினைப்பலன்களை உயிர்கள் அநுபவிக்கவேண்டும். அதற்கு ஏற்ற தனு முதலியன வேண்டும். இவற்றை உயிர்கள் தாமாக ஆக்கிக் கொள்ளவல்லன அல்ல. ஆகவே, இறைவன் ஆணையால் உயிர்கட்கு வினைத்துய்ப்புக்கேற்றபடி பிறப்புக்களை ஆக்கி உதவுகின்றானவன். பிறப்பினை அடைந்த பின்னும் உயிர்கள் புதுப்புதுச் செயல்களை நிகழ்த்துவதால் ஆகாமியமாம் புதிய வினைகளையும் புரிகின்றன. இவற்றையும், சஞ்சிதத்தோடு அடக்கிப் பக்குவப்படுத்தவேண்டியுள்ளது. ஆதலின், இறை புரி உதவிகளை, ஆக்கி - கொண்டு என இரண்டு வகைகளால் இங்கு ஆசிரியர் இசைக்கலுற்றாராவர்.

மீட்டு அறிவு காட்டும் வினை போற்றி :

உயிர்கள் வினைகளைச் செய்கின்றனவே யன்றி அவற்றைத் தொடர்ச்சியாகத் தம்முடைய நினைவில்

வைத்துக்கொள்ளுவதில்லை. என்றாலும் சூக்குமமான தொரு தொடர்பு இருந்துகொண்டே உள்ளது. இத் தொடர்புதான் ஊழ் எனப்பட்டுப் பிறப்புத்தோறும் பயனைத் தருகின்றது. ஆகவே, திரும்பவும் வினைப் போகங்களைப் புசிப்பதற்கும் இறைவன் துணை தேவை யாகிறது. கலாதி ஞானங்களைக் காட்டி இறைவன் இவ்விதம் உதவிபுரியாவிடில் நியதியாக வினைப்பயனை உயிர்கள் அநுபவிக்கமுடியாத குழப்பம் ஏற்பட்டு உய்திபெறுதற்கு - இருவினை ஒப்பு முதலிய பக்குவம் பெற்றிடுதற்கு - வாய்ப்பே இல்லாமல் போய்விடும். ஆகவே உயிர்களுக்கு அறிவு காட்டும் வினையை இறைவன் புரிவதும் ஒருபேருதவியாகும். ஆதலால், இறைவனுடைய இவ்வகைப் பரம உபகாரம் போற் றப்படவேண்டுவதாயிற்று. ஆதலின் வினை போற்றி எனலுற்றார் ஆசிரியர். எனவே, இந்த மூன்றும் போற்றிப் பகுதியில், இறைவன் உயிர்கட்கு வினைத் துய்ப்புக்கான உதவி புரிதல் புகழப்பட்டிருத்தல் காணலாம். இதுவரையில், இறைவன் நமக்காக ஆடியும், நம்மை ஆட்டியும், நமக்கு வினை ஊட்டியும் உதவிபுரிதல் விளம்பப்பட்டது என்க.

4. 'நாட்டுகின்ற' என்பது முதல் 'வல்லபமேபோற்றி' என்பது வரையில் ஒருதொடர்.

இறைவன், நமக்குப் பிறப்பு அருளுதல்

நாட்டுகின்ற எப்பிறப்பும் முன் செய் இருவினையால் நிச்சயித்து :

இவ்வுலகத்திலே, மரத்திலிருந்து வித்தும், வித்தி லிருந்து மரமும் மாறி மாறி உண்டாவதை நாம்

பார்க்கிறோம். ஆகவே, வித்தும் மரமும் ஒன்றுக்கு ஒன்று காரணகாரியமாயிருப்பவை என்று அறியலாம். என்றாலும், முதலில் வித்திலிருந்து உண்டாகாத மரமோ, அல்லது மரத்திலிருந்து உண்டாகாத வித்தோ உண்டாக்கப்பட்டிருக்கவேண்டும். ஆதலால், அவ்விரண்டில் ஒன்றை இறைவன் முதலில் உண்டாக்கியே தீரவேண்டியுள்ளது. நம் நாட்டுப் பேரறிவாளராகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள், "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்று திருவாசகமிட்டிருப்பதால் இறைவனே முதற்கண் மரத்தினைக் காரணமாகப் படைத்திருக்கவேண்டுமெனத் தெரிகின்றது.

இவ்வாறே, கேவலநிலையில் அறிவு தொழிற்படாது கிடந்த ஆன்மாவிற்கு இறைவன், முதல்முதலாகக் குருடனுக்குக் கோல் கொடுப்பது போல, சூக்கும தேகத்தைத் தன் கருணையினால் தருகின்றானவன். இந்தச் சூக்கும உடல், வினை காரணமாக வந்தது அன்று; அறியாமையால் ஆன்மா வருந்துவது கண்டு இறைவன் இரக்கத்தாலளித்ததாகும். இந்தச் சூக்கும உடம்பு, பிறப்புத்தோறும் உள்ளீடாக நின்று முத்தி அடையும் வரையில் இருந்து பிறகு நீங்கும். இது, எவ்வளவு பிறப்புக்களை உயிர் எடுத்தாலும் ஒன்றாகவே இருக்கும் தன்மையதாகும். அன்றியும், எல்லா உயிர்கட்கும் ஒரேதன்மை உடையதாகவும் இருப்பதாகும். இந்தச் சூக்கும உடம்பிலிருந்து தூலதேகம் உண்டாகிறது. இத்தூல உடம்பால் வினை விளைகிறது. உயிர்களின் அறிவில் பலதரப்பாடு இருத்தலாலும், உயிர்கள் வினைகளைப் பலவிதங்களில் ஆற்றுதலாலும், தூலதேகமும், வினைகளும், வினைகளுக்கேற்பத் தூலதேகங்களும் மாறி மாறி வருகின்றன. எனவே, முதலில்

சூக்கும உடம்பை அருளியும், அதன் பின்னர், முத்தி எய்துமளவும் உயிர்புரி வினைகட்குத் தக்கவாறு பிறப்புகள் தாறும் உடம்புகளை மாற்றி மாற்றி உதவியும் இறைவன் தன் ஆணையால் நாட்டுகின்றான் ஆவன். இங்ஙனம், முதல் முதல் ஒரு சூக்கும உடம்பு ஏற்படுதலை நாட்டுகின்ற என்ற சொல் காட்டவல்லதாம். அப்பால், உயிர்களின் அறிவுத்தரங்கட்கு ஏற்பத் தூல உடம்பு ஏற்படுதலையும், அதன் பின்னர் வினைக்கு ஏற்றபடி பிறப்பு மாறிமாறி வருதலையும் நிச்சயித்து என்ற சொல் குறிப்பதாகும்.

வினையை, உயிர் செய்கிறது. அவ்வினை நிகழ்வதற்கு ஏழு துணைகள் உள்ளன. அவை, உடல் - கரணம் - காலம் - செயப்படுபொருள் - இருவிதநியதி - செயல் என்பனவாம். இச்செய்தி, "வினையே, செய்வது செயப்படுபொருளே - நிலனே காலம் கருவி என்றா - இன்னதற்கு இதுபயனாக என்னும் - அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ - ஆயெட்டென்ப தொழில் முதல் நிலையே" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தாலும் உணர்த்தப்படுவதாகும். ஆகவே, உயிர் சிற்றறிவுடைமையாலும், ஏனை ஏழு காரகங்களும் சடமாதலாலும், இறைவனே கருணையால் உயிர்கட்கு ஏற்றவகைகளிலெல்லாம் எண்ணற்ற பிறப்புக்களைத் தன் வல்லமை கொண்டு தந்தை - தாய் - போகம் - கர்ப்பம் - விந்துவளர்ச்சி - உதரத்தீ - பசிக்குணவு - காயக் கருக்குழியில் காத்திருத்தல் - அவயவங்களை ஏற்றவண்ணம் அமைத்தல் - உணர்வளித்தல் - தலைகீழாக்கித் தள்ளுதல் - வழிபெரிதாக்கல் - உயிர் துன்படையாதிருக்கச்செய்தல் - உலகில் பிறக்கச்செய்தல் - முதலிய பற்பல வகைகளில் செய்துதவுகின்றானவன்.

"அறுகு நுனி" என்னும் திருப்புகழ்ப் பாடல் இங்குப் படித்து ஒப்பிடுதல் உவகைதரும். இதன்விவரங்களை ஆசிரியர், பொற்புடைய தந்தைதாய் ... பொய்யாத வல்லபமே என்ற வரிகளால் தெரிவித்துள்ளாராவர். இப்பகுதியினை விவரித்தல் தேவையில்லை ஆதலால், தாமே விவரங்கொள்ளல் நேரிதாகும்.

இங்ஙனம், இறைவன், உயிர்கள் ஏமாற்றம் அடையாமலும், தவறுபாடு அடையாமலும் செய்து உதவுதலின் பொய்யாத என்றூர். இவ்வண்ணம் புரிந் தருளும் பேராற்றல் உயிர்கட்கிலது; இறைவனுக்கே உளது; ஆதலால், வல்லபமேபோற்றி என்று போற்று தலுற்றூர் ஆசிரியர். இந்நான்காம் பகுதியால், நூலாசிரி யர், நமக்கு இறைவன், உயிர்க்குயிராயிருந்து சூக்கும உடல் அளித்தருளுதலிலிருந்து பிறப்புக்களை மாற்றி மாற்றி அளித்தருளுதல்வரை ஆற்றி உதவும் வல்லபம் பாராட்டப்பட்டுள்ளமை காணலாம். இவ்வல்லபத்தை நாம் சிந்தனை செய்தல் அறம்பயக்க வல்லதாம். சிவ வல்லபம் நம்மைக்காத்தருளுவதாக!

5. 'அம் மாயைக்கால்' என்பது முதல் 'நெறிபோற்றி' என்பது வரையில் ஒருதொடர்.

தாய்ப்பாசம் விளைத்தல்

அ மாயைக்கால் தான் மறைப்ப :

ஒரு குடியானவன் வாழைத்தோட்டம் ஒன்றை ஆக்கி வாழைக்கன்றுகளை நட்டுத் தண்ணீர் முதலான வசதிகள் யாவும் தந்து வளர்க்கலானுன். கன்றுகள்

கொழுகொழுவெனக் குருத்துவிட்டு ஓங்கி வளரலுற்றன. அப்போது அத்தோட்டக்காரன், இந்தக் கன்றுகள் மரமானதும் வளமான காய்களை ஈனும்; அவற்றை விற்று நல்லபயன் அடையலாம் என எண்ணிக் காவலும் ஆவலும் புரிந்துவந்தான். தோட்டக்காரன் எண்ணம் நல்லதுதான். கன்றுகளின் வளர்ச்சியிலும் ஒன்றும் குறைவில்லை. வாழைகளெல்லாம் தொண்டைப்பூவாக இருக்கும்போது ஓரிரவில் திடீரென்று பெருமழையும் சூறைக்காற்றும் அடிக்கலுற்றுத் தோட்டம் பாழடையலுற்றது. குடியானவன் எண்ணத்தில் இடிவிழுந்து விட்டது. வாழைகள் காற்றால் சாயும்போது. தோட்டக்காரனுடைய எண்ணமும் சாய்ந்தொழிந்து போயிற்று. ஆகவே, சண்டமாருதம், வாழையைச் சாய்க்க வந்ததன்று; கொல்லைக்காரன் நினைப்பையே சாய்க்க வந்ததாயிற்று என்னலாம்.

இவ்வாறே, குழந்தையானது, பத்துத் திங்கள் அளவும் தாயின் வயிற்றில் தன்னந்தனியே தாயுணவைத் தானும் உண்டு. பசியும், பகலும், நிசியும் அறியாமல் வளர்ந்து வந்தது. அப்போது, அக்குழந்தை நல்ல நினைப்புகளைக்கொண்டிருந்தது. ஆனால் கருவுயிர்க்கும் நேரத்திலே அக்குழந்தை தலைகீழாகத் தரையிலே தள்ளப்பட்டதும், அதன் எண்ணங்கள் யாவும் தலைகீழாக மாறிவிட்டன. ஏனெனில், குழந்தையின் உடம்புக்குக் காரணமான மாயையானது, சண்டமாருதம்போலக் குழந்தையின் நினைப்பைத் தாக்கித் தள்ளிவிட்டது. கரும்பு எவ்வளவு இனிப்புடையதாயினும், காற்றடித்து முறித்துச் சிதைத்துவிட்டால் நன்கு பயன்தராது. அப்படித்தான், நம்மை, தாயின் உதரத்தினின்றும் தரையிலே வீழ்த்தி வேதனைக்கு உள்ளாக்கி,

மாயையானது நல்லறிவைக் குறைத்து மயக்கிவிடுகிறது. பூர்வஞானத்தோடு கூடிய சிற்சில மகான்கள் இறையருளால் இங்ஙனம் பிறக்கும்போது அறிவு கெடப்பெருமல் மாயைதன்னைக் கோபித்து வென்றுவிட்டதாகச் சரிதங்கள் கூறுவதும் இச்செய்தியைத் தெரிவிப்பதாகும். "சடகோபர்" என்னும் திருநாமத்தில் இக்கருத்திருப்பதை வைணவநூல்களும் செப்பும். இதனுல் நாம் மயக்க அறிவைப் பெறுமாறு யாங்ஙனமென்பது புலப்படுத்தப்பட்டதென்க. தான் என்ற சொல்லால் உயிரின் வல்லமை மாயையின் வல்லமையின் முன்னர் வலியற்றுக்கிடத்தலே உணரலாகும்.

நல்ல அறிவு ஒழிந்து :

குழந்தை, தாயின் வயிற்றில் தங்கி வளரும்போது இனி எப்பிறப்பும் எடுக்காவண்ணம், இறையடியே போற்றிச் சாயுச்சியப்பேறு அடையுமாறு உலகில் பிறந்தபின் ஒழுகவேண்டுமென்று நினைக்கின்ற நல்ல அறிவைப் பெற்றிருக்கின்றது. ஆனுல், தரையிலே சனித்ததும் அந்த நல்லறிவு, அதோமுகப்பட்டு, பிராரத்தவினைக்கேற்றதான இருவினை நினைப்பே அடைகின்றது. நாயானது, ஓரிடத்தே படுத்துக்கிடக்கும்போது, தான் இனிமேல் எச்சில் முதலான அசுத்தங்களைப் புசித்து வாழலாகாதென எண்ணமிடும். ஆனுல், அதே நேரத்தில் ஓர் எச்சில் இலை போடப்பட்ட சத்தம் கேட்டதும் காதுகளை அடித்துக்கொண்டு முன் எண்ணின நல்ல நினைப்பினை அறவே மறந்து, தன் பிறப்புக்கேற்ற தொழிலிலேயே ஈடுபடுகின்றது. இந்த உவமை மேற்கூறப்பட்ட நமது நிலைமைக்குப் பொருந்துவதாகும். இங்ஙனம், அறிவு திரிவுபடுதல்

ஆன்மாக்களின் வினைக்கேற்ப விளைதலினாலே ஆசிரியர், ஒழித்து என்னாமல் ஒழிந்து என்றுள்ளார் ஆவர். இதனால், உயிரானது உடம்பின்மயமாய் ஒன்றுதல் புலனாம்.

நன்கு நீது எல்லை உரு அக் காலம் தன்னில் பசியை அறிவித்து அழுவித்து :

குழந்தை தரையிலே பிறந்ததும் முன்னை நல்லறிவு மறைந்து போவதனாலே, இன்னது நல்லது, இன்னது கெட்டது என்று பாகுபடுத்தி உணரும் பகுத்தறிவு தொழிற்படாமல் கிடக்கும். அப்போது, அதன் இச்சையியல்பு நிறைவேறும்பொருட்டு அப்பகுத் தறிவு இறையருளால் கிளர்த்தப்படுகின்றது, அதனால், குழந்தையின் இச்சையுணர்வு இயக்கமுற்றுப் பசி தோன்றப்பெறுகிறது. இப்பசியுணர்ச்சி, தலைப்பட்ட தும் வினைப்புசிப்பின் தொடக்கம் ஏற்பட்டு, உணவை விரும்பிக் குழந்தை அழத்தொடங்குகிறது. இங்ஙனம், பிராரத்தவினைப்புசிப்பின் பந்தய ஓட்டம் இறை யாணையால் தொடக்கி வைக்கப்படுதல் நிகழ்கின்றது. எனவே, பசியுணர்ச்சியே இப்பிறப்பில் முதற்கண் தோன்றப் பெறுவதாமென நாம் அறியலாம்.

உக்கு ஆவி சோர தாய் உள் நடுங்கி - மிக்கு ஓங்கும் சிந்தை உருக முலை உருகும் தீம் சுவை பால் :

தான் பெற்ற குழந்தை அழுகின்ற குரலைச் செவி மடுத்ததும் தாயினுடைய உயிர் (இதயம்) உருகத் தொடங்குகிறது. இதுதான், தாய்ப்பாசம் (தாய்மை) தொடங்கும் நிலை எனப்படும். தனக்கொரு குழந்தை

இல்லாதிருந்தவரையில், எந்தப் பெண்டிரின் உள்ளமும் இங்ஙனம் உருகப்பெறுவதில்லை. குழந்தையைப் பெற்றெடுத்ததும் இந்த உண்மையான உருக்கம் தாயுள்ளத்தே தலைப்படுவது இறையருளால் என நாம் எண்ண வேண்டும். இந்த உருக்கம் இல்லாவிடில், குழந்தை வளர்தற்கு ஏது இல்லாமற்போகும். குழந்தையைப் பெற்றுக் கிடக்கும்போது, தாய் வயாவும், வருத்தமும், ஈன்றக்கால் நோவும் பெற்றுக்கிடந்தும், அதாவது சோர்ந்து செயலறக் கிடந்தும், இந்த உருக்கம், அவ் வருத்தங்களையும், பலவீனத்தையும் மட்டுப்படுத்தி எழுகின்ற திறம் இங்கு நம்மால் கருதப்படத்தக்க தாகும். இந்த உருக்கத்தால், குழந்தையின் அழுகுரலைக் கேட்டதும் தாயானவளுடைய உள்ளம் குழந்தைக்கு என்ன விளையுமோ என எண்ணி நடுக்கமுறுகின்றது. இதுவே, அத்தாய்ப்பாசம் வேர்வீழ்க்கும் நிலையாகும். உள் நடுங்கி என்றமையால் உண்மையன்பு புலப் படுத்தப்பட்டது. இதன்பயனுக அந்த அன்பு தாயின் சோர்வுகளையெல்லாம் பொருட்படுத்தாமல் மேலெழு கின்றது. அப்போது, தாயின் சிந்தை முழுவதும் குழந்தையின் மேலதாகவே ஆகிவிடுகிறது. இதுவே மேற்கூறப்பட்ட உண்மையன்பின் - உள்ளன்பின் - வளர்ச்சிநிலை ஆகும். இதனுல், உள்ளக்கசிவு ஏற் பட்டுத் தாயின் உடம்பிலுள்ள சிவந்த இரத்தமானது வெண்ணிறமாக மாறி, அமுதமயமாகிக் கொங்கை யின்கண் வந்து பெருக்கெடுக்கலாகும்.

பிள்ளைப்பேறற்றிருந்தகாலை எந்தத் தாய்க்கும் இங்ஙனம் பால் சுரப்பதில்லை என்பது கண்கூடாம். ஆதலால், இந்தவிதமாக இரத்தம் அமுதமாக மாறுவது தாயின் செயலன்றெனவும், குழந்தையைக் காக்கும்

பெரும்பாரம் ஏற்றுள்ள இறையருளின் செயலெனவும் நாம் தெளியலாகும். இதனை, "இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால் நல்லாய்! உள ஆம்" என்ற உவமையாலும் உணரலாம். "சுரந்த திருமுலைக்கே" என்னும் பாட்டின் பொருளும் ஈண்டைக்குச் சிந்திக் கத் தகுவதாம். இதனல், அருவமாம் அன்பின் திறம் வெளிப்படையாக உணரப்படும்.

வந்து மடுப்ப கண்டு வாழ்ந்திருப்ப - பந்தித்த பாசம் பெரும் கயிற்ருல் பல் உயிரும் பாலிக்க - நேசத்தை வைத்த நெறி :

இங்ஙனம், தாயினிடமாகச் சுரந்த முலைப்பாலைக் குழந்தை முதல் முதல் அருந்தலுறுகிறது. இதனல், தாயானவள் தன் உள்ளத்தெழுந்த அன்பினல் உந்தப் பட்டவளாகித் தன் சொந்த வளர்ச்சியைத் தியாகம் செய்தே தன்னுடைய குழந்தையை வளர்க்கின்ருள் என்பது போதரும். இப்படித் தன் குழந்தை, ஆவ லுடன் பால் குடிப்பதைக் காணும்போது தாய்க்கு மனத்திருப்தி உண்டாகிறது. குழந்தை பால் பருகா விடில் வருந்தநேர்வள். எனவே, குழந்தையின் வாழ் வையே தன் வாழ்வாகக் கருதுமளவுக்குத் தாயின் குழந்தைப்பாசம் முதிர்ச்சி பெறுகின்றது. இதனையே, கண்டு வாழ்ந்திருப்ப என்ற சொற்றொடர் தெரி விப்பதாகும்.

இந்த விதமாகத் தாய்க்குக் குழந்தையின்மீதும், குழந்தைக்குத் தாயின்மீதும் நீக்க முடியாத பாசம் நிலைத்துவிடுகிறது. இந்தப் பாசம், பெரிய பருத்த உறுதியான கயிறுபோலப் பந்திக்கின்றது. தசரதன் மரணம், துரோணன் மாய்வு, குந்தியின் சோகம்,

முதலன பெற்றோர்க்கும் பிள்ளைகட்கும் இடையே பந்திக்கும் பாசமிருத்தலைக் காட்டவல்ல கதைகளாகும். "கடந்த யோகரும் கடப்பரோ மக்கள்மேல் காதல்" என்ற முதுமொழியும் இதனை உணர்த்தும். "என் மக்கள் போல்கின்றீர் யார்மக்கள் என்றுரைத் தான்" நளன். "சோரப் - ரஸ்டம்" வரலாற்றிலும் இவ்வுண்மை பொதுளுதல் காணலாம். "மூவேடனை என்று முடிந்திடுமோ" என்பர் அருணகிரியாரும். ஈஷணாத்திரயத்தில் புத்ரேஷணையும் அடங்கியிருத்தல் தெரியலாகும். இப்படி, மக்களுக்குள்ளே மாத்திரந் தான் இந்தப் பாசம் இருக்கிறதென்பதில்லை. எல்லா வகை உயிர்களிடத்திலும் இந்தவகையான பாசம் அருவமாய் நின்று ஆட்டுகின்றது. இந்தப் பாசம் இறைவனுணையால் யாவகை உயிர்களிடமும் அமைகின்றது. இந்தப் பற்று இல்லாவிடில் எவரும் வளர்ந்து பயனடைய இயலாமற்போம் என்பது சிறிது சிந்திப்பின் புலப்படும். ஆதலால், நேசத்தை வைத்த இத்தகைய நியதி நெறியை ஆசிரியர் இவ்விடத்தே போற்றியுள்ளார். நாமும், இத்தகைய நேசத்தை அருளிச் செய்த இறையருளைப் போற்றுவோமாக!

6. 'ஆசற்ற' என்பது முதல் 'படி போற்றி' என்பது வரையில் ஒருதொடர்.

இறைவன் தந்தைபோல் இரட்சித்தல்

ஆசு அற்ற பாலே பசு பதத்தும் :

தாயுமானவர் என்பதொரு திருப்பெயர் இறைவனுக்கு உண்டு. இந்தப் பெயருக்கு ஏற்ப எந்த உயிரையும். தாய்க்குள் தாயாக இருந்து, கருப்பாசயத்தில்

சுக்கில சுரோணிதங்கட்கு ஏதும் இடையூறு நேராமல் இரட்சிக்கின்றான். பிறகு, கை, கால் முதலாம் உறுப்புக்களை அமையச் செய்கிறான். தாயுணவைச் சேயுணவாக்கி உதவுகின்றான். இப்படியெல்லாம், ஒரு தாய் தானாகவே செய்து உதவ முடியாது. உண்மையாகப் பார்த்தால், தாயை ஒரு கருவியாகக்கொண்டு உயிருக்கு இறைவனே தாயாக இருந்து தண்ணளி செய்கின்றான் என்பது புலப்படும். கிளையற்ற தாவரமாகிய தென்னை முதலிய மரங்களில், காய்கள் பாளையினுள் உருவாகின்றன. பாளையினுள் காய்க்குரிய பிஞ்சுகளை, யாரும் உருவாக்குவதில்லை. இறையருளே இங்ஙனம் செய்கின்றது. மூடி மறைத்துக்கொண்டிருக்கும் பாளைக்குள்ளே இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. இப்படியே, தாயின் கருப்பைக்குள், கருவானது மறைந்துகிடக்கும் நிலையில் இறைவனுதவி நடைபெறுகின்றது. மற்றும், புல் வர்க்கமாகிய ஓரறிவுடைய உயிர்வர்க்கம் முதல் ஆறறிவு படைத்துள்ள மக்களளவும் இவ்வுலகில் கடவுளே வர்க்கவிருத்தியில் கண்ணும் கருத்துமாக இருந்து கர்ப்பாசயத்திலும் காத்தளிக்கின்றான் என்பது நமக்குப் புலப்படும்பொருட்டே பாளைப் பசும் பதம் என்ற சொற்றொடரிட்டுச் சொல்லலுற்றார் ஆசிரியர்.

பாலன் ஆம் அப்பதத்தும் :

தாயும் தந்தையும் பராமரிக்கின்ற எல்லாக் குழந்தைகளும் பிழைத்து வளருவதாகச் சொல்ல முடியாது. சில இறக்கின்றன; சில பிழைக்கின்றன. ஆகவே, ஒரு குழந்தை சாவாமல் வளர்வதென்பது தாய் தந்தையர் பராமரிப்பையே முற்றிலும் சார்ந்தில்லை

என்பது தெரியலாம். அன்றிக் குழந்தையும் தன்னைத் தானே பராமரித்துக்கொள்ளும் திறனுடையதன்று. ஆகையால், கருப்பைஅண்டத்துயிர்க்குப் புல் உணவு அளித்துக் காக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இறைவனே பச்சைக் குழந்தையைப் பாலனும் பருவ முறுமாறு நாளொருமேனியும் பொழுதொருவண்ண மும் எய்த வளர்த்தருளுகிறான் என்று நாம் அறிய லாகும். மேலும், "மதலையைப் பெறுநாள் துன்பம், வளர்த்திடு நாளும் துன்பம்" என்பதற்கு ஏற்பக் குழந்தையை வெகுபக்குவமாக ஏற்றமும் குறைவும் மாற்றமும் இன்றி வளர்க்கவேண்டியுள்ளது. இந்தச் சிரமமான பொறுப்பை இறைவன் ஏற்றருள்செய்தல் நமக்குத் தெரிதரும் பொருட்டே அப்பதத்தும் என்றார் ஆசிரியர். பதம் என்ற பதம் வளர்க்கும் விதம் பற்றிய நுட்பத்தை உணர்த்திநிற்றல் ஒரு நயமாம்.

நாளுக்கு நாள் சகல ஞானத்தும் :

நாம் இப்போது பெற்றுள்ள பிறப்புநிலையானது சகலநிலை எனப்படும். இந்தச் சகலநிலையில் நாம் படிப் படியாக அறிவும் அனுபவமும் அடைந்து தெளி வுறுகிறோம். ஆகவே, உண்மை இன்னதுதான் என்று உயிர் அறிந்து நலப்படும்பொருட்டே இந்தச் சகல நிலை பயன்படுகின்றது. அரசன், அமைச்சர் முதலான சுற்றத்தாரோடு சூழ்ந்து செங்கோல் புரிவதுபோன்றே, உயிரானது இந்தச் சகலநிலையிலுள்ள கருவி கரணங் களைத் துணைக்கொண்டு பையப்பைய ஐயம் அகன்று தெளிவுறுகின்றதென்னலாம். பால குமார விருத்தப் பருவங்களின் இயல்புகளுக்கு ஏற்ப எல்லாச்சூழ்நிலை களும் பரிணமித்து உதவுகின்றன. இந்தப் பரிணாமம்,

நம்மால் ஆக்கிக்கொள்ளப்படுவது அன்று. அவ்வவர் நிலைமைக்கு ஏற்ப - வினைகட்கு ஏற்ப - இறையருளால் நிகழ்வதாகும். இந்தப் பரிணும பக்குவப் படிநிலைக்கு ஏற்ற விதமாக நமக்கு அறிவு படிப்படியாக உண்டாகி உதவுகின்றது. ஆதலால், நாம் சகலநிலையில் வளர்ச்சி பெற்று வாழும் வாழ்வனைத்தும் நம்மால் அமைவ தல்ல எனவும், நம்மை இயக்குவோனுல் நம் வினைக் கேற்ப அமைவதெனவும் தெரிதல் நன்றும்.

மூள்வித்து கொண்டு ஆள ஆள் அ கருவி கொடுத்து:

பிள்ளைகளின் வயது, வகுப்பு, அறிவுத்தரம் முதலிய பற்பல இயல்புகளுக்கு ஏற்பப் பாடபுத்தகங்கள், வகுப்புகள், பாடசாலைகள், பரீட்சைகள் முதலியவை கல்வித்துறையாளர்களால் ஏற்படுத்தித் தரப்படி தரப் படுவதுபோலவே, நாம் இந்தச் சகலநிலையில் புகும் போதும், வளரும்போதும் அடையவிருக்கும் பக்கு வங்கட்கு ஏற்றவிதமாகத் தத்துவங்கள் எனப்படும் கருவிகள் முப்பத்தாறும் இறைவனுல் தரப்படுகின்றன. இந்தத் தத்துவங்களைத் தாமே ஆக்கிக்கொள்ளும் செயல் உயிர்கட்குக் கிடையாது. அப்படி இருப்பதா யிருந்தால், எல்லா உயிர்களும் வினைப்பயனை உதறி நீக்கிவிட்டு ஒரேவித நல்லமாதிரியான தாத்துவிகங்களை எய்தி ஒரேவிதமாகப் பக்குவப்பட்டு நன்னிலை எய்தி விடும். எந்த உயிரும் இப்படிச் செய்துகொள்ளும் ஆற்றலற்றிருப்பதனுலேயே, நாம், கருவி வகைகளை ஏற்ற பெற்றியவாக நமக்கு ஏற்புறுத்தியளிப்பவன் இறைவனே என உணரலாம். இப்படிக் கருவிகளைக் கடைக்கணித்து உதவியபோதிலும், உயிர்கள் அறிவுக் குறைபாடு உடைமையால் அவற்றைத் தக்கபடி

பயனுறுத்திக்கொள்ளஇயலாதனவாயுள்ளன. ஆதலால் இறைவன் உயிருக்கு உடனாய் இருந்து உணர்த்தவும் வேண்டியுள்ளது. இதனையே, ஒக்க நின்று பண்டாரி ஆன படி போற்றி என்ற இடம் தெரிவிப்பதாகும்.

ஆன்ம அறிவும் கண்ணொளியும் போல நிற்பதே உடனாய் நிற்பது எனப்படும். தத்துவங்கள் யாவற்றையும் உயிர்கட்கு உதவுமாறு உடையவன் இறைவன். அதனோடு, பாரபட்சம் ஏதுமின்றிப் பொது வகையால் யாவர்க்கும் உதவுகின்றான். இப்படித் தனக்குள்ள பொதுத்தன்மையால் யாவர்க்கும் குருவாகி நின்று உதவுகின்றான் இறைவன். ஆதலால், பண்டாரி என்றுள்ளார் ஆசிரியர். தானாகவே, உயிர்களிடம் இரக்கம் பூண்டு இறைவன் இங்ஙனம் சகலநிலையில் உதவுதலினால் அவனை நாம் போற்றி உய்திபெறக் கடமைப்பட்டுள்ளோம். ஆனதுபற்றியே ஆன படி போற்றி எனலானார் ஆசிரியர் என்க. படி என்ற சொல் இறைவனுடைய பொதுத்தன்மையைப் புலப்படுத்தி நிற்பதாகும் என்னலாம். இதனால் இறைவன், உயிர்கட்கு ஏவல் புரியும் திறம் கூறப்பட்டது.

7. 'தண்டாத' என்பது முதல் 'அறம் போற்றி' என்பது வரையில் ஒருதொடர்.

இறைவன் தத்துவங்களைக் கூட்டிக்காக்கும் முறைமை

தண்டாத புன்புலால் போர்த்தபுழுக்குரம்பை மாமனையில்:

உயிரானது சூக்குமஉடம்பு பெற்றபிறகு, தூல உடம்புகளை வினைக்குத் தக்கவாறு மாறிமாறிப் பெற்று

முத்தி அடையும்பரியந்தம் பிறந்துழலும். அங்ஙனம், உயிர் பெறும் ஐம்பூதபரிணமத்தால் ஆகிய உடம்பானது இங்ஙனம் முத்தி அடையும்வரையில் மாறி மாறி வருதலால் தண்டாத என்றுள்ளார் ஆசிரியர். உயிர்கள் மலத்தால் பிணிப்புண்டுள்ளன. அழுக்குடைய மெல்லிய ஆடையின் மாசினைச் சாணி, உவர்மண் முதலான வேறுமோர் அழுக்கைக்கொண்டே வெளுப்பர். அவ்வாறே மாயா மல காரியமாகிய இந்த இழிந்த தன்மைவாய்ந்த உடம்பைக்கொண்டே உயிரின் மலம் பரிகரிக்கப்படும். ஆதலால், இவ்வுடம்பின் அழுக்குடை இயல்பு புன்புலால்போர்த்த புழுக்குரம்பை எனப்பட்டுள்ளது. "பொல்லாப் புழுமலிநோய்ப் புன் குரம்பை" என்றும், "புன்புலால் யாக்கை" என்றும். "புலையரும் விரும்பாத இப் புன்புலால் யாக்கை" என்றும் பிற ஆசிரியர்களும் உடம்பினை இங்ஙனம் இழிவு படுத்தியே கூறுவர். இங்ஙனம் கூறுவதெல்லாம், நம் மலநோயை நீக்கற்கு இவ்வழுக்குடம்பே சாதனமாயிருத்தலை நமக்கு நினைவூட்டற்பொருட்டேயாகும் என்க.

ஒருவன் வெய்யில், மழை, குளிர் முதலியவற்றால் அடிபடாமல் தன்னைக் காத்துக்கொள்ளுதற்கு ஒரு வீட்டுக்குள் வசிக்கவேண்டியுள்ளது. அப்படியே ஆன்மாவும், இந்த உடம்புக்குள் வசித்து வினைகளைப் புசித்து மலங்கள் நசித்து உய்தி அடைய வேண்டியுள்ளது. புறத்தே வீடு, குடியிருத்தற்குப் பயன்படுதல் போலவே, உயிர்க்கு, இந்த உடம்பு, சிறந்த வீடு போன்று பயன்படுகின்றது. இதனைத் தெரிவிப்பதே மா மனையில் என்ற தொடர். மாயையாலாகிய மனை

என்றேனும், சிறப்பு உதவும் மனே என்றேனும் இத் தொடர் பொருள்படுவதாகும்.

அன்பு சேர்கின்றன கட்டு ஐந்து ஆக்கி:

ஆன்மாவானது, கேவலநிலையில் அறியாமையால் துன்புறுதற்கு இரக்கம்வைத்து அநந்ததேவரருளால் தரப்படுகின்றதான அசுத்தமாயையில் கலக்கப்பட்ட பாகமாகிய காரண சரீரத்தைப் பொருந்தும், ஆகவே இந்த மாயைதான் இனிவரும் எல்லாச்சரீரங்களும் தோன்றுவதற்குக் காரணமாயிருப்பதால் மாயையே காரணசரீரம் எனப்படும். இப்படிக் காரண உடலே ஆன்மாப் பொருந்துவதனுல் அதன் மறைவுற்றிருந்த அறிவு இச்சை செய்கைகள் பொதுவகையால் பொது வடிவுறும். அதாவது, நன்று தீதறியும் உணர்ச்சியின் வகையும், வேண்டும் வேண்டாம் என்கிற இச்சையின் பகுப்பும், இவ்வழியில் செய்யும் முறையாகிய தொழி லின் பகுப்பும் விளங்காதிருக்கும் நிலேயாகும். பிறகு, மேற்குறித்த அசுத்தமாயையிலிருந்து தோன்றுவன வாகிய கலே முதலிய சட்டை போல்வதான கஞ்சுக சரீரத்தை ஆன்மாப் பொருந்தும். இதனுல், முன்பு பொதுவகையால் விளங்கிய அறிவு இச்சை செயல்கள் சிறப்புவகையால் வியட்டிரூபம் அடையும். இதன் பின்னர், ஆன்மாவானது, சாத்துவிக முதலாகிய முக் குணங்களாகிற குணசரீரத்தைப்பொருந்தும். அதனுள் அடங்கியிருக்கும். பிறகு வெளிப்படுவனவாகிய மன முதலானவைகொண்ட சூக்குமசரீரத்தையும், எலும்பு முதலாகிய தூலசரீரத்தையும் ஆன்மா, இடமாகப் பெற்று விஷயங்களேப்பற்றித் தொழில்புரியும். முதலிற் குறிக்கப்பட்ட மூன்றுவித சரீரங்களுக்கும் பரசரீரம் என்பது பெயராம்.

மேலே சொல்லப்பட்ட பரசரீரத்தை அடையப் பெற்ற ஆன்மாவானது பின்னர் சூக்கும உடலில் நின்று சூக்கும இருவினைகளைப் புரிந்து இன்ப துன் பங்களை அனுபவிக்கும். பிறகு தூல சரீரத்தைப் பொருந்தி, தூலமான இருவினைகளைச் செய்து, அதன் பலனான இன்ப துன்பங்களை அனுபவிக்கும். இது வரையில் கூறியிருப்பதுகொண்டு ஆன்மாவானது, தூலம் - சூக்குமம் - குணம் - கஞ்சுகம் - காரணம் எனப்படும் ஐந்து சரீரங்களைப் பொருந்தியுள்ள தாகும் என அறியலாகும். இந்த ஐந்து உடலங் களைப் பொருந்துவதனால் ஆன்மாவானது, ஐந்து அவத்தைப்பட்டு ஒழுகும். அவை தூலம் முதலான சரீர வரிசைப்படி, சாக்கிரம் - சொப்பனம் - சுழுத்தி - துரியம் - துரியாதீதம் எனப்படும். இது ஒழுங்குமுறை எனப்படும். மேற்கூறப்பட்ட ஐந்துவகை உடலங் களையும் முறையே அன்னமயகோசம் முதலான ஐங் கோசங்கள் என்றும் உரைப்பர். இவற்றுள் சாக்கிரம் என்பது, எல்லாக் கருவிகளோடும் கூடிய விழிப்பு நிலையாம். சொப்பனம் என்பது சிலகருவிகள் தொழிற் படாத கனவுநிலையாம். சுழுத்தி என்பது ஒன்றும் உணராத தூக்கநிலையாம், துரியம் என்பது பிராண வாயு ஒன்றுடன் இயங்கித் தெளியாதிருக்கும் நிலையாம். துரியாதீதம் என்பது பிராணவாயு இயக்கமுமின்றி மூர்ச்சித்துள்ள நிலையாம், இவ்வைந்து கட்டுகளுட் பட்டு ஆன்மா போக்குவரவு செய்து நிற்கும். ஒரு வீட்டுக்குள், பல கட்டுகள் இருப்பது போலவும், அவற்றுள் ஒருவர் உள்ளே புகுவதும் வெளியே வருவதுபோலவும், ஆன்மாவின் மேற்சொல்லப்பட்ட ஐந்தவத்தைப் போக்குவரவு நிகழ்வதாகும். இந்தக்

கட்டுக்களை ஆன்மா தானுக அமைத்துக் கொள்வது இல்லை. இறையருளே ஆன்மாவின் விருப்பிற்கிணங்க அமைவுறுத்துகிறது. ஆதலால், அன்பினுல் ஆக்கி என்ருர் ஆசிரியர்.

முன்பு உள்ள உண்மைநிலை ஒருகால் அகலாது திண்மை மலத்தால் சிறை ஆக்கி :

ஆன்மா என்னும் சொல் வியாபகம் எனப் பொருள் படுவதாகும். எனினும், அது ஆணவமலத்தோடு கூடியிருக்கின்றது. ஆதலால், அறிவு மறைப்புண் டுள்ளது. ஆகவே, ஆன்மா, தான் மலபந்த முற்றிருத் தலைத் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது. முயற்சி யின்றியும், கருவிகள் இன்றியும் எந்த ஒன்றையும் அறிதல் இயலாது. இதற்காகவே, ஆன்மா அவத்தைப் படுகின்றமை நிகழ்கிறது. இது, அதன்பொது இலக்கண மாகும். சிவத்தை அடைந்திருத்தலே அதன் சிறப் பியல்பு ஆகும். ஓர் அரசன் அமைச்சராதியரோடும் கூடி அரசியலறிவடைந்து செங்கோல் நடாத்துவது போலும், ஆன்மாவானது அந்தக்கரணங்களோடு கூடிநின்று அஞ்சவத்தைப்பட்டு உண்மை தெரியப் பெறுகின்றது. அப்படி ஆன்மா அறியலுறுகையில் அந்தக்கரணங்களை அடக்கிச் சொப்பனுவத்தையில் உட்கருவிகளாக்கி அகத்து நிகழ்வதை அறியும். சாக் கிராவத்தையில் இந்த அந்தக்கரணங்களைப் புறக்கருவி களோடு சேர்த்துப் புறக்கருவிகளாக்கிப் புறத்தே நிகழ்வதை அறியும். இப்படி அகத்தும் புறத்தும் சேர்ந்து ஆன்மா ஐந்தவத்தைப்படும். இங்ஙனம் அவத்தைநிலைக்கு உள்ளாங்காலத்தும் யான் எனது என்னும் செருக்குறுவதற்குக் காரணமாய் நின்ற

ஆணவமலத்தினைவிட்டு அகலுவதில்லை. இதனையே, முன்புள்ள நிலைமை அகலாமை என்றுள்ளாராவர் ஆசிரியர். அதாவது, ஆன்மாவுக்கும் மலத்துக்கும் உள்ள சம்பந்தமெனப்படும் அநாதிசையோகம் நிலைத்திருப்பதாகும். அநாதிசையோகமாவது அரிசிக்கும் உமிக்கும் இருப்பதுபோன்றதோரியைபாம். ஆதலால் தான், மலத்தைவிட்டு ஆன்மா நீங்க முடிவதாகின்றது என்னலாம்.

திண்மை மலத்தால் சிறை ஆக்கி :

இவ்வாறு கூறுவதனால், ஆன்மா சரீரபந்தம் அடையப்பெற்றதும் மலபந்தம் நீங்கப்பெற்றுவிடுமோ என்று ஐயப்படக் கூடாதெனத் தெரிதல்தக்கதாகும். ஒரு கைதியை விலங்கோடு சிறைக்குள் அடைப்பது போலுள்ளது ஆன்மா மலத்தோடு பிறப்புட்படுதல் என்பர். திண்மை என்ற சொல்லால் ஆணவமலத்தின் வலிமை உணரப்படும். இதனால், கேவலத்தினும் சகலத்தினும் ஆணவமலம் காரணமாய் நின்று உயிருக்கு அஞ்ஞானத்தை உண்டுபண்ணுமென்பதை அறியலாம்.

கண் மறைத்து மூல அரும் கட்டில் உயிர் மூடமாய் உள் கிடப்ப :

உயிரானது இப்பிறப்புட்படுகையில் மூலாதாரம் எனப்படும் இடத்திலே அறிவு விளக்கமின்றி ஆணவ மல சகிதமாய்க் கிடக்கும். ஐந்தவத்தை வீட்டில் உயிருக்கான அந்தரங்கமான - அதீதமான - இடமே மூலாதாரம் எனப்படும். மூலாதாரம் எனப்படுவது குதத்துக்கு இரண்டங்குலத்தின்மேல், குறிக்கு இரண்டங்குலம் கீழ் உள்ள இடமாகும். இவ்விடத்தின்

ஏனை விவரங்களை விரிந்த நூல்களால் அறியலாம். இவ்விடத்தேதான், உயிர், புருடனெனப்பட்டு ஒன்றியாய்க் கிடப்பதாகும். மற்றும், உயிர்களுக்குப் பக்குவம் வருவதற்காக அவை அனுபவிக்கவேண்டிய வினைப் பயன்களைக் கூட்டுவிப்பது இறைவனுடைய சத்தியே ஆம். உயிர் அனுபவிக்க வேண்டிய விஷயங்களில் குணம் குற்றம் ஆகிய இரண்டும் இருக்கும். ஆகவே, உயிரானது குற்றத்தை முன்னரே அறியின் அதனை அனுபவிக்க உடன்படாது. இதனால், கசப்புள்ள மருந்தை இனிப்புள்ள சர்க்கரையால் மூடிக் குழந்தைக்குத் தாய் தருவது போலவே மேற்சொன்ன குண தோஷங்களை இறைவன், உயிர்கட்கு மறைத்துக் கூட்டுவிக்கிறான். இங்ஙனம் மறைத்தலைத் திரோதானம் என்பர். அதனை இவ்வாசிரியர் இங்குக் கண் மறைத்து என்ற தொடரால் தெரிவிக்கிறார். இப்படிக் குண தோஷங்களை மறைக்காவிடில் அனுபவம் என்பது நிகழாமற்போம். அனுபவம் நிகழாவிடில் மும்மலங்கள் காரியப்பட்டும் பயன் இல்லாமற்போம். இதனால் மறைப்பு இன்றியமையாததாயிற்றென்பர்.

காலம் நியதி அதுகாட்டி மேல் ஓங்கும் உந்தி வியன் கட்டில் உயிர் சேர்த்து :

உயிர்களின் குண தோஷ வினை அனுபவங்கட்குத் தத்துவங்களின் துணை தேவைப்படுகின்றது. இதனால் மாயை எனப்பட்டு இறைவனிடம் அடங்கி இருக்கும் பரிக்கிரகம் எனப்படும் வைப்புச்சத்தியானது, தனு கரண புவன போகங்களாக விரிகின்றது.

மாயை என்பது மும்மலத்துள் ஒன்ருகும். இது சுத்தமாயை, அசுத்தமாயை என்று இரண்டு வகைப் படும். சுத்தமாயையிலிருந்து ஐந்து கலைகளும், நான்கு வாக்குக்களும், சிவதத்துவம் ஐந்தும், சுத்தகாலம்முதல் சுத்தநிலம் இறுதியான தத்துவம் முப்பத்தொன்றும் தோன்றும். இச் சுத்தமாயைக்குக் கருத்தா சிவனே ஆவன். சவிகற்ப அறிவினைத் தூண்டுதலே இம்மாயை யின் காரியம். இதனைப் பிரேரககாண்டம் என்றும் கூறுவர்.

அசுத்தமாயையிலிருந்து காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை (கலக்குண்ட பாகம்) என்கிற ஏழு வித்தியாதத்துவங்களும் தோன்றும். இதனேடு, கலையினின்றும் தோன்றிய பிர கிருதிமாயையிலிருந்து படிப்படியாக ஆன்மதத்துவங் கள் இருபத்துநான்கும் தோன்றும். மேற்கூறப்பட்ட அசுத்தமாயை அனந்ததேவரைக் கருத்தாவாகக் கொண்டது. இம்மாயை மயக்கத்தைச் செய்யும் இயல் பினது. இதனைப் போககாண்டம் என்பர். இனிப் பிரகிருதிமாயைக்கு ஸ்ரீகண்டர் கருத்தா ஆவர். இந்த மாயை அஞ்ஞானம் செய்வதை இயல்பாகக் கொண்டது. இது, போக்கியகாண்டம் எனப்படும். சுத்தம், அசுத்தம் எனப்படும் பேதம் சிவதத்துவத் திற்கு இல்லை. அது எப்போதும் சுத்தமாயா காரிய மாகவே நின்று யாவகை ஆன்ம கோடிகளையும் இயக்கும்.

வித்தியாதத்துவங்கள் ஏழு ஆகும். இவற்றைப் போகத்திற்செலுத்துவது சுத்ததத்துவம் ஐந்தும் ஆம். அதாவது, புருடனைச் சதாசிவதத்துவமும், மாயையைச்

சிவதத்துவமும். அராகத்தை ஈசுவரதத்துவமும், வித்தையைச் சுத்தவித்தையும், காலம் நியதி கலை என்ற மூன்றையும் சத்திதத்துவமும் செலுத்தும் என்பதாம். ஆகவே, சுத்ததத்துவம் ஐந்தும் போகத்திற்செலுத்தும் இயல்பினவாம். வித்தியாதத்துவம் ஏழும் போகத்தைத் தோற்றுவிப்பனவாம். ஆன்மதத்துவம் இருபத்துநான்கும் போக அநுபவத்திற்குத் துணைபுரியும் இயல்பினவாம். அகல், எண்ணெய், திரி என்ற மூன்றுங்கூடியது விளக்கெனப்படினும், அந்தத்திரியினிடமாகப் பிரகாசிக்கும் ஒளியே (சுடரே) விளக்கத்தை உண்மையிற் செய்வதாகும். அப்படித்தான் சிவத்தினது திருவருளாலேதான் எல்லா மாயைகளும் காரியப்படுகின்றன என்னலாம்.

உயிரானது அதீதப்பட்டு மூலாதாரத்தே அறிவு இச்சை கிரியைகளின் கூட்டத்தாலான புருடதத்துவ ரூபமாக மூடமாய்க் கிடக்கையில் அது அங்கு இளைப்பாறும் காலம்வரையில் காலதத்துவம் நியதிதத்துவத்தால் நிறுத்தப்படுகின்றது. அதன்பின்னர், உயிரானது துரியத்தானம் எனப்படும் நாபித்தானத்தை அடைகின்றது. அப்போது உயிரானது பிராணவாயுவுடன் கூட்டப்படுகின்றது. மற்றும் அவ்விடத்திலே கலை - வித்தை - அராகத்தால் முன்பு தந்த அறிவு இச்சை தொழில் மூன்று எழுப்பப்படுகின்றது. பிறகு அதற்குத் துணையாம்பொருட்டாகப் பிரகிருதிமாயையில் உண்டான முக்குணங்களும் சேர்க்கப்படுகின்றனவாம். இதுவே நாபிக்கட்டில் உயிர் எய்தும் நிலையாம்.

இனி மூன்றுங் கட்டெனப்படும் இதயத்தானத்து உயிர்க்கு நிகழ்வதைக் காண்போம். இதயமானது,

சுழுத்தித்தானம் எனப்படும். இந்தத் தானத்திலே உயிரானது சித்தக்கருவியுடனே கூட்டப்படுகின்றது. அங்ஙனம் சித்தத்தோடு கூட்டப்பெறினும், உயிரானது, தான்கண்ட பொருளை இன்னதென்று அறிய மாட்டாமல் மயங்கி நிற்கும்.

இப்பால், உயிரானது சொப்பனத்தானம் எனப்படும் கண்டத்தானத்தில் சேர்க்கப்படுகிறது. இவ்விடத்தே சத்தாதி ஐந்தும், வசனாதி ஐந்தும், அந்தக்கரணம் நான்கும், வாயுக்கள் பத்தும், புருடனும் ஆகிய இருபத்தைந்து கருவிகளும் சேர்க்கப் பெறுகின்றன. இங்கே, உயிரானது முன்புசெய்த இருவினைக்கு ஈடாக, முன்னே சாக்கிரத்திலே இன்ப துன்பங்களைப் புசிப்புண்ட முறையிலேயே சொப்பனத்திலும் இருவினைப்போகம் புசிக்கலுறும். இப் புசிப்பு சுத்ததத்துவங்களினால் பிரேரிக்கப்படுகின்றதாகும்.

இதன்பின்னர், கண்டத்தானத்திற்கு மேலாக உள்ளதான சாக்கிரத்தானம் எனப்படுகிற புருவமத்திய இடத்தில் உயிர் சேர்க்கப்படுகின்றது. இந்தத் தானத்தை ஓலக்கமண்டபம் என்பர். அரசன், தன் அனைத்துச் சுற்றத்தாரோடும் வீற்றிருந்து காரியப்படுகின்ற கொலுமண்டபம் போல்வதாகும் இவ்விடம் உயிருக்கு என்பர். இங்கே முன்பு கேவலாவத்தையிற் கூடாதிருந்த பூதங்கள் ஐந்தும், புருடதத்துவம் தவிர்த்த வித்தியாதத்துவம் ஆறும், மேலான சிவதத்துவம் ஐந்தும் ஆகப் பதினாறு தத்துவங்களும், முன்பு சாக்கிரத்திலே இருந்த ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும், சொப்பனத்தானத்து இருபத்தைந்து

கருவிகளும், மற்றப் புறக்கருவிகள் நாற்பத்தைந்தும் ஆக மொத்தம் தொண்ணூற்ருறு கருவிகளையும் கூடி உயிர் சீவிக்கும். இங்ஙனம் செய்விப்பதும் இறைதிருவருளேயாகும். அரசனே, அரசாம் பிறப் புண்மை சிறப்புறச்செய்தல் போலவே, உயிரை இறை யருளுண்மை இவ்வாறு குறையறச் செய்விக்கின்ற தென்ப.

வீடு, எவ்வளவு சிறப்புடையதாயினும், விளக்கு இன்றேல் சோபியாது. வீட்டின் இருப்பை வெளி விளக்கமும், வீட்டின் உள்ளமைப்பினை அதன் உள் ளிருக்கும் விளக்கமும் காட்டியுதவும். இதனுலேயே வீட்டினுள் நிறைந்து நிற்கும் இருள் நீங்கலுறும். இவ்விதமாகவே, ஐந்துவித அவத்தையிலும் மறைந்து நிற்பதான ஆணவ இருளானது கூடாதபடி சூக்குமை யாதி வாக்குடனே கூடிப் பிரகாசிக்கும் சகலாவத் தையில் உயிர் நிறுத்தப்படுகின்றதாகும். இன்றேல், அறிவு எனப்படும் விளக்கம் ஏற்பட வழியற்றுப் போம். பிறகு, யான் எனது என அகங்கரித்திருக்கும் ஆன்மாவானது கன்மத்துக்குக் காரணமாக உள்ள சத்தாதி விஷயங்கள் காட்டப்பெற்றுத் தத்தம் நிலை கட்கேற்ற வெவ்வேறு தொழில்களைப் புரியலுறும். இவ்வாறு, கருவிகளை உண்டாக்கியும், கூடவேண்டும் முறையில் கூட்டியும், கன்மத்துக்கு ஏற்றவண்ணம் தொழிலாற்றி ஆணவமல நீக்கத்துக்கான அறிவு விளக்கம் அடைந்துகொள்ளுதற்குவேண்டிய ஆற்றல் உயிரினிடம் இலதாம். ஆன்மா, ஒன்றைச் சார்ந்து நின்று தொழிற்படும் இயல்பினதேயன்றித் தானே, தனித்து நிற்றற்கும் சார்த்திக்கோடற்கும் வேண்டும்

ஆற்றல் பெற்றில்லை. ஆதலால் ஆற்றல்மிக்க இறைவனுடைய தருமமே இங்ஙனம் உயிர்கட்குப் புரிந்து இரட்சிக்கின்றதாகும். இதுபற்றியே, ஆக்கிப் பணித்த அறம் போற்றி என்றுள்ளார் ஆசிரியர். இதுகாறும், இறைவன் உயிர்கட்குத் தத்துவங்களைக் கூட்டிக் காக்கும் அறநெறி கூறப்பட்டது. இனி, இறைவன், உயிர்கள் புரியும் வினைகளைக் கணக்கிட்டு ஒப்பிக்கும் முறைமை கூறப்படும்.

8. 'வேட்கைமிகும்' என்பதுமுதல் 'படிபோற்றி' என்பதுவரையில் ஒருதொடர்.

இறைவன், உயிர்களின் வினைக்கணக்கைப் படிசெய்முறை

வேட்கை மிகும் :

புத்தி என்பது ஒரு விஷயத்தை நிச்சயிப்பது. அதனை அங்ஙனம் நிச்சயிக்குமாறு தூண்டுவது, 'யான் நிச்சயிப்பேன்' என்று எழும் ஆங்காரமாகும். ஆகவே, புத்தியின் இராசதமிக்குத் தோன்றுமது ஆங்காரமாம், இந்த ஆங்காரமென்னும் தத்துவம் ஒருப்பட்டெழுந்தாலன்றிப் புத்திதத்துவம் விஷயத்தினை நிச்சயித்தல் நிகழாது. யான், இன்னன் ஆவேன் என்னும் இயல்பிற்றாய்ப் புருடனிடத்தே தோற்றுவது ஆங்காரமாம். இஃது இன்னது என்னும் துணிபிற்றாய் விஷயத்தினிடத்தே தோன்றுவது புத்தி எனப்படும். இங்ஙனம், ஒருப்பட்டு ஆங்காரதத்துவம் புருடன்கண்ணே மிகுவதே, வினைகளின் ஈட்டத்துக்கு வித்தாய் நிற்றலால் ஆசிரியர் வேட்கைமிகும் என்று கூறித் தொடங்கலுறுகின்றார் ஈண்டு என்க. இந்த ஆங்காரமுனைப்பால்,

இறைவன், சகலாவத்தையில் எல்லாக்கருவிகளையும் கூட்டி நடத்துகின்றான் என்கிற நினைப்பு மறந்து போகின்றது. இதனாலே, இறைவன் புரியும் உபகாரம், ஆன்மாக்களால் எண்ணிப்பார்க்கப்படுவதில்லை. இதனாலேயே "யான், எனது என்னும் செருக்கு" அறுக்குமாறு நீதிநூல் உயிர்கட்கு நினைப்பூட்டலாயின. அதனைத் திருக்குறள் "பொச்சாவாமை உலகத்து எப்பால் நூலோர்க்கும் துணிவு" என்று கூறிக்காட்டுதல் கொண்டு உணரலாம். சுற்றத்தோடும் சூழ்ந்துள்ள அரசற்குப் பொச்சாப்புத்தன்மை இருத்தல் பயன் படாமை போலவே, கருவிகளோடு கூடி அரசொப்ப இருக்கும் ஆன்மாவுக்கும் இச்செருக்கு (சோர்வு) இருப்பின் வினை அறாது; மலம் நீங்காது; இன்பம் உறாது என நாம் இங்குத் தெரிதல் நன்றாம்.

நமக்கெல்லாம், பசி என்ற நோய் ஒன்று இல்லாவிட்டால் நாம் ஏதும் தொழில்செய்யவேண்டி இராது. ஒருவருக்கொருவர் கட்டுப்படவும் தேவை இராது. இந்தத் தொல்லைகள் யாவும் பசியால் நாம் அடைவன ஆகும். இதனாலேதான், சித்தர்கள் பசியில்லாமைக்குக் கற்பம் தேடி முயல்வராயினர். "பசிநோய் செய்த பறிதான்" என்றுரைத்துக்காட்டினர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். "பசிப்பிணி என்னும் பாவி" என்றார் பிற புலவரும். ஆகவே, இப்பசிநோயை நீக்கிக்கொள்ள வேண்டியே, "சேவித்தும் சென்றிரந்தும்" என்னும் பாடற்கிணங்கப் பற்பல வழிகளில் பாடுபடுகின்றோம். பறவைகள் போலப் புசிப்புக்கும் பசிப்புக்கும் கவலையற்று நாம் வாழமுடியவில்லை. இந்தப் புசிப்பினை ஆதாரமாகக்கொண்டு எழுவனவே எல்லாப் பிரபஞ்ச

ஆசைகளும். ஆகவே, சகலாவத்தையில், நம்மைக் 'கடவுள்மறதி'க்கு உள்ளாக்கித் துன்புறச் செய்வது உண்டி வினையேயாம் என்பது தெளிவாகிறது. இது பற்றியே, உண்டிப் பொருட்டால் என்றனர் ஆசிரியர்.

மற்றும், பசி நோயானது, ஏனைய நோய்களைப் போன்று ஒருமுறை சிகிச்சை செய்தலால் தணிந்தொழி வதுமன்று. பிறப்புமுதல் இறப்புவரையில் திருப்தி செய்ய முடியாதது பசிநோய். ஆனதுபற்றியே இந் நோயினை அவ்வப்போது தணித்தற்கு உதவுபவர்களைப் பெரிதும் பாராட்டியுள்ளனர் பெரியோர். "அன்ன தானம்" சிறந்த தானமாகக் கருதப்படுகின்றது. "உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" ஆவர் என்கின்றனர். உலகம், இந்தக் கொடிய பசிநோயை மாத்திரம் எவர்க்கும் எழாதபடி போக்கிவிட முயன் றிடின், பிறகு எந்தவிதமான கேட்டினையும் எய்தாது. நல்ல அரசாங்கம், நாட்டினை நன்னெறிப் படுத்த எண்ணினால், அது புரியவேண்டிய முதற்கடமை உணவு யாவர்க்கும் வேளைக்குவேளை தட்டின்றியும் முட்டின்றியும் கிடைக்கும்படிச் செய்யவேண்டிய தொன்றேயாகும். பசியானது, ஓயாது வயிற்றிடையே மண்டி எரியும் தகையது. இதனை அவ்வப்போது அடக்காவிட்டால், மானம் முதலாம் மனிதச் சிறப் புக்கள் யாவும் பறந்து போய்விடும் என்பர் ஔவை மூதாட்டியார். இது குறித்திடவே நம் ஆசிரியர், பசிக்கு அஞ்சாப் பான்மையராகத் தான் இருந்தும், "ஒருகால் அவியாது எரியும் பெருந்தீ" என்றுரைத்துக் காட்டியுள்ளார். இவர்தம்திருமடத்தே அடியார்கட் கெல்லாம் அன்றாடம் நடைபெற்றுவந்த அன்னப் படையலும் இங்கு நாம் சிந்தித்துப்பார்க்கும் சிறப்பு

உடையதாம். இந்தச் சந்தர்ப்பத்திலே, நாம், திருவாவடுதுறைத் திருமடத்தே தோன்றிய நாள்முதல் தொடக்கருமல் மடைப்பள்ளியிலே மண்டி எரிந்து பதமாக்கி எப்போதும் எவருக்கும் உணவு கிடைக்கச் செய்யும் சிறப்பினையும் சிந்தித்தல் பொருந்துமன்றே!

மேற்கூறப்பட்ட, இத்தகைய அவியா நெருப்பினை அவிக்க முயன்றே எல்லா உயிர்களும் பாடுபடுகின்றன. இங்ஙனம் படும்பாடுகள் எல்லார்க்கும் ஒரேமாதிரியில் இல்லை. அவரவரும் தத்தம் திறமைக்கு ஏற்ப முயல்கின்றனர். இங்ஙனம், அவரவரும் முயலும்போது அவரவர்களுடைய ஆங்காரம் தலைதூக்கிநின்று தொழிலாற்றுகின்றது. ஆங்காரம் தலைதூக்கி நின்ருலும், பயனடைதல் அவரவர் வினைப்படியே நிகழ்கின்றது. "ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர் நாழி முகவாது நால் நாழி" என்ற வரிகளை இங்கு எண்ணிப் பார்த்தால் இந்த உண்மை தெளியவரும். இப்படி உயிர்கள், தத்தம் வினையளவாக ஏருமலும் குறையாமலும் பயனடையப் பெறுவதற்கு இறைவன் உயிர்களோடு ஒருங்கிருந்து பாகுபாடுசெய்து உதவுகின்ருன். இப்படி அவன் செய்துதவாவிட்டால், அவரவரும் தம்தம் முயற்சிப்பயனடைதலில் குழப்பமும் சிக்கலும் நேரிட்டு உலக நடைமுறை பாழ்பட்டுப் போம். பிறகு, சகலாவத்தையால் ஏற்படவேண்டிய நன்மை இராது. இவற்றையெல்லாம், "பெரும் தீ மாற்றுதற்குத் திண் திறல் சேர் வல்லார்கள் வல்ல வகையால் தொழில்புரிதல் எல்லாம் உடனே ஒருங்கு இசைந்து" என்று ஆசிரியர் கூறிக்காட்டும் இடங் கொண்டறியலாம்.

இப்படி, நாம் ஆங்காரஞ் செலுத்தும்வழியே, அவியாப் பசிநோயை அவித்தற்கருதிப் பலப்பல வித மான தொழில்களை நம் விருப்பப்படிப் புரியும்போதே வினையின் புதுவிளைவு ஏற்படுகின்றது. "உள்ளதே போதும்" என்னும் அமைவுள்ளம் இன்மையால் "யான் யான்" எனக்குளறி ஒன்றைவிட்டு ஒன்றுபற்றி ஆகாமியம் எனப்படும் புதுவினையினைப் புரிந்து கொள் கின்றோம். இங்ஙனம், அவரவர் நினைவின் வண்ணமெல் லாம் இறைவன், தன்னைக் காட்டாமல் பின்னிருந்து உதவுதல்செய்தே வருகின்றானவன். இதனை, சொல் காலை முட்டாமல் செய் வினைக்கும் என்ற இடங் காட்டும்.

நாம் இப்படிப் பலபல வழிகளால், பலபல பிறப் புக்களிலும் செய்த வினைகளின் தொகுதியே சஞ்சிதம் எனப்படும். இச்சஞ்சிதம் அத்துவாக்கள் ஆறினும் கட்டுப்பட்டிருப்பதாகும். எனவே, நமக்கு வினை வந்து சேரும் வழிகளாக இந்த அத்துவாக்கள் உள்ளனவாம் என்னலாம். ஓர் ஊருக்கு ஆறு வழிகள் இருப்பதை ஒக்கும் ஒருவருக்கு வினையுறும்வழிகளாக ஆறு அத்துவாக்கள் இருத்தல். இவ்வத்துவாக்கள் வினைக்கு வாயிலாக இருத்தல் காரணத்தினால்தான் பின்னே வினைநீக்கத்தின் போது அத்துவசுத்தி செய்யப்படு கின்றதாகும்.

பொதுவாக நோக்கின் முயற்சியானது செயல் வகையால் ஒருவர்க்கு அநுபவமாகிறது. அதுவே கருத்துவகையால் வினைக்கு வித்தாகிறது என்னலாம். பிராரத்த அநுபவத்துக்கு முயற்சியே அவசியமாகிறது. முயற்சி இரண்டுவகைப்படும். ஒன்று பிராரத்துவ

அநுபவத்துக்குத் துணையாகிற முயற்சி. மற்றொன்று சஞ்சிதகன்மம் பக்குவமாதற்குத் துணையாகிற முயற்சி. முன்னையது பயனோடு கூடியது. பின்னையது பயனோடு கூடாதது. அதாவது, சஞ்சித கன்மமானது புத்தி தத்துவமும் மாயையும் பற்றுக்கோடாகக் கொண்டது. புத்தியினிடத்து வாசனாரூபமாக இருக்கும். அது மேன் மேலும் முயற்சிக்கப்பட்டு இனி முயற்சிக்க வேண்டுவ தில்லை என்னும் நிலையில் பிராரத்தமாய்ப் பலனுக்கு வரும். நான் செய்தேன் என்னும் கருத்துவகையால் செய்கின்ற இதம் அகிதங்கள் ஆகாமியமாகும். ஆகா மியமாவது நல்வினை தீவினை என்னும் முயற்சி. சஞ்சித மாவது அந்த முயற்சி பலனுக்கு வாராமல் புண்ணிய பாவமாய்ப் புத்திதத்துவத்திலும் மாயையிலும் கட்டுப் பட்டிருத்தலாம். பிராரத்தமாவது, முயற்சியின் பய னை இன்பதுன்ப அனுபவமே ஆகும். உதாரணமாகச் சொன்னால், வித்தை நிலத்தில் விதைத்தல் ஆகாமியம். அவ்வித்து, விதைத்தவன் நிலத்தில் பலன்தருமளவும் தங்கியிருத்தல் சஞ்சிதம். பலன் அனுபவத்துக்கு வருதல் பிராரத்தமாம். "மேலைக்கு வித்தும் ஆகி" என்னும் சித்தியார்ப் பாடல் இங்குப் பார்த்தறிதல் நன்றாம். எனவே, வினையினது இதம் அகிதங்களை இறைவனே அறிவன். அவன் தனது கருணையினால் அநுக்கிரக நிக்கிரக மூலமாக இன்பதுன்பங்களைப் பய னாக உயிருக்குத் தருபவனாவன். "இதம் அகிதங்கள் எல்லாம் இறைவனே ஏற்றுக்கொண்டு இங்கு இதம் அகிதத்தால் இன்ப துன்பங்கள் ஈவன் அன்றே" என்பது சித்தியார். இதனையே ஆசிரியர், பட்டோலை தீட்டும் படி போற்றி எனக் கூறிப்போற்றியுள்ளார். இங்ஙனம் இறைவன் கருணையினால் செய்யானையின்

இன்ப துன்பங்கள், இதம் அகிதங்களின் அளவிலே, செய்தவனைவிட்டு மாறி வேறொருவனுக்குச் சேராமல் விளைந்து அநுபவத்துக்கு வருதல் அரிதாகிவிடும் என்க.

9. 'நட்டோங்கும்' என்பதுமுதல் 'மறம் போற்றி' என்பது வரையில் ஒருதொடர்.

இறைவன் உயிருக்குப் புண்ணிய பாவ பலன்களைக் கூட்டும் முறைமை

நட்டு ஓங்கும் இந்நிலைமை:

ஆன்மாக்கள் செய்த இருவினைக்கும் இறைவன் தவறாமல் கணக்குவைக்கின்றான் என்பது முன்னே கூறப்பட்டது. அக்கணக்கின்படியே இன்ப துன்பப் பலன்களை எவ்வெவ்வழியில் ஆன்மாக்களுக்கு இறைவன் கூட்டுவிக்கின்றான் என்பது இனிக்கூறப்படும் ஒன்பதாம் போற்றிப்பகுதியதாகிய இதன் விஷயமாகும்.

இருவினைகளைப்புரிதல் மானிடர்மாத்திரமே செய்கின்ற செயல் என்று நாம் நினைக்கலாகாது. உடம்பிலே பொருந்தியிருக்கும் கணக்கற்றவையான எல்லா உயிர்களுமே செய்கின்றனவாம். ஆதலால், எல்லா உயிர்களினுடைய வினைகளையும் நிச்சயித்து அறிந்து ஆயுள்முடிவில் உயிர்களை அவைதாங்கி வினையாற்றி நின்ற தூல உடம்பினின்றும் பிரித்தல் செய்கிறான் ஈசன். இந்தத் தூலசரீரத்துக்குள்ளே இருப்பது சூக்கும சரீரம் ஆகும். இந்தச் சூக்குமஉடம்பு தூலஉடம்பு போல அதனோடு நீங்கிவிடுவதன்று. அது உயிரோடு தொடர்வதாகும். இதற்குப் புரியட்டகசரீரம் என்பது

ஒருபெயராகும். இந்தச் சூக்கும உடம்பிலிருந்து வெவ்வேறுவகையான உடம்புகள் உண்டாகும். சுவர்க்க நரக அநுபவங்களின் பின்னர் மீளவும் சூக்குமஉடம்போடு கூடி அணுருபமாய் (அணு=சூக்குமஉடம்பு) உயிர் மண்ணுலகின் மாதாவின்யோநி சேர்ந்திடும். ஆகவே சூக்கும உடம்பினின்றும் இன்ப துன்ப அநுபவங்களுக்கு ஏற்றவிதமாய் அமையும் உடம்பை யாதனுசரீரம் என்பர். யாதனுசரீரம் என்பது சூக்கும உடம்பின் காரியம் ஆகும். அது வினைப்பயன்களை அனுபவிப்பதற்குக் காரணம் ஆகும். சுவர்க்கத்தில் பூதசார உடம்பாகி இன்பம் துய்ப்பதும், நரகத்தே யாதனுசரீரமாகவே நின்று வேதனையுறுவதும் சூக்கும உடம்பின் காரியமேயாகும். எனவே சூக்கும உடம்பு ஏற்கும் பூத உடம்பு பூமிக்கும், பூதசார உடம்பு சுவர்க்கத்துக்கும், யாதனு உடம்பு நரகத்துக்கும் உரியன என நாம் தெரியலாம். துறக்க நிரயங்களுக்கு உயிர் செல்லுகையில் சூக்கும உடம்பின் காரியமாகிய யாதனுசரீரத்தைப்பற்றியே செல்லும் என நாம் அறிதல் வேண்டும்.

பிராரத்த அனுபவம் எவ்வளவு காலம் நிகழ வேண்டுமோ அவ்வளவு காலம்வரையில் உயிர், தூல உடம்பிலே நின்று பிறகு நீங்குகிறது. தம் விருப்பப்படி எவரும் இவ்வுலகில் வாழ்ந்திருத்தலைக் கண்டிலோம். எனவே, மரணம் என்பது நம்வசத்ததாக இல்லை என்பது தெளிவு, "இறப்பதனுக்கு என்கடவேன்" என்று அடியார்கள் கூறுதலும் இங்கு ஒப்பிட்டுக் காணத் தகுவதே. "தரியான் ஒருகணம் தறுகணாளன்" என்ற கபிலரகவல் வரியும் இதனை உணர்த்தும். ஆகவே,

நம்வசப்படி அமையாத மரணமானது, இறைவன் அருளாணைவண்ணம் நடைபெறுவதென்பது தெளியப் படுதலே முறைமை ஆகும்.

இங்ஙனம், மரணம் எய்திய பின்னர், அவ்வுயி ரானது செய்துள்ள நல்வினை தீவினைகளுக்கு ஏற்றபடி பலன்களை அனுபவிக்கவேண்டியுள்ளது. இந்த வழி யிலும், இறைவனருளே துணை நிற்கின்றதாகும். நல் வினையால் பாகப்பட்ட உயிர்கள், அப்பலப்பிராப்திப் பற்றுடைமை காரணமாகப் பூதசாரசரீரமாகிய திவ்ய சரீரத்துடனே கூடி, விஷ்ணு உலகில் விஷ்ணு ரூபமா யும், பிரமலோகத்தே பிரமா ரூபமாயும், நாகருலகில் தேவேந்திர ரூபமாயும், இன்னும் பற்பல அமரர்களாகி யும், தத்தம் நல்வினைப் போகானுபவங்களை அனுபவிக் கின்றன. பூமியிலே, தோற்றம் எடுப்பின் இராச ஐசுவரியங்களுடனும் சுகபோகங்களுடனும் வாழு கின்றன. இப்படியே புண்ணியப்புலன் உள்ளஅளவும் ஏற்ற இடங்களில், ஏற்ற சரீரத்துடன் ஆன்மாக்கள் நல்வினையனுபவம் துய்க்கின்றன. இதனாலேதான், திரு வள்ளுவரும், "இலர் பலராகிய காரணம் நோற்பார் சிலர்; பலர் நோலாதவர்" என்று தவம் என்னும் அதிகாரத்தே கூறியுள்ளாராவர்.

இங்ஙனம், நல்வினைசெய்த உயிரானது நாராயண புண்ணிய கர்மபலனைப் புசித்து முடியுமாறு உதவு பவன் இறைவனே ஆவன். இப்போகானுபவத்துக் கான சரீரமாற்றமும், இடமாற்றமும், காலவரையறை யும், உயிரானது தானாகவே செய்துகொள்ளுவது இயலாது. அங்ஙனம் தானாகவே செய்துகொள்ள

இயலுவதாயின், சுகபோகச் சூழலிலேயே உயிர் எப்போதும் தங்கியிருக்கக்கூடும். அப்படி இயலாமையால், இறைவனுதவியின் தேவை இவ்விஷயத்திலும் உண்டென்பது உணரப்படும்.

இப்பால், பாவகன்ம பலனை உயிர் அனுபவிக்க வேண்டிநேரிட்டால், அதற்கு ஏற்றவையான இடங்களிலே வாழவேண்டியதாகிறது. அப்போது, கருத்தாவினுடைய ஆணையினாலே மரணத்தைச் செய்திடுவதில் வெற்றிப்பாடுடைய யமதூதர்கள் உயிரைக் கிட்டிப் பாசத்தாற்கட்டிப் பிடித்துச்சென்று, தங்கள் தலைவனை இயமராஜன் முன்பு விடுகின்றனர். அப்போது, இயமதருமன், அவ்வுயிரை நோக்கி இரக்கம்கொண்டு, இன்னமும் பிறவாநெறி அடையவேண்டும் என்ற உணர்வு பிறக்கவில்லையோ என்று கேட்டு நினைப்பூட்டி, நடுவு நிலைமையான பேச்சுக்களைப் பேசி, அப்பால், அவ்வுயிர் புரிந்துள்ள பாவங்கட்குத் தக்க தண்டனைச் செயல்களைப் புரியுமாறு கிங்கரர்கட்கு ஆணையிடுகின்றானவன். இப்படி இறைவன் உயிர்களை இயமதண்டனைக்கு உள்ளாக்குவதும் அவனுடைய மறக்கருணையினால்தான் ஆகும். எப்படியாவது. உயிர், மலநீக்கம் பெற்று ஞானமெய்தித் தன் திருவடியிற் சேரவேண்டும் என்பதே இறைவன் திருவுள்ளம் ஆகும்.

இவ்வாறு பற்றிச்செல்லுகின்ற இயமகிங்கரர்கள், பாவம் பண்ணின உயிர்களை எவ்வெவ்வாறு தண்டிக்கின்றனர் என்பதை ஆசிரியர் பலவாறு கூறிக் காட்டியுள்ளாராவர். தண்டனை அடையும் உயிரானது, அவ்வனுபவத்தை அப்போது தான் அடையப்பெற்றுள்ள

யாதனுசரீரத்தின் நின்று துய்க்கும் என்பர். இந்த உடம்பும் இறையருளால் விளைவிக்கப்படுவதேயாகும். உயிர்களை அவை செய்த பாவங்கட்கு ஏற்பச் செக்கி லிட்டு ஆட்டியும், தீயில் வீழ்த்திக் கொளுத்தியும், நெருப்புத்தூணைத் தழுவச்செய்தும், நாராசத்தைக் காய்ச்சிக் காதுகளில் ஊற்றியும், நாக்கை அறுத்தும், அவரவர் உடம்பை அவரவரே அரிந்து தின்னச்செய்து அடித்தும், ஆழ்ந்த நரகங்களிலே அழுந்தச்செய்தும், தங்களுடைய கோபம் அடங்காதவராகி, ஒருநாள் போல் பலகாலம் உடன் இருந்து துன்புறுத்துவர். இந்தக் கொடுமைகளின் விரிவுகளையெல்லாம் கருட புராணம் முதலான புராணநூல்களால் அறியலாகும். தண்டிக்கத் தண்டிக்க ஒருவன் அதே குற்றத்தையும் அதுபோன்ற குற்றங்களையும் அடிக்கடி திரும்பத் திரும்பச் செய்வானாயின் தண்டிப்போர்க்குச் சினம் மூளுதல் இயல்பே. ஆதலால்தான் இயமதண்டனை கொடுமைவாய்ந்த ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. இச் செய்தியை, ஆசிரியர், வெற்றிக் கடுந்தூதர் எனவும், பின்னும் தம் வெம்கோபம் மாறாத வேட்கையர் எனவும் கூறிக்காட்டுகின்றாராவர். "கணிச்சிக் கூர்ம் படைக் கடுந்திறல் ஒருவன் பிணிக்குங்காலை இரங் குவிர்" என்று கூறிக்காட்டுகிறது புறநானூறு.

கருணையே திருவுருவாக்கொண்டுள்ள இறைவன், சிற்றுயிர்களை இப்படி இயமகிங்கரர்களிடம் காட்டிக் கொடுத்துத் துன்புறச்செய்வது அறம்புரி நீர்மை ஆகுமா என்று நாம் கருதக்கூடும்.

தாங்கள் த்வம் முயன்று அரிதின் பெற்ற தனி இளங்குமரன் பிளவைநோய்க்கு ஆளாயிருப்பதாக

அவனது தாய்தந்தையர் காண்கிருர்கள் என்று வைத்துக்கொள்வோம். நோயற்ற நிலையில் இருக்கும்போது அப்பிள்ளையைத் தம்பாற்கொண்டு குலாவி மகிழ்கின்றனர். ஆனல், மேற்குறிப்பிட்ட நோயால் தம்மகன் துயரப்படுவதைக் கண்டால், அத்துயரை நீக்கக்கருதி அந்தப்பிள்ளையைத் தக்க மருத்துவரிடம் தந்து ஒப்படைத்து அறுவை, சுடுதல், ஊசியிடல் முதலான வலிதரும் சிகிச்சைகளைச்செய்து நன்னிலைப்படுத்தும்படி விட்டுவிடுகின்றனர். இதனுல், பெற்ருேருக்கு அம்மகன்மேல் அன்பில்லை என்று நாம் கருதிவிடக்கூடாது. வைத்தியர் புரியும் சிகிச்சைகள் வலியுறுத்துவனவாயிருப்பினும் நோய்நீக்கி இன்பத்தையே அப்பிள்ளைக்கு முடிவான பயனுகத் தருகின்றன. இதனுல், மருத்துவரும் இரக்கத்தில் குறைந்தவராகார். கண்படலத்துக்கும் இவ்விதமே உரித்தல் முதலான பரிகாரங்களை மருத்துவர் புரிந்துதவுவதும் முடிவில் நன்மை பயப்பதேயாகும். மற்றும், பெற்ருேர்கள், அம்மருத்துவருக்குப் பணம் முதலன வெகுமானிப்பதும் பிள்ளையின் மீதுள்ள பாசத்தின் ஆயசெயலே ஆகும். இப்படிப் பிள்ளையை வைத்தியரிடம் ஒப்படைசெய்து சுகப்படுத்தாவிடில் அப்பிள்ளை உயிர்பெற்று வாழ்ந்து பெற்ருேருடைய பெருத்த ஆஸ்திக்கு அனுபவம் உடையவனுக ஆகமுடியாதென்பது தெளிவாம்.

இந்தவிதமாகத்தான், ஆன்மாவின், வினைநோயை நீக்கும் பொருட்டு இறைவன், அதனைக் கூற்றுவர்பால் ஒப்படைத்தல் நிகழ்வதாம். "மண்ணுளே சிலவியாதி" என்னும் சித்தியார்ப்பாடலுரையை இங்குப் பார்த்தல் நன்ரும். வரும்நோயின் குறிப்பு அறிவார் மண்டு எரியில் காய்ச்சி சுட அறுக்க கண் உரிக்க நல்நியம்

ஈய்த்து தாய் தந்தை இன்புறுதல் என்று இவ் வாசிரியர் கூறுதல் மேலதை உட்கொண்டதாகும் என்னலாம்.

இப்படியே, நல்ல பெற்றோர்கள், தங்கள் மைந்த னின் தீவினையைப் பரிகரிக்கும்பொருட்டுத் தாமே தண்டித்தலும்புரிவர். "கொலையிற் கொடியாரை வேந் தொறுத்தல்" என்னும் குறட்பாவிலும் இக்கருத்துப் பொருந்தியிருப்பதாகும். உதாரணமாகச் சொல்லப் புகுந்தால், மனுச்சோழன், மந்திரிமார் முதலியோர் என்னென்னவோ சமாதானங்களும் சாத்திர நீதி களும் காட்டிக் கூறினபோதும் அவற்றையெல்லாம் கேளாமல், தன் மகனை, அவன் பசுவின் கன்றைக் கொன்ற குற்றத்துக்குத் தண்டனையாம்படித் தேர்க் காலிற் கிடத்தி ஊர்ந்தான் என்பதைக் கொள்ளலாம். இப்படி மனுச்சோழன் துணிந்தமையின் காரணம் யாதெனில், தன்மகன், இப்போது தண்டிக்கப்படாமல் விடப்பட்டால், பின்னே மறுமைக்கண் இறைவனாணை யால் இயமகிங்கரர்களிடம் அகப்பட்டு வாதைப்படுவா னென்றும், அப்படி அவன் வாதைப்படப் பார்த்திடுதல் தந்தையாகிய தன்கடனாகாதென்றும் கருதியமையே ஆகும். இதனால், மைந்தனிடம் மனுச்சோழனுக்கு இருந்த பரிவு அறியப்படும். இதனையே, நம் சேக்கிழார் சுவாமிகள், "அனகன் அரும் பொருள் துணிந்தான்" என்று கூறிக் காட்டியுள்ளாராவர். அனகன் என்ற சொற்பிரயோகத்தால் தன்மைந்தனுடைய பாவத்தை ஈண்டே தானே நீக்கிவிடத் துணிந்தான் என்பது புலப்படும். அரும் பொருள் என்பது தன் மைந்தனை இயமவாதைக்கு உட்படாதிருக்கச் செய்யுங்கருத்தினை உடைமை புலப்படுத்தும். துணிந்தான் என்பதால்

இதனின் மேம்பட்ட துணிவு எதுவுமின்மை தெரிய லாகும். இச்செய்தியை நம் ஆசிரியர், நமக்கெல்லாம் அரும்பொருள் விளங்கும் வண்ணம், வாய்த்த நெறி ஓடிய தேரின்கீழ் உயிர் போன கன்றுலே நீடு பெரும் பாவம் இன்றேநீங்கும் என நாடித் தன் மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே வழக்கு என்ற தொடர்களால் உணர்த்துகின்றாராவர். இங்கு, நெறி ஓடிய தேர், உயிர் போன கன்று, பாவம் இன்றே நீங்கும் என்ற இடங்களின் பொருள் நயங்களை அறிஞர்கள் சிந்தித்துப் பார்த்து மகிழலாகும். விரிப்பின் பெருகுதலஞ்சிக் குறிப்பாகக் கூறப்படலாயிற்று.

எப்படித் தன் மைந்தன் பாவ நீக்கச் செயலைத் தனக்குரிய தேருருளை நடாத்த, மனுப் பெற்றோன் கண்டு களித்தானோ அப்படியே, இறைவனுவான், தன் னுல் உடம்பு தந்து நடத்தப்பட்ட ஆன்மவர்க்க மானது பாவ நீக்கத்தைத் தன் ஆணையாகிய சக்கரம் நடாத்த (இயமனுதியர் புரிய) அதனுல் பாவ அனுபவம் தொலையப்பெற்றமை கண்டு களிகூர்கின்றுனுவன் என்னலாம். இங்ஙனம், சிவமும் சத்தியுமாய இறைப் பொருள் தனது பெருவல்லபத்தால் புரியாவிட்டால் உயிர்கட்கு மறக்கருணையால் விளையவேண்டிய பயன் இல்லாது துன்புற நேரிடும். “அருளினுல் உரைத்த நூலின்” என்னும் சித்தியார்ப்பாடல் இங்குப் படித்தல் நன்றும். இவ்வாறு உயிர்களைத் தண்டனைக்குள்ளாக்கி அறிவூட்டியுதவுதல் இறைவனது மறக்கருணை எனப் படும். இதுவும் உயிர்கள்பால் உள்ள அருள் காரண மாக நிகழ்வதாம். “அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார் - மறத்திற்கும் அஃதே துணை” என்பர் வள்ளுவனுரும். இதனை இங்கு நம் ஆசிரியர் வல்ல

கருணை மறம் போற்றி என்ற தொடரால் தெரிவித்துள்ளார் என்க.

10. 'பல்லுயிர்க்கும்' என்பதுமுதல் 'தரம் போற்றி' என்பதுவரையில் ஒருதொடர்.

இறைவன், உயிர்கள் நற்கதிபெறுமாறு சத்திநிபாதம் நிகழ்வித்தல்

ஆன்மாக்கள் உடலோடுகூடியிருக்கும் அளவும் அவற்றிற்கு நற்கதி இல்லை. உடலடைதற்கு அவற்றின் மலத்தால் விளையும் வினைகள் காரணமாகின்றன. ஆகவே, அந்தமலம் ஒழியப்பெற்றாலல்லது வினைபுரிதல் ஓயாது. வினை ஓய ஓய மலம் தேயலுறும். மலமானது, திடீரென்று நீங்கிவிடுவதன்று. படிப்படியாக உயிர்களின் செய்வினையும் உவர்ப்பும் நிகழநிகழ நீங்கும். இப்படிப்பட்ட நீக்கம் நிகழ்வதற்கும் இறைவனுடைய கருணையே தேவையாகின்றது. பெத்தத்தே எப்படி இறைவன் அருள் உதவுகின்றதென்பதை மேலே கூறப்பட்ட ஒன்பது வகைகள் தெரிவிக்கின்றன. இனி, முத்திநிலைக்கான மலநீக்கம் அடைவிக்கின்ற இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் குரு திருவருள் எனப்படும் படிமுறைகள் இறையருளால் எப்படி நிகழ்வுறுகின்றன என்பது கூறப்படும். ஆகவே, பெத்தநிலையிலே உதவியருளுதல் போலவே, முத்தி பெறவேண்டிய நிலைமையிலும் இறையருள் துணை புரிந்தேதிருகின்றது என்பதை நாம் அறியவேண்டும். ஆனதுபற்றியே, "நில்லாத நிணக்குரம்பைப் பிணக்கம் நீங்க, நிறைதவத்தை அடியேற்கு நிறைவித்து என்றும் செல்லாத செந்நெறிக்கே செல்விப்பானை" என்று

கூறியருளித் தெரிவிக்கின்றார் திருநாவுக்கரசர். இதற்கு நாம், முதலில் கடவுள் ஒருவர் உண்டென நம்ப வேண்டும். அப்பால், அவர் அருளிச்செய்த வேதாக மங்களை நம்பி ஓதவேண்டும். பிறகு, அவற்றில் கூறப் பட்டுள்ள நன்னெறியில் ஒழுகவேண்டும். அதாவது, பசுபுண்ணியம் சிவபுண்ணியங்களிலே முறையே வாழ்க் கையை நடத்தவேண்டும். பலனை உத்தேசிக்காதபடி சிவபுண்ணியங்களிலே ஈடுபடும்போது இருவினை ஒப்பு முதலிய தகுதிப்பாடுகள் வந்தடையும். இவற்றால், மலத்தின் வன்மை தேயலுறும். இப்படியான அவதி யிலே இறைவன் குருவடிவாக வெளிப்பட்டு உபதேசம் அருளுவன். பிறகு அந்நெறியே நின்று ஜீவன்முத்திநிலை எய்தப்படும். அப்பால் பரமுத்தியானது தேகம் நழுவும் போது தானே நிகழ்வுறும். இந்தப் பரமுத்திநிலை எய்து வதே நம்முடைய வாழ்வின் மேலான குறிக்கோள் ஆகும். ஆகவே, இந்தச் செந்நெறியிலே நம்மை நடப்பித்துதவுபவன் சகல புவன கர்த்தாவாகிய சிவ பரம்பொருளே என நாம் தெரிந்திடுதற்பொருட் டாகவே ஆசிரியர் முன்னை முதல் என்ன முதல் இல்லோன் என்றுள்ளார்.

சிவம், அநாதிதொடுத்துச் சிருட்டித்தல் முதலான பஞ்ச கிருத்தியங்களை ஆன்மாக்கள்பொருட்டாகச் செய்தருளுகின்றது. இதனால், உயிர்களின் இருவினை களுக்குத் தக்கவாறு மாயா உலகங்கள் மாறி மாறி உதவியாம்படி செய்யப்படுகின்றது. இதன் விரிவெல் லாம் மேலே கூறப்பட்டன. இதன் பயனாகவே மலபரி பாக காலம் நேருகிறது. இப்படி, உயிரானது மலபரி பாகத் தகுதியடைந்த சந்தர்ப்பத்தை இறைவன் எதிர் நோக்கியிருந்து அறிகின்றான். அவனே, உயிரைச்

செலுத்துபவனுதலால், அவனுல் இச்செய்தி அறியப் படுதலில் வியப்பொன்றும் இல்லே என்னலாம். அப் போது, இறைவன், ஆன்மாக்களுக்குப் பெத்தத்தை நீக்கி முத்திக்காலத்தை நேர்ப்படுத்தி உதவுகின்ருன். இதுவே உயிர்கள் நற்கதிப்பாதையில் திரும்பும் கால மாம். இதனே ஆங்கிலத்தில் Turning point என்பர். இந்தச் சந்தர்ப்பத்தினே நம் ஆசிரியர், **பின் நரகம் சேராமே நல்ல நெறி எய்துவது ஓர் காலம்** என்று குறித்துக் காட்டியுள்ளாராவர்.

இவ்விதமான செந்நெறி மார்க்கத்திலே உயிரானது செல்லத் தலேப்படும்போது, சிவனடியாரைக் கண்ட பொழுது அவர்பால், காதலிக்குக் காதலனேக்கண்டால் உண்டாகும் அன்பினே நிகர்த்ததான அன்பு மீதூரப் பெறும், அச்சிவனடியார்களேச் சிவனேயே நேரிற் காணப் பெற்ருற்போல உள்ளம் எண்ணி மகிழ்வுறும். பின்னர், அவ்வடியார்க்குரிய குற்றேவல் புரியநேரும். இதனுல், உய்தி நெறியிலே உயிரானது செல்லத் தலேப் பட்டதென உணரலாம். இந்த ஒழுக்கமானது அசிந் திதனுக உள்ள சிவத்தைச் சிந்திதனுகக்கண்டு வழி படும் முறைமை ஆகும் என்பர். இப்படி, ஆன்மாவி னது அறிவானது, மலங்கழுவுதலில் தொழிற்படும். இச்சையானது, அன்பரோடு மருவுதலில் தலேப்படும். செயலானது திருவேடம், சிவாலயம் தொழுதலில் முற்படும். இப்படிப்பட்ட முறைமையில் நம் உள்ளம் ஈடுபடுமாயின், சிவத்தின் கருணே நம்மைச் செந்நெறிச் செலவினே மேற்கொள்ளச் செய்கிறதென்பதை உணர லாம். இதனே, **தன் அன்பரைக்கண்டு இன்பு உறுதல் உய்யும் நெறி சிறிதே உண்டாக்கி** என ஆசிரியர் கூறுமாற்ருல் அறியலாம்.

இனி, சித்தாந்த நெறிப்படிக் கூறப்புகின் நல்வினை, தீவினை என்னும் இரண்டும், பசுநல்வினை - பசுத்தீவினை எனவும், பதிநல்வினை - பதித்தீவினை எனவும் ஒவ்வொன்றும் இரண்டுவிதப்படும். பசுநல்வினை என்பது பசுவைநோக்கிச் செய்யப்படும் நல்வினையும் பசுத்தன்மை கெடாத நல்வினையும் ஆம். அதாவது, பிற உயிர்களுக்கு நன்மைசெய்தல் பசுவை நோக்கிச் செய்யும் நல்வினை எனப்படும். அப்படிச் செய்யும் போது சுவர்க்க முதலான பயனை விரும்பி நன்மை புரியின் அது பசுத்தன்மை கெடாத நல்வினை எனப்படும். (தீவினைத்திறம் இதனின் நேர் மாறுபாடு உடையதாகும்.)

இப்பால், பதியை நோக்கிச் செய்யும் நல்வினை யாவது சிவாலயத்துக்கும், சிவனடியாருக்கும், தேசிகருக்கும் வேண்டும் திருப்பணி செய்தலாம். இது சாதனங்கள் நான்கில் சரியை எனப்படும். பதியின் தன்மையை அடையச்செய்யும் நல்வினை என்பது ஞானகுருவை வழிபட்டு ஞானசாதனங்களைக் கேட்டு அவற்றை அநுட்டித்தலாகும். இது சாதன நான்கனுள் கிரியை யோகம் ஞானங்களில் அடங்கும். வற்றின் மாறுனவை தீவினைகளாம். பாசநல்வினை, பாசத்தீவினை என்பனவும் உண்டு. மனைவி மக்கள் முதலிய தொடர்புடையோர்க்கு நன்மைபுரிதல் பாசநல்வினை எனப்படும். அவர்கட்குத் தீமைசெய்தல் பாசத் தீவினையாகும், இவ்வாறெல்லாம் உயிரானது செய்யும் திறனறிந்து சிவபுண்ணியத்தினைப் புத்தி பூர்வத்தானும், அபுத்தி பூர்வத்தானும் - உபாயச் சரியையானும் உண்மைச் சரியையானும் படிப்படியாகப் புரிந்து முன்னேறும். ஆன்மாவினிடம் வினையை அநுபவிக்கும்

சத்தியுள்ளதேயல்லால், வினையை ஆற்றுஞ்சத்தி இலது. அது இறைவனால் அமைவது. இரும்பைக் காந்தம் இழுக்கும் சத்தியைப்பெற்றுள்ளது. ஆனால் எங்கோ கிடக்கும் இரும்பைத் தன் எதிரிலே கொண்டுவரும் ஆற்றல் அதற்குக் கிடையாது. ஒரு செடியில், பின்னே மலராகி மணம் கமழ இருக்கும் மொட்டு, பையப் பையப் பக்குவமடைவதுபோலவே ஆன்மாவினுக்கு மலபரிபாக நிகழ்ச்சிநடைபெறும், இச்செய்தி, முன்னைநாள் மொட்டாய் உரு ஆம் முறைபோல என்று ஆசிரியரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனி, மலபரிபாக நிகழ்ச்சிக்கண் சிவம், ஆன்மாவினை நல்ல சிவசமயத்தில் பத்தியொழுக்கம் மிக்க இடத்திலே முதற்கண் பிறப்பிக்கும். இத்தகைய சூழ்நிலைதான் ஆன்மா நற்கதி அடைவதற்கு முதற்கண் அமையவேண்டுவதாகும், பெரியாழ்வாருடைய திருமகளாராக வளர்தற்கான சூழ்நிலை அமையப் பெற்றமையால்தான் ஆண்டாள் நாச்சியார், "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்றுரைக்கும் துணிவு தோன்றப்பெற்றுப் பின்னர்த் திருவரங்கப் பெருமானையே அடையவும் பெற்றாராவர். சூழ்நிலையால் நன்மை ஏற்படும் என்பதற்கு இவ்வரலாறு சான்றாகத் தரப்பட்டதென்று கொள்ளுக. மற்றும், சமண சமயச் சூழ்நிலையில் முதற்கண் புகுதநேரிட்ட தருமசேனர், பின்னர் சைவசமயச் சூழ்நிலைப்பேற்றினை எய்தியே சமயாசாரியராம் பெருவாழ்வும், சிவப்பதமும் அடையப்பெற்றனர் என்பது யாவரும் அறியப்பெற்ற வரலாறாகும்.

இப்பால், உயிரானது பிறப்புத்தோறும் கன்மச் சுழலில் அகப்பட்டு வருந்திய அநுபவத்தால் இருவினை

ஒப்பு எனப்படும் நிலைமையை அடையப்பெறும். இதன் விரிவினை, இவ்வாதீனத்தின் இதற்கு முந்தின விளக்கக் கட்டுரைகளால் விவரமாக அறிதல் ஏற்புடையதாம். பக்கம் பல்காமைப் பொருட்டாக இங்ஙனம் சுருங்கக் கூறப்படுகிறது. என்றாலும், நன்மை தீமைகள் இரண் டையும் அறிவால் ஒன்றுபோல - ஒன்றாகக் கருதும் நிலைதான் இருவினை ஒப்புநிலை எனப்படும். இத்தகை யாளர்கள் ஓடும் பொன்னும் ஒப்பவே நோக்குவர். இதனால் மலம் பரிபாகமுறும். இதனையே ஆசிரியர் நாடும் வினை எல்லை இரண்டும் இடை ஒப்பில் என்று அருளியுள்ளார்கள். இந்த அறிவு நமக்குத் தலைப்படுவது சிவனருளாலேதான். இதன்பின் நிகழ் வதே சத்திநிபாதம் எனப்படுவது. இதனில். மந்தம் முதலான நான்குதர நிலைகள் உள. அவைகளை எல்லாம் ஈண்டு விரிப்பின் பெருகும். முந்திய நூல்களின் துணையாலறிதல் ஏற்புடைத்தாம்.

ஒருயிருக்கு. அது எடுத்துழன்ற எல்லாப்பிறப்புக் களுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கமைந்ததே இந்த மனிதப்பிறப்பு. இதனில் தீவிரதர சத்திநி பாதம் எனப்படும் திருவருட்பதிவு, இப்பிறப்பையும் அறுதியிட்டு உறுதிப் பொருள்களுள் உயர்ந்ததாகிய வீடுபேற்றினை நல்கும் திறத்ததாகும். இதனை, "இரு வினை நேரொப்பில் இன் அருட் சத்தி - குரு என வந்து குணம் பல நீக்கித் - தருமெனும் ஞானத்தால் தன் செயல் அற்றால் - திரிமலம் தீர்ந்து சிவன் அவன் ஆமே" என்னும் திருமந்திரப் பாட்டினால் அறியலாம். ஆகவே, திருவருட்பதிவு என்பது ஆசாரியமூர்த்தியின் வெளிப்பாட்டுக்குரிய அறிகுறியே ஆகும். சூரியன் வெளிப்படுவதன் முன்னம் கீழ்த்திசை வானம், அருண

உதயத்தைப்பெற்று இருள் நீங்கப்பெறுவது போல்வதாகும் இந்த ஆசிரிய வெளிப்பாடு என்னலாம். இறைவன், உயிர்களின் இப்படியான பக்குவமுதிர்ச்சியை எதிர்பார்த்துக்கொண்டே இருந்து சத்திநிபாத நிகழ்ச்சியை நிகழ்த்தியுதவுகின்றான். ஆதலால், இந்த உதவியையும் நாம் நினைந்து போற்றுவதே முறையாம். இதுபற்றியே ஆசிரியர், ஈண்டு சத்தி பதிக்கும் தரம் போற்றி எனக் கூறிப் போற்றி உள்ளார் ஆவர். இனி, இறைவன் ஆசாரிய மூர்த்தமாகி அருள்புரியும் தன்மையினைக் கூறுவோம்.

11. 'முத்தி தரும்' என்பதுமுதல் 'குணம் போற்றி' *என்பதுவரையில் ஒருதொடர்.*

இறைவன் மூவகை உயிர்கட்கும் குருவாகி அருளும் முறைமை

பொதுவாகப் பார்க்கின், உயிர்கள் யாவும் அவை பெற்றுள்ள மலங்களின் வன்மை மென்மைகளுக்கு ஏற்ப மூன்று வகைப்படும். இதனை, "உரை தரும் இப்பசுவர்க்கம் உணரின் மூன்றும்" என்பது சித்தியார். இம் மூவகை உயிர்களுக்கும் பதியை அடைவதற்கு உரிமை உண்டு. ஆன்மாக்களின் தொகை எண்ணிலடங்காதது ஆகும். இவ்வான்மாக்களில் உயர்வுடையோர் விஞ்ஞானகலர் எனப்படுவர். அடுத்த தரத்தினர் பிரளயாகலர் ஆவர். இவரின் இழிந்தோரே சகலர் எனப்படுவர். விஞ்ஞானகலர்க்கு ஆணவமலம் ஒன்றுதான் உண்டு. பிரளயாகலர், ஆணவம் கன்மம் என்ற இரண்டு மலங்களை உடையவராவர். சகலராகிய நம்மனோர்க்கு ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலங்களும் உள.

விஞ்ஞானகலர் தீவிரதர சத்திநிபாதத்தைப் பொருந்துதற்கு உரியராவர். ஆதலால், அவர்களுக்கு இறைவன், அவர்களின் அறிவின் உள்ளீடாகநின்று உணர்த்தி நிராதாரதிக்கை செய்து மலத்தை நீக்குவன். பிரளயாகலர், தீவிரம் தீவிரதரம் என்னும் இரண்டுவித மான சத்திநிபாதத்தைப் பொருந்துதற்கு உரியவராவர். இவர்கட்கு இறைவன், மான் மழு நாற்கரங்களுடைய திருமேனியோடு எதிர்ப்பட்டு, நிராதாரதிக்கை செய்து மலத்தை நீக்குவன். சகலவர்க்கத்து உயிர்கள், இரு வினையொப்புத் தரத்திற்கு ஏற்ப, மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் எனப்படும் நால்வகைச் சத்திநிபாத மும் பொருந்துதற்கு உரியவாம். ஆதலால், அந்தச் சத்திநிபாத முறைமைக்கு ஏற்பச் சகலர்க்கு உணர்த்த வேண்டியிருத்தலால், இறைவன் குருமூர்த்தியை ஆதாரமாகக்கொண்டு தோன்றிச் சாதாரதிக்கை செய்து மலத்தை நீக்கியருளுவன். அநாதி கேவலத்திலே ஆன் மாக்கள் எல்லாம் ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடப்பினும், மலத்தின் சத்தி பலவிதமான மறைப்புத் திறம் உடைமையால் மறைப்பும் பல்வேறு வகைப் படலாகி, ஆன்மவர்க்கம் இங்ஙனம் பிரிவுடையதா யிற்று. மற்றும், இம் மூவர்க்கத்து உயிர்களைப்பற்றிய பல விவரங்கள், இதற்கு முந்தின விளக்கக்கட்டுரை களில் தேவையான அளவு தரப்பட்டுள்ளமையின் இங்கு மிகுதியாக விவரிக்கப்பட்டில.

இங்ஙனம், இறைவன் முத்தி ஒன்றிலேயே நாட்ட முடையவராகிய ஆணவமெனும் ஒருமலத்து விஞ் ஞானகலர்க்கும் அருளும் திறத்தினை இவ்வாசிரியர், முத்திதரும் நன்னெறி விஞ்ஞானகலர் நாடும் மலம் ஒன்றினையும் அங்கிலேயே உள் நின்று அறுத்தருளி

என்று கூறியுள்ளமை காணலாம். நன்னெறி எனப் படும் சன்மார்க்கம் முத்தியளிக்கும் தன்மையதாதலின் அதன் திறம் புலப்படுமாறு முத்திதரும் நன்னெறி எனப்பட்டது. நாடும் மலம் என்றமையால் மலம் மறைத்தல்திறம் பெற்றுள்ளமை காட்டப்பட்டது. உள்நின்று என்றமையால், விஞ்ஞானத்தால் - விசேட ஞானத்தால் அதாவது பதிஞானத்தால் இறைவன், இவ்வகையினர் அறிவினுள் அறிவாய் நின்று உணர்த் துதல் தெரியத்தக்கதாம். அதாவது, இவர்களுக்குச் சுத்தமாயா காரியங்களாகிய கலாதி தத்துவங்களால் ஆக்கப்பட்ட சரீரத்தைக்கொடுத்து, அசுத்தமாயைக்கு மேல் வசிக்கும்படிச்செய்து உதவுவன் இறைவன் என்பர். இவர்களுக்கு எடுத்த ஒரேபிறப்பில் முத்திப் பேறு உளதாம். இதுகாறும் கூறியவிதத்தால், விஞ் ஞானகலர் ஞேயத்து அழுந்துமாறு அருளிறைபுரிதல் புகலப்பட்டது.

பின் அன்பு மேவா விளங்கும் பிரளயாகலருக்குத்
தேவாய் மலகன்மம் நீர்த்தருளி :

பிரளயாகலர்க்குக் கன்ம மலத்தைக் கூட்டி ஆணவமலத்தை நீக்கவேண்டியுள்ளது. இவர்கட்கு அசுத்தமாயா காரியமாகிய கலாதி தத்துவங்களால் ஆகிய சரீரம் கொடுக்கப்படுகிறது. இவர்கள் அசுத்த மாயையினிடையே வாழ்வர். இவர்கள் அன்பின் திறத்தால், இறைவன், பிரளயத்தின்போது தடத்தத் திருமேனிகொண்டு முன்னின்று அருள்புரிவன். அதா வது, இறைவன், மானும் மழுவும் சதுர்ப்புஜமும் காள கண்டமும் திரிநேத்திரமுமுடைய திருமேனிகொண்டு முன்தோன்றி இத்தகையவருடைய இருமலங்களையும்

நீக்கி அருள்வடிவாக்கி ஞேயத்து அழுந்தும்படி உதவு வன் என்பதாம். இவர்கட்குப் பிரளயத்தின் பின்னர், பிறவி இல்லை. கன்மமலம் இருத்தலால் ஒரு பிரளயத் துள் சில பிறவிகள் இவர்க்கு உண்டு என்பர். எனவே, பிரளயாகலரும் இறைவனருளாலன்றி முத்திப்பேறு எய்தல் இலர் என்பது தெரியப்படும்.

பூவலயம் தன்னின்று நீங்கா சகலர்க்கு அவர்போல் முன் நின்று மும்மலம் தீர்த்து ஆட்கொள்கை :

சகலர் எனப்படுவோர் மும்மலமும் கொண்டவ ராவர். மாயாமலம் இருத்தலால் மயக்கமுடையவ ராகிப் பிரளயம்வரையில் பல பிறவிகள் எடுத்துப் பிரளயத்தில் கலாதிகளுடன் ஒடுங்கிக்கிடந்து மறுபடி யும் உற்பவம் ஆகும்போது திரும்பவும் பிறந்து இப்படியே உழல்வர். இவர்கள் பிரகிருதிமாயையில் வாழ்பவர் ஆவர். தேவர் முதல் எறும்பு ஈருக உள்ள எல்லா உயிர்களும் சகலரே ஆவர். இவர்களுக்கு இறைவன் அசுத்தமாயா காரியமாகிய கலாதி தத்து வங்களால் ஆக்கப்பட்ட சரீரத்தைக் கொடுத்துப் பிரகிருதியில் வாழச்செய்து பக்குவம் வந்தகாலத்தில் மான்காட்டி மான் பிடிப்பதுபோலக் குருமூர்த்தியாய் மானிட உருவில் தோன்றி அருள்புரிவன். இவர்க ளுக்கு நான்குவிதமான சத்திநிபாதத்தன்மை உண்டு. இவர்கட்குச் செய்யப்படுவது சாதாரதீட்சை ஆகும். இது நோக்கம் முதலாகப் பலவகைப்படும். அவற்றுள் ஔத்திரி சிறந்தது. அது ஞானவதி, கிரியாவதி என இருவகைப்படும். இவை ஒவ்வொன்றும் நிர்ப்பீசம், சபீசம் என இரண்டிரண்டாக நான்கு வகைப்படும். ஓமசகிதம் செய்யப்படுவது ஔத்திரி எனப்படும்.

இப்படியெல்லாம் ஞானசாரியன் தீக்கைகளை அவரவர் பக்குவத்துக்கேற்பச் செய்து மலத்தைக் கெடுத்து ஆட்கொள்வன். இதனையே மேல்தரப்பட்டுள்ள வரிகள் செப்புவனவாகும்.

இவ்வாறு அவ்வவ்வுயிர்களையும் அருள்வடிவாக்கி ஆட்கொள்ளும் முறைமையானது இறைவனுக்குப் புதுவதாக ஏற்படுவதொருகுணமன்று. இது இயல்பிலே ஆதிகாலத்திலே தானே உள்ளதொரு குணமாகும். இதனை நமக்கு விளங்கச்செய்வதே திருச்சிற்றம்பலத்திலே இறைவன் ஆடும் திருநடனத்தொழில் ஆகும். "கருவியும் பொருளும் காட்டும் காலமும் கருமம் தானும்" என்னும் சித்தியார்ப்பாடல் இங்குத் தெரிதல் நன்றும். இதனை நம் ஆசிரியர் கூறும் அன்னவனுக்கு ஆதி குணம் ஆதலினால் ஆடும் திருத்தொழிலும் என்ற இடத்தால் உணரலாம். மஹா சங்காரத்தின் போது இத்தகைய ஐந்தொழிலும் அமைதி பெற்றிடுவதாலும், பிறகு முதற்சிருட்டி தொடங்கி இத்தொழில்கள் ஐந்தும் தொடங்குதலாலும் ஆதிகுணம் என்றார் ஆசிரியர். இனித் தில்லைத் திருக்கூத்தின் வருணனை கூறப்படுவதாகும். சகலரை ஆட்கொள்ள எழுந்தருளும் ஞானசாரியராவார், தில்லைத் திருநடனத்தவரே என்பது நாம் இங்குத் தெரிதல் தக்கதாம்.

சோதி மணிமிடற்றுச் சுந்தரமும் பாதி ஆம் பச்சை இடமும் :

தேவர்களைக் காக்கும்பொருட்டு உட்கொண்ட நஞ்சமானது கண்டத்திலே என்றும்நின்று இறைவனை அசாதாரணன் எனவும் அருளுடையவன் எனவும்

காட்டி நிற்பது ஆகும். ஆதலால்தான், "அக்கறை மறைநவில் அந்தணர் நுவலவும்படும்" எனப் புகழப் படுவதாயிற்று. இது கறையேயாயினும் இறைவனால் உட்கொள்ளப்பட்டமையின், தனது இருள்தன்மை நீங்கிச் சோதித்தன்மைதாங்கி நீலமணிபோலும் ஒளிர லுற்றது. மேருவைச்சார்ந்த கருங்காகமும் பொன் னிறமடையும் என்பது ஒரு பழமொழியாம். இதனால், ஆணவமுதலாம் கறை உடையவர் இறைவனாலே ஆட்கொள்ளப்படுவதில் ஐயமில்லை எனவும், அவ் வாணவமும் தனது மலசக்தி எல்லாம் மடிந்து ஆட்கொள்ளப்பட்ட பின்னர் பேரின்பத்துக்கு உப காரப்பட்டு நிற்பதாகும் எனவும், ஆணவமலம் இறைவனை ஏதும் செய்யவல்லதன்று எனவும், அது சீவவர்க்கத்தின் அறிவையே மறைக்கவல்லது எனவும் நாம் இங்குத் தெரிதல்வேண்டும்.

சிவத்திற்குச் சீவவர்க்கத்தின்மீது என்றும் மாறுத் திருவருள் இருத்தற்கு இறைவியே உதவிசெய்கிறாள். அதாவது இறைவி என்பது அருட்சக்தியேயாம். மலசக்தி தேய்ந்து ஒழிவதற்கு இந்த அருட்சக்தியே பாய்ந்தருளுகின்றதாகும். இத்தகைய ஈறிலாததும், மாறிலாததுமான பெருங்கருணை இறைவனுள்ளத்தே (இதயத்தே) எப்போதும் உண்டென்பதைச் சுந்தரமும் பாதி ஆம் பச்சை இடமும் என்பது குறிக்கவல்லதாம். பச்சை என்பது குளிர்ச்சி ஊட்டும் தகைமையை உணர்த்தும். "பச்சை மா மலை போல் மேனி" என்ற பாசுரத்து விரிவுரைகள் இங்குச் சிந்தித்துப்பார்த்தலும் தகும். இடம் என்றமையால், இறைவனிதயம் கருணை வடிவிற்றென்பது புலப்படும். எனவே, ஆண்மையும் அருளுமாகிய இருமையுடைய ஒருமைப்பொருளே

நம்மை ஆட்கொள்ளும் இறையுருவாம் என நாம் கருதலாகும். இவ்விடத்தே. ''குருவுரு வன்றிக் குனிக்கும் உருவம் - அருவுருவாவது அந்த அருவே - திரிபுரையாகித் திகழ்தரு வாளும் - உருவருவாகும் உமையவள் தானே'' என்னும் திருமந்திரச் செய்யுள் சிந்திக்கத் தக்கதாகும். ''கண்டம் கரியான் கருணை திருவுருக் கொண்டு அங்கு உமை காணக் கூத்துகந்தானே'' என்னும் திருமந்திர அடிகள் சுந்தரக்கூத்தின் திறம் காட்டுவனவாம். ஆசிரியரும் இங்குச் சுந்தரம் என்ற சொல்லைத் தந்துள்ளமை சிந்தனைக்குரியதாகும்.

பவளம் திரு சடைமேல் வைச்ச நதியும் மதி கொழுந்தும் அச்சம் உற ஆடும் அரவும் :

இதுகாறும் சிவவர்க்கத்தின்மீது இறைவன் மாறுக் கருணை கொண்டாடும் திறம் பேசப்பட்டது. இனி அச்சிவவர்க்கம் ஆணவம் கன்மம் மாயைகளால் கேடடைதலின் அக்கேடு இறைவன்வழி நிற்பதால் போக்கப்படுவது சொல்லப்படுகிறது. பவளம் செந்நிறமானது. சிவமும் செந்நிற வண்ணர் ஆவர். அவரது திருச்சடையும் அப்பொன்வண்ணத்ததே. ''மாலையின் தாங்குருவே போலும் சடைக் கற்றை'' எனவும், ''பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை'' எனவும் சடைச்சிறப்பு பேசப்பட்டிருத்தலும் இஃது உணர்த்தும்.

இந்தச் சடையின் விரிப்பால் உலகங்கள் விரிகின்றன. ஒளி பெறுகின்றன; தாங்கப்படுகின்றன. இங்கு, இச்சடைமேல் கங்கைநதியும், பிறைமதியும், ஆடும் பாம்பும் தாங்கப்பட்டிருத்தல் கூறப்பட்டுள்ளது.

கங்கை, செருக்கடங்கியது இந்தச் சடையினுல்தான். "சடாமகுடத்திலே கங்கை அடங்கும்" என்றும், "நில்லாதநீர் சடைமேல் நிற்பித்தானே' என்றும் இச் செய்தி சொல்லப்படுதல் காணலாம். இதனுல். உயிர் களின் ஆணவச்செருக்கு சிவத்தால் தலைப்பொறுப் பாக நீக்கப்படுதல் உணரலாம். அன்றியும், சந்திரன், கன்மத்தால் குறைவுற்றுப் பிறை ஆயினன் என்பது வரலாறு. இக்கன்மக்கேடு சந்திரனுக்குச் சிவத்தால் தலைமேலேற்று நீக்கப்பட்டது. "பிறை நுதல் வண்ண மாகின்று; அப்பிறை பதினெண்கணனும் ஏத்தவும் படுமே" என்று இச்செய்தி சங்கநூலில் சாற்றப்படு கின்றது. இதனுல், உயிர்களின் கன்மவினை நீக்கமும் இறைவனருளால் நீங்குவது தெரியலாம்.

பாம்பு, இசைக்கு மயங்கி ஆடுவது இயல்பு. ஆகவே, பாம்பு, மாயைவயப்பட்டு நின்று, பின்னர், இறைவழிப்பட்டு இறைவற்குத் தலையணியாயிற்று என்பர். இறைவனை, அழிக்கவந்த அரவம், பின்னர் இறைவன்வழிக்கு வந்தது என்பது வரலாறு. இதனுல், உயிர்களின் மாயாமல நிவிர்த்தியும் இறையருளால் நிகழ்வதே என நாம் தெரியலாம். ஆகவே, ஜீவராசிகள் மும்மலமும் அறப்பெறும் இறைபணி நின்றுல் என் பதை இந்தக் குறிப்புப் புலப்படுத்துகிறதென்னலாம். சடையை அடையப்பெற்ற பின்னர், மேலே கூறப் பட்டவை தம்முள் மாறுபாடொழிந்து ஒன்றுபட் டிருத்தலும் காணலாம். இவை, செருக்காலும், கன் மத்தாலும், மயக்கத்தாலும் வரம்பிகந்து நின்றதன்மை நீங்கப்பெற்றுச் சிவன்முடியடைந்து அவனது ஆனந்த நடனத்தால் களிப்புற்றுக்கிடத்தல் புரிகின்றன. ஈசன் திருமுடியாகக் கூறப்படும் சடை, வேதமுடியாகிய

பிரணவமே என்பதும் ஒரு கொள்கையாம். இந்தக் குறிப்பினையே "கங்கையும், மதியும், பாம்பும், கடுக்கையும் முடிமேல்வைத்த அங்கணர்" என்று சேக்கிழார்பெருமானும் கூறிப்போந்துள்ளாராவர். இது வரை கூறியவதனால், நமது மலநீக்கம் கருதியே இத் திருக்கூத்து நிகழ்த்தப்படுகின்றது எனத் தெரிதல் தருவதாம்.

அழகு ஆர் திரு நுதல் மேல் நீடு உருவ வன்னி நெடு கண்ணும் :

பொன்னை மாற்றில் உயர்த்தினால் அது மதிப்பில் உயரும். உருகுவதனால் விரும்பிய வண்ணத்தது ஆகும். இங்ஙனம், மாசுபோக்கித் தேசு ஆக்கிச் சிறந்த பணி செய்து கோடற்கண் நெருப்பே உதவிபுரிகின்றது. இது தட்டான் உலைக்கூடத்துக்கண் நெருப்பின் செயலாம். இவ்வாறே, ஜீவவர்க்கத்தினிடம் அவற்றின் உயர்வைக் கெடுக்குமதாகவுள்ளது காமம். இந்தக் காமத்தைப் போக்கிப் பராபக்தி எனப்படும் அயரா அன்பாக மாற்றினால் ஜீவவர்க்கம் மேன்மையுறும். எனவே, நமக்கு மடந்தையர்மேலுள்ள காமம் மகா தேவன்மேல் எழும் காதலாக மாறவேண்டும் எனத் தெளியலாம். மடந்தையர்க்கும் இப்படியே மாற்றியுரைத்துக்கொள்க.

காரைக்கால் அம்மையார், கணவற் காமத்தை விடுத்துச் சிவத்தின் கழலடிக்காதல் என்று கூறப்படுகிற இறவாத இன்ப அன்பு மேற்கொண்டதை நாம் வரலாற்றால் அறியலாம். இங்ஙனம் காமத்தின் நாமங் கெடக் கெடும் நோய் என அறிந்து அருள்வழிப்படாதற்கு இறைவனுடைய நெற்றிக்கண்ணே, காமனை

எரித்துக்காட்டி நலம்புரிகின்றது என்னலாம். நமக்கும் நெற்றிக்குநேரே புருவத்திடைக் கண் இருத்தல் புகலப்படுகின்றது. ஆகவே, நாம் காமம் மாறிக் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி நிற்றற்கண் சிவபரம் பொருளின் நுதலது இமையாநாட்டம் பயன்படுதலே இவ்வரிகள் நாட்டுகின்றன என்னலாம்.

கேடு இல் லயம் கூட்டும் தமருகமும், கோல எரி அகலும் :

உலகம் என்கிற உதவிப்பொருள் அதாவது தத்துவ தாத்துவிகங்கள் நமக்குத் தரப்படாவிட்டால், நாம் நற்கதி அடைதற்கான அறிவையும் அநுபவத்தையும் அடையமுடியாமற்போம். ஆகவே, உயிர்கள் யாவும், தன்னடி அடைந்து லயமுறவேண்டுமென்று திருவுள்ளங்கொள்ளும் இறைவன், அதற்கானவகையில் சிருட்டியை அதாவது சப்தமும் அர்த்தமுமாகிய பிரபஞ்சத்தை ஆக்கி உதவுகின்ருன். இதனைச் சர்வ வேத நாதங்களின் பிறப்பிடமான தமருகம் குறிக்க வல்லதாம். மற்றும், மகாசங்காரமெனப்படும் இளைப்பாற்றலும் அப்பெருமானே செய்தளிக்கவேண்டியுள்ளான். அதற்கு இணங்க எரி அகல் இயம்பப்பட்டுள்ளது. "தோற்றம் துடியதனில்" என்னும் பாடல் இங்குப் பார்த்தல் நன்ரும்.

பூட்டு அரவம் கச்சும் புலி அதளும் :

இனி, இறைவனை மதியாதார் எவராயினும் ஈடேற இயலாதென்பதைக் கச்சும் அதளும் காட்டும். தாருக வனத்து முனிவர் புரிந்த வேள்வி வரலாறு இங்கு

நினைவுக்குக் கொணர்ந்திடுதல் நன்றாம். இறைவனைப் பகைத்துவந்த அரவமும், புலியும் முறையே கச்சும் அதளுமாகிப் பகைமை ஒழிக்கப்பெற்றன என்பதை இவ்வரி உணர்த்தும். இறைவனைப் பகையாதுவந்த பாம்பும் (பதஞ்சலியும்), புலியும் (வியாக்கிரபாதரும்) ஆட்டைவிட்டகலப் பெறாது களிப்புக் கடலுள் ஆழ்ந்து திளைப்பதும் இங்குக் கருதப்படல் தக்கதாகும். இதனால், நாம், நம் பிறப்பின் இழிபொன்றும் கருதாது இறையன்பு மிகப்பெற்றுப் பகை நீங்கி இருப்போமாயின் பேரின்பம் எனப்படும் ஆனந்த அநுபவம் இம்மையிலேயே அடையப்பெறலாம் என்று தெளியலாம். இக்கருத்தினை நயமுற உணர்த்தும் வேறு பாடல்களும் உள. நோக்கியறிதல் பயன்தரும்.

வீடு இன்ப வெள்ளத்து அழுத்திவிடும் தாளினும் :

பிறப்பு அறப்பெறுவதே வீடு எனப்படும். அதுவே பேரின்பநிலை ஆம். அந்த இன்பம் என்றும் வற்றாத வெள்ளம்போல்வது. அத்தகைய இன்பம் நமக்கு ஞானத்தால் வருவது. அந்த ஞானம் ஆசாரியனருளால் விளக்கப்படுவது. அந்த அருளே இறைவனின் ஒரு திருவடி ஆகும். இந்தத் திருவருட் குறிப்பினைக் காட்டுவதே குஞ்சிதபாதம். இது புறத்தே ஆசாரியனருளாகி அநுபவத்தை ஆக்கியுதவுவது. மற்றும், இப்பதமே, ஞானமாகி அடியார் அகத்தேநின்று அறிவிப்பது. இதனை 'மாணடி' என்று சிறப்பிப்பர் திருவள்ளுவர். இங்ஙனம், அன்புருகும் அடியவர்தம் நெஞ்சத்தே ஞானமாக நின்று காட்டுவதும், புறத்தே திருவருளாக நின்று அநுபவிக்கச் செய்வதும் - காண்பதும் - இந்தக் குஞ்சிதபதத்தின் குறிப்பாகும். இந்த

இரண்டும் சித்சத்தித் திறம் எனப்படும். இஃது இடது திருப்பதமாதலும் கருதப்பட வேண்டுவதாம்.

இங்ஙனம் அகத்தும் புறத்தும் என்றும் நின்று நலம்புரியும் இத்திருவடிக்கண் அணிசெய்வதே சிலம்பு எனப்படுவது. சிலம்பு எனப்படுவது ஒலிக்குறிப்பு உடைமையால், சிலம்பே வேதமெனப்படும். வேதம், யாண்டும் ஞானத்தையே பற்றியும் சூழ்ந்தும் கிடப்பதாகும். ஆகவே, இறைவன் - அவனது அருள் - அதனது பயனுகும் ஞானம் - அந்த ஞானத்தை உணர்த்தும் திருமறை ஆகிய இவை யாவும் படிப்படியாக நம்மை நற்கதிப்படுத்துவன என்பதை ஈண்டுணர்தல் தகும். இதனை அடியாராவார் உணர்ந்தொழுகுவர். இதனைத் "தொழிலறிவாளர் சுருதி கண்ணுகைப் - பழுதறியாத பரம குருவை - வழியறிவார் நல் வழி யறிவாளர் - அழிவறிவார் மற்றையல்லாதவரே" என்னும் திருமந்திரப் பாடல்கொண்டும் தெரியலாகும். "எம் அடிகள் வெண்குறள்நேர் இரண்டடியும் என்தலையில் இருத்தும் இறை" என்ற பாடலிலும் இக்கருத்திருத்தல் காணலாம். இம்மலர்சிலம்படியே நாம் வாழ்த்தி வணங்கற்பாலதாகும். இதுதான் உயர்த்தெழுந்து நம்மனேரையும் உயர்த்தெழுப்பும் குறிப்புடையதாம் என்க. மரணமறச் செய்வது இத்திருவடியே ஆம்.

இனி, ஊன்றிய திருவடி மாயை தலையை மிதிப்பதாகும். அதாவது, உயிர்களை மயக்கி அஞ்ஞான வசப்படுத்தி ஆணவ காரியமான மோகம் முதலியவற்றுள் அழுந்தச்செய்கிற கிரியையினைத் தொலைத்து மேலெழவொட்டாமல் ஊன்றி உயிர்கட்குள்ள குற்றத்தைப் பரிகரிப்பதாகும். இவ்வீரச் செயற்கேற்ப இதன்கண்

ஆண்மைகுறிக்கும் கழல் அணியப் பெற்றுள்ளதாகும். உயிர்கள் வினையை வெல்லற்கண் இத்திருவடிவன்மை உடனிருந்து உதவியருளுவதாகும். இத்திருவடியுதவி பெருவிடினும் இராவிடினும் நம் வினையானது கள்ளத் தனமாக நம்பால் புகுந்து தன்வழியில் நம்மை ஈர்த்துச் சென்று பிறப்புக்கு வழிகோலும். ஆகவே இம்மல வைரியாம் திருவடி புரி உதவி தெரியப்படும். "கழலார் கமலத் திருவடி என்னும் நிழல் சேரப்பெற்றேன்" என்பது திருமந்திர வரி. "மந்திரமாவதும் மாமருந் தாவதும்" என்னும் திருமந்திரப் பாடல்முழுதும் ஈண்டைக்கு ஒப்புக்காண்டல் நன்றும்.

ஊனநடனத்தே திரோபவநிலை உணர்த்துதற் பொருட்டாக நகரம் எனவும், ஞானநடனத்தே மல ஒழிவு உணர்த்துதற்பொருட்டாக மகரம் எனவும் திருவடிநிலை பேசப்படுதலின் குறிப்பும் இங்கு ஓர்ந் திடுதல் பயன்படும். எனவே, இறைவன் இரு திருவடி களாலும் நம்மனோர் பிறப்பை அறுத்துச் சிறப்பை அருளுகின்றானவன் என்னலாம். இவ்விதமாக இறை வன் அதிசூக்குமமாகவும், சூக்குமமாகவும், தூலமாக வும் முறையே உயிரினிடமாகவும் - தம்மிடமாகவும் - உயிருலகுகளினிடமாகவும் புரிகின்ற நடனமானது நம்மனோரால் உணரப்படுவதில்லை; ஆதலால் தில்லையிட மாக இக்குறிப்புத் தோன்றச் செய்யுமாறு இறைபுரி நடம் நிகழ்வதாகும். இதற்கான விவரங்களைச் சிவ ஞானபோதம் முதற் சூத்திரத்தானும், இரண்டாம் சூத் திரத்தானும், ஐந்தாம் சூத்திரத்தானும் அறியலாகும்.

இங்ஙனம், இறைவன் புரியும் திரோபவ அனுக் கிரகச்செயல்கள்நமக்குத்தெரிவதில்லை. ஆயினும் அவை

நிகழ்ந்துகொண்டே உள்ளன. இதனால், ஒன்றும் உரு தோன்றுமல் உள் அடக்கி என்றுள்ளார் ஆசிரியர். இவ்விரகசியத்தை வெளிப்பட உணர்த்தும் இடமே சிதம்பரமாகும். சிதம்பரத்திலேயே ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பூசிக்கும் பேறுடையவராகத் தாம் இருக்கப்பெற்றும், தமது ஆசிரியரால் உணர்த்தப்படாத வரையில் இவ்வுண்மையினைத் தாம் அறியாமே இருந்த வரலாற்றினை இங்கு ஆசிரியர் கூறிக் காட்டுகின்றுர்.

என்றும் இறவாத இன்பத்து எமை இருத்த வேண்டி :

இனி, பெருமான் பொதுவாகப் பொதுவில் நடிக்கும் திறத்தைச் சொல்லிவந்த செய்தியை நிறுத்தி விட்டு, தனக்கு எவ்வாறு அருள்புரியலாயினுர் என்பதை நமக்கு ஒருசான்ருகக் காட்டும்பொருட்டுக் கூறியருளலாகின்றுர். 'செத்தேபோனல் சிரியாரோ'' என்பது திருவாசகம். ஆதலால், சாவு அடைபவர் திரும்பவும் பிறப்படையப் பெறுவர் என நாம் தெரிதல் வேண்டும்.

சாவா நெறியினைத்தான் செந்நெறி எனவும், சிவநெறி எனவும் செப்புவர். இந்த நெறியுள் இம்மையிலேயேபுகும் அருள்பெற்றவரே உண்மையான சீவன் முத்தராவர். இத்தகையோர், காண்பவன் முதலாம் மூன்றும் ஒன்றுபட்டவராவர். இவர்கள், ''எங்கும் திருமேனி எங்கும் சிவசத்தி'' என்னும் திருமந்திரப் பாடற்பொருளுக்குச் சான்ருவர். இவர்கள், நமன் வரின் ஞானவாள்கொண்டு எறிவர். இவர்கள் சித்தம் சிவமாய் மலமூன்றும் செற்றவராவர். மற்றும் இவர்கள், ஆலைக்கரும்பும் அமுதும் அக்காரமும் அருந்துவார்

போலும் இன்பம் புசித்திருப்பர். இவர்கள் நினைப்பும் மறப்பும் இலாதவர். இப்படியாக இவர்கள் இம்மை யிலேயே, தம் தேகம் நழுவுவதும் உணராவண்ணம் சிவனோடு ஒன்றாகிக் கிடப்பர். இத்தகைய இன்ப அநுபவமே புனிதமானது ஆகும். இவ்வகையதான இன்பத்தில், தன்னை இப்பிறப்பிலே இருக்கச்செய்வதற் காகவே இறைவன், தனது ஞானசாரியராம் திருவுருக் கொண்டருளினார் என்று இங்கு நம் நூலாசிரியர் கூறிக்காட்டியுள்ளார். இதனால், இறைவனே ஆசாரிய ராகி ஆட்கொள்ளப் பெறுமதுவே சிறந்த முத்திமார்க்க மென்று நாம் தெரிதல்வேண்டும் என்க.

மற்றும், எம்மை என்றமையால், தம்போல்வார் யாவரையுமே இக் குருமூர்த்தம் ஆட்கொண்டருளும் திறத்தது எனவும் கூறியுள்ளாராவர். அடியோமும் ஸ்ரீ மறைஞானசம்பந்தரது திருவருளுக்கு இலக்காம் தகைமை பெறுவோமேல் இப்பிறப்பிலேயே பேரின்பப் பெருவாழ்வு எய்தக்கூடும் என்பது தெளிவாம்.

பிறவா முதல்வன் பிறந்து:

இறைவற்குப் பிறப்புமில்லை: இறப்புமில்லை. ஆனால் பக்குவமுற்ற ஆன்மாவினை இரட்சித்தருளுவதற்காக ஆசாரிய மூர்த்தத்தே சிறப்பாகத் தங்கி வெளிப்படு கின்றானவன். இதன் விவரங்களை எட்டாம் சூத்திர உரைகளால் அறிதல் நன்றாம். "என்பொருட்டு அன்றே பிறவா நினக்குப் பிறப்பு" என்று பெரியோர் கூறி யுள்ள வேறு பாடலிலும் இந்தக் கருத்து உள்ளமை காணலாம். எனவே, மானிடக்கோலந் தாங்கியருளிய அதிசயம் இதனால் புலப்படுத்தப்பட்டதென்க.

**நறவு ஆரும் தார் உலாவும் புயத்து சம்பந்தநாதன்
என்று பேர் இலா நாதன் ஒரு பேர் புனைந்து :**

இறைவன் ஒரு நாமமும் ஒருருவமும் இல்லாதவனுவன். அவ்வாறிருந்தும் ஞானுசாரியராக எழுந்தருளும்போது நாமரூபங்களைத் தாங்கியருளுகின்ருன். இது சகலர்க்கு அநுபவமுதிர்ச்சி தடையற ஏற்படுதற்பொருட்டாகும். உபாத்தியாயன், தான் ஒரு தேர்வுக்கும் எழுதவேண்டாவதனுயினும், மாணுக்கர்க்காக அத்தேர்வுக்குரிய வழிவகைகளையும் நூல்களையும் தானும் மேற்கொள்ளுகின்ருன். இங்ஙனம் கொள்ளுதலால் விளையும் நலம் முழுதும் மாணுக்கர்க்கே ஆம். ஞானுசாரியரால் விளைவது பேரின்பநலம் ஆகும். அது பூவினுள் தேன்போலும் இன்பமளிப்பதாகும். இக்குறிப்பை, நறவு ஆரும் தார் என்ற இடம் காட்டும். "புளிக்கண்டவர்க்கு" என்னும் திருமந்திரப்பாடலுரை இங்கு எண்ணிப்பார்த்தல் இயைபுடைத்தாம்.

ஆன்மாவின் அன்பு முழுவதையும் தான் ஏற்றுக்கொண்டுவிட்டதற்கு அறிகுறியாக ஆசாரியன் அணிவது தார் ஆகும். மற்றும், இம் மலர்த்தார் புயத்தே புரளுவதாகும். சீயென்றுதறிய கையும், வா என்று அணைத்த மலர்க்கையும் சீடர்க்கு நலம்செய்வனவாதலால், தார் உலாவும் புயம் என்றுள்ளார். மாணுக்கன் சிரசில் கையை வைத்தலாகிய பரிசதீட்சை, முட்டையைக் கோழி இறகால் பக்குவப்படுத்துவதுபோலும் துணைசெய்வதாகும்.

இங்கு, இந்நூலாசிரியருடைய ஞானுசாரியர் திருப்பெயர் சம்பந்தநாதன் என்று கூறப்பட்டுள்ளது. இவரது வரலாறும், இவர் ஆட்கொண்ட வரலாறும்

முதலியவற்றை இந்நூல் முகப்பில் உள்ள நூலாசிரியர் பற்றிய வரலாற்ருல் அறியலாகும். நாம், எப்போதுமே சிவத்தோடு கூடியே உள்ளோம். ஆனுல் மலமறைப் பால் அது தெரிவதில்லை. எனவே இடையே தடையா யுள்ள மலமறைப்பு அகற்றப்பட்டதும், நாம் சிவ சம்பந்தம் பெற்றிருத்தலை அறியப்பெறுகிருேம். இந்தத் தடையை நீக்கவல்லான் ஞானகுருவாம் நாதன் ஆவான். "மந்திரத்தால் மருந்துகளால்" என்னும் சித்தியார்ப்பாடல் இங்குப் பார்த்தல் இக்கருத்துக்கு அரண் செய்யும். இந்த நாதனும் ஞானகுருவினுல் நமக்கும் சிவத்துக்கும் உள்ள சம்பந்தம் அநுபவ சித்தமாக உணர்த்தப்படுகின்றது. இக்கருத்தையும் ஒருவகையால் தெரிவித்து நிற்கும் நயப்பாடுடையது சம்பந்தநாதன் என்ற திருப்பெயர் என்னலாம். ஆகவே, தாம் புரியவந்த தொழிலுக்கு ஏற்ப இத் திருப்பெயரை இறைவன் தாங்கிவந்தானெனக்கூறி மகிழ்கின்ருர் இங்கு ஆசிரியர் என்னலாம்.

மற்றும், மானிடக்கோலம் தாங்கியதற்கு ஏற்ற செயல் இல்லாமல் வேறே குணம் பெற்றிருப்பாராயின் ஞானுசாரியரைக் காணப்பெற்ற சீடன் வெருளும். இவ்வகை அச்சம் உள்ளத்தே சீடன் கொள்ளப்பெறு மேல் பின்னர் நலஞ்செய்ய இயலாதுபோம், ஆதலால், உலகத்து ஏனையோர்போலவே, தாம் கொண்டுள்ள கோலத்துக்கிணங்க உண்டி, உறக்கம், பயம், இன்பம் இவற்றைத் தாம் பெற்றிருப்பதுபோல ஞானுசாரியர் சீடர்க்குக் காட்டியருளுவர். இந்தக் குணங்களையும் செயல்களையும் ஞானுசாரியர் பூண்டிருப்பது விருப் பிஞலே நிகழ்வதாம். இராவணனை வெறுப்பவனுக்கு இராவண வேடமே நாடகத்தில் கிடைத்தாற்போலும்

வெறுப்பினை விளைப்பதாகாது. ஆதலால், ஆசிரியர், தம் ஞானசாரியரது இத்தகைய மகிழ்ந்த குணத்தை இங்கே மகிழ்ந்த குணம் போற்றி என்று கூறிப் போற்றி இரட்சித்தருள வேண்டுகின்றாராவர்.

12 'மிண்டாய' என்பதுமுதல் 'நிலைபோற்றி' என்பதுவரையில் ஒருதொடர்.

இறைவனுகிய ஆசாரியர் புரிந்தருளிய நீதிநிலை

இந்தப் பகுதியில் நம் நூலாசிரியர், தமது ஞானசாரியராகிய ஸ்ரீ மறைஞானசம்பந்தநாயனார் அவர்கள் தம்மை ஆட்கொண்டு பக்குவியாக்குதற்கண் புரிந்தருளிய செயல்களை எல்லாம் சொல்லி நன்றி பாராட்டுவதை நாமறியச் சொல்லியருளுகின்றாராவர். இதனால், நமக்கு ஆசாரியர்மாட்டிருக்கவேண்டிய முறைமை புலப்படுத்தப்பட்டதென்னலாம். இனி, ஆசிரியர் கூறியருளும் முறைமைகள் வருமாறு :-

மக்களைச் சமயநெறிதான் தூய்மைப்படுத்த உதவுவது. ஆதலால், மக்களுக்கு முதல்முதல் வேண்டுவது சமயநெறி உணர்ச்சியே. சமயங்கள் பலப்பலவாக இருத்தலாலும், அவற்றின் கொள்கைகளும் ஒவ்வாத நிலையுடையனவாக இருத்தலாலும், எல்லாவற்றின் கொள்கைகளையும் சீர்தூக்கித் தெளிவுபடத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே, ஞானசாரியராவார், சமயங்கள்பற்றிய குழப்ப நிலைகளை எடுத்துக் காட்டித் தெளிவுறுத்துதலை முதற்கண் மேற்கொள்வர். இந்த வழியில் ஞானகுருவானவர், சித்தாந்த சைவ நெறிக்கு ஒத்துவராத சமயங்களைப்பற்றிய செய்திகளை

அறிவித்துப் பூருவபக்ஷம் செய்தருளுவர். அதாவது பரபக்கம் பற்றியவைகளை அறிவித்து மீட்பர் என்பதாம். புறச்சமயங்கள் கூறும் கொள்கைகள், அகங்கார இயல்பு முழுவதும் அடங்கப் பெற்றவையல்ல. ஆதலால், அகங்காரத்தோடு பொருந்திய புறச்சமய நெறிகளை நாடவொட்டாதபடி ஆசாரியர் முதல் முதல் தெரிவித்திருக்கின்றாராவர். இங்கு மானுடத்துருவில் எழுந்தருளிய ஞானாசாரியர் ஆவார். திருப்பெண்ணாகடத்து ஸ்ரீ மறைஞானசம்பந்தர் ஆவார். இவரே, நம் ஸ்ரீ உமாபதியார்க்கு ஞானாசாரியர். ஆதலால், சித்தாந்த நன்னெறி எனப்படும் நீதிநிலையிலே ஸ்ரீ உமாபதிதேவ நாயனாரை நிலைநிறுத்துதற்பொருட்டு முதல்முதல் ஆறு சமயப் பொருள்களையும்கூறித் தெளிவுறுத்தியருளினார். இதனை. மிண்டாய ஆறு சமயப்பொருளும் அறிவித்து என்பதனால் நாம் தெரியலாம். மிண்டு ஆய என்பதனால் பிறசமயக் கொள்கைகள் அகந்தையோடு பொருந்தியவை எனத் தெரிதல் தக்கதாம். அறிவித்து என்பதனால், சித்தாந்தசைவநன்னெறியின் ஏற்றம் புலப்படச் செய்தமை தெரியலாம். இதனால், நாம், நம் சமயத்தின் ஏற்றம் தெரிந்துகொள்ளுதற்குப் பிறசமயக் கொள்கைகளையும் முன்கூட்டி அறிதல் தக்கது என உணரலாம். இப்படி உணர்வதனால், பிறசமயங்கள் எந்த அளவுக்கு நம்முடைய சமயத்தோடு ஒத்துள்ளன என்பதை அறிய நேரும். இதனால் சமயக்காழ்ப்பு மழுங்கித் தணியும் என்னலாம்.

பழத்தைச் சுவைத்தவனுக்குக் காயின்மீது நாட்டமிராது. காயைத் தின்றபின் பழத்தைத் தின்னப்புகின் பழத்தின் இனிமைத்தன்மையை முற்றும் உணரப் பெறுவான். ஆகவே, வெயிலின் கொடுமை நிழலில்

தெரியப்படும் முறைபோன்று தமது ஞானசாரியர், புறச்சமய நெறிகளில் பேறு எதுவும் இல்லாமையைத் தனக்குத் தெரிவித்தருளிய செய்தியை, அவற்றில் பேறு இன்மை எங்களுக்கே பேறு ஆக்கி என்ற வரிகளில் ஆசிரியர் தெரிவித்திருக்கின்றமை காணலாம். இங்ஙனமே "தமிழ் மூவாயிரம்" எனப்படும்நூலிலும் ஐந்தாம் தந்திரத்துச் சுத்தசைவம், அசுத்தசைவம், மார்க்கசைவம், கடுஞ்சுத்தசைவம் என்பவைபற்றித் திருமூலர் ஆரம்பத்தில் கூறிப்போதல் காணலாகும். எங்களுக்கே என்னும் சொற்பிரயோகம் சிந்திக்கத் தகுவதாகும்.

இவ்வாறு. மானுடக்கோலத்தில் இறைவன், ஞானகுருவாகத் தரிசனம் தந்ததோடு அமைவதில்லை. மாணுக்கருடைய சித்தத்தின் உள்ளே மாசு நீங்கச் செய்து, தெளிவை விளைத்தலும் செய்தருளுகின்றார் ஆவர். இந்தப் பரம உபகாரத்தினுல்தான் சீடரின் சிந்தைத்தடுமாற்றம் நீங்கித் தெளிவு ஏற்படும். இதனை, தேருத சித்தம் தெளியத் திருமேனிகொண்டு வரும் அத்தகைமை தானே அமையாமல் என்றுரைத்தலால் அறியலாம்.

இப்பால் ஸ்ரீ மறைஞானசம்பந்ததேவ நாயனர் ஆகிய ஞானசாரியர், ஸ்ரீ உமாபதிதேவநாயனரைச் சாத்திர முறைப்படி தீட்சைசெய்து சித்தாந்தச் செந் நெறியிலே நிலைக்கச் செய்தருளினராவர். அதன் பொருட்டாகச் சமயம், விசேடம், நிருவாணம், அபி டேகம் எனப்படும் நான்குவகைத் தீட்சைகளும் நிகழ்த்திடப்பெற்றனர் நம் ஆசிரியர். இங்ஙனம் புரியப் பெற்றமையால், தாம் மிகவும் மேம்பாடுடைய மெய் கண்ட சந்தானத்துச் சுத்த அத்வைத சித்தாந்த சைவ

நெறியில் சேரும் பேறுபெற்றதை மிகவும் ஆர்த்தி யுடன் கூறிடுகின்ருர் ஆசிரியர். இந்தச் செய்தியை வித்தகம் ஆம் சைவநெறியில் சமயம் முதலாக எய்தும் அபிடேகம் எய்துவித்து என்ற வரிகளால் அறியலாம். வித்தகம் என்றதால் சித்தாந்தச் செந் நெறியே ஞானமார்க்கம் என்பது புலப்படும். "நெறி வழியே சென்று நேர்மையுள் ஒன்றி" என்பது திருமந்திரம்.

இதன்பின்னர் ஞானசாரியர் செய்தருளிய அருள் வகைகள் தெரிவிக்கப்படுகின்றன. திருக்கண் நோக் கத்தால் பார்த்தல் எனப்படும் நயன தீக்ஷை ஆகிய ஞானதிக்ஷைப்பேறு தாம் பெற்றதைச் செய்ய திரு கண் அருளால் நோக்கி என்று ஆசிரியர் கூறுகின்ருர். இங்ஙனம், நயனதிக்ஷை பெற்றதால் ஏற்படும் பயன் கள் எவை என்பது நமக்குப் புலப்படும்பொருட் டாகப் பிறப்புத் தொல்லையும், வினைத்தொல்லையும் நீங்கப்பெற்றமையை ஆசிரியர், கடிய பிறப்பால் பட்ட புண்ணும், இருவினையும் போய் அகல என்று கூறிக் காட்டியுள்ளாராவர்.

கட்டிப் பொன்னைக் காய்ச்சி உருக்கினுல், தட் டான் இட்டப்பட்ட நகையாகும். அப்படியே, ஞானு சாரியர், சீடருடைய நெஞ்சத்தைப் பக்குவப்படுத்து வதற்காக அதனைச் 'சித்தம் உருக்கி' என்பதற்கேற்பச் செய்தருளுவர். அப்போது. ஞானுசாரியர், தமது திருக்கைம்மலரை மாணுக்கர்சிரத்தே வைத்தருளுவர். அதனுல் நெஞ்சக்கன கல்லும் நெகிழ்ந்து உருகும். அதாவது, கல்போன்றிருந்த நெஞ்சம் அக்கினியைச் சார்ந்த மெழுகுபோல் நெகிழும். இதனை அஸ்தமஸ்தக

சையோகம் என்பர். "சித்தம் குருவருளால் சிவம் ஆகுமே" என்பது திருமந்திரம். இந்நிலை அடைதல் ஒரு சிறந்த யோகம் எனப்படும். "யோகச் சமயமே யோகம் பலவுன்னல்" என்னும் ஐந்தாந்தந்திரத்துப் பாடல் இங்குப் பார்த்தறிதல் தக்கது. இவ்விஷயத்தை இந்நூல், வண்ணமலர்க் கைத்தலத்தை வைத்தருளிக் கல் ஆய நெஞ்சு உருக்கி என்று செப்புகின்றது.

இங்ஙனம், நெஞ்சு உருகி ஒன்றுபடுவதால் திரிபதார்த்த மெய்ம்மை இன்னதெனத்தெரியும் திறமை உள்ளத்தே உண்டாகும். இந்தத் தெளிவு ஞானுசாரியர் உபதேசத்திண்மையால் விளைவதாகும். இவ்விளைவின் பயனுல் நிகழ்வதே பிறப்பறுதல் என்பது. ஆகவே, ஆசாரியர், நன்மாணுக்கருக்குக் காண்பான் - காட்சி - காணப்படுபொருள்கள் மூன்றன் ஒருமையுண்மையை உபதேசமுகத்தால் வாசகதீட்சையாக வழங்கியருளுவர் என்பது தெரியலாம். இந்நிலைமை தமக்கு வழங்கப்பட்ட செய்தியை, ஆசிரியர், மெய்தகைமை எல்லாம் விரித்து ஓதி என்று கூறிக்காட்டுகின்ருராவர். "தெளிவறியாதார்" என்ற திருமந்திரச் செய்யுள் இங்குக் காண்டல் நன்ரும்.

மேலே கூறப்பட்ட பக்குவத்தின் விளைவாகச் சிவஞானம் தலைப்படும். இந்த ஞானம் எழுவதனுலே மும்மலம் நீங்கப்பெறும். ஆகாயத்தே ஒற்றுமையாக இருந்து மறைக்கின்ற பூத இருளானது, சூரிய உதயத்தே மறைகிறது. ஆகாயம் முற்றும் ஒளிவடிவாய் விளங்கலுறுகிறது. இவ்விஷயத்தினை. "மாலை விளக்கும் மதியமும் ஞாயிறும்" என்னும் திருமந்திரப் பாடலாலும் அறியலாம். எப்படிப் பூத இருள் தன்மறைப்புச்செயல் கெட்டுச் சூரியப் பிரகாசமாய் மறைந்து

விடுகிறதோ அப்படியே ஞானசாரியருடைய சிவஞான உபதேச உதயத்தால் ஆன்மபோதம் அருளில் அடங்கு கிறது. மலமானது ஆன்மபோதத்தையும் பற்ருமல், தன்னுடைய அநாதிநித்தியத்தன்மையாம் நீதிநிலேயும் கெடாமல் நிற்கின்றது. எனவே, ஆன்மபோதத்தை யும், மலத்தின் நித்தியத்தன்மையையும் எப்படி ஆசா ரியர் நீதிக்குமாறுபடாமல் நிறுத்தியுதவுகின்ருர் என்பது இதனுல் புலப்படுவதாகும். மும்முதலும் முத்தியில் உண்டு என்றதன் கருத்தும் நீதியும் இஃதாம். இதனே, ஒத்து ஒழுகும் சேண் ஆர் இருள்வடிவம் செங்கதி ரோன்பால் நிற்ப காணுது ஒழியும் கணக்கேபோல் என்ற உபமான வரிகளாலும், ஆணவத்தின் ஆதி குறையாமல் என்பால் அணுகாமல் நீதி நிறுத்தும் நிலே போற்றி என்ற உபமேய வரிகளாலும் நாம் அறியலாம். இவ்விடத்தே இதுகாறும் கூறப்பட்டுள்ள செய்திகளே "ஆறு சமயமும் கண்டவர் கண்டிலர் - ஆறு சமயப்பொருளும் அவன் அல்லன் - தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்த பின் - மாறுதல் இன்றி மனேபுகலாமே" என்ற திருமந்திரப்பாடல் நினேவூட்ட வல்லதாகும்.

13. 'மேதக்கோர்' என்பது முதல் 'கழல்போற்றி' என்பது வரையில் ஒருதொடர்.

இறைவன் உயிருக்குயிராய்நின்று அறிவித்தல்

கண் ஒருபொருளேக் காண்கின்றது என்ருலும் உண்மையில் உயிர்தான் காண்கிறது என்பது தெரிய லாம். இப்படியே ஆன்மபோதம் அறிவதென்பது சிவம் உயிருக்குயிராய்நின்று அறிவித்து உதவுகிறதென் பதே உண்மையாம். இதன்விபரம் இனிக் காண்போம்.

மேதக்கோர் செய்யும் சரியை திகழ் கிரியா யோகத்தால் எய்தும் சீர் முத்தி பதம் எய்துவித்து :

பிறப்பின் பயன் சிவபிரான் திருவடியை அடைவதே ஆகும். இதற்காகச் சைவநெறியானது நான்கு முறைகளை - தவத்தை - ஏற்படுத்தியுள்ளது. அவை தாதமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தோழமார்க்கம், சன்மார்க்கம் என்ற நான்காம். இவை ஒவ்வொன்றும் உலகப்பயனை நோக்கி மேற்கொள்ளப்படின் உபாயம் என்றும், முத்திப்பயனை நோக்கி மேற்கொள்ளப்படின் உண்மை என்றும் இருதிறப்படும். இவற்றுள் உண்மைச்சரியை எனப்படும் சிவசரியையினை மேற்கொண்டு முடித்த தவத்தினர் சிவசாலோகம் எனப்படும் பயனை எய்துவர். சிவகிரியை அநுட்டித்தோர், சிவசாமீபப் பயனை எய்தப்பெறுவர்.சிவயோகம் மேற்கொண்டோர், சிவசாரூபம் என்னும் பயனை அடைவர். சிவஞானம் எய்தப்பெற்றோரே, சிவசாயுச்சியம் பெறுவர். முன்னே சொல்லப்பட்ட மூன்றும், சோபானமுறையில் சிவ ஞான நன்னெறியில் ஒருவர் படிவதற்குத் துணைபுரிவனவாம். ஆதலால், முன்னைய சரியையாதி மூன்றினும் எய்தும் பயனைப் பதமுத்தி அல்லது அபரமுத்தி என்பர். இறுதியதாகிய சிவஞானத்தால் அடையப் பெறும் சிவசாயுச்சியத்தையே பரமுத்தி என்பர். இதுவே மேலானதாம். "தாதமார்க்கம் சாற்றின்" "புத்திரமார்க்கம் புகலின்" "சகமார்க்கம்" "சன் மார்க்கம்" என்று தொடங்கும் சித்தியார்ப் பாடல் களால் மேல் சொல்லப்பட்டவற்றின் கருத்துக்களை விரிவாக அறியலாம். இத்தகைய சிவபுண்ணிய நெறியிலே புகுவோரே, உண்மைத் தவத்துறையில் இறங்கியவராவர்.

இவ்வா றன்றி, சுவர்க்கபோகம் முதலிய அற்ப மானவையும், நிலையில்லாதவையுமான பயன்களைத் தரவல்ல வேள்வி முதலிய பசுபுண்ணியச் செயல் களை மேற்கொள்ளுவோர் சிறந்த தவத்தர் ஆகார். இச்செயல் பசித்துண்டு பின்னும் பசிப்பதையே நிகர்க் கும். ஆதலால், சோதிட்டோமம் முதலவாம் வேள்வி மேற்கொள்வோரினின் றும் நன்னெறி எனப்படும் சரியை ஆதியினை மேற்கொண்டொழுகுவோரை மேதக் கோர் என்றுள்ளார் ஆசிரியர். "சரியாதி நான்கும் தருஞான நான்கும்" என்னும் திருமந்திரப் பாடல் கருத்தினை இங்கு ஒப்புநோக்கல் நன்றும். இந்த நான்கு நன்னெறியிலேயும் அவரவர்களும் தத்தம், மந்ததரம் முதலான நிலைமைகட்கு ஏற்ப ஒழுகிப் படிப்படியாக முடிந்த பதத்தினைத் தீவிரதரத்தின்போது எய்துவார் கள். இப்படியாக ஞானதாகம் உற்றவர்களை அவரவர் களுடைய பக்குவ தரங்களுக்கு ஏற்ப இறைவன் சரியை முதலாம் மூன்று நிலைகளிலும் ஒழுகச்செய்து அநுக்கிரகம்புரிகின்றான். அவ்வவற்றிக்கு ஏற்ற பத முத்திகளையும் அவர்களுக்கு அருளுகின்றான் என்பதே இவ்வரிகள் உணர்த்துவன. இம்முறையில், ஆசிரியர், தாமும் அநுக்கிரகிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதை நம்மனோர்க்கு இதனால் தெரிவிக்கின்றார் என்னலாம்.

மெய் அன்பால் காணத்தகுவார்கள் கண்டால், தமை பின்பு நாணத்தரும் ஞான நல் நெறியை வினை எனக்குத்தரவேண்டி :

மேற்கூறப்பட்ட சரியை முதலாம் தவநெறியிலே தவறாமல் ஒழுகுவதால், உள்ளத்தே சிவத்தைக் காணவேண்டுமென்ற அன்பு பெருகும், அப்போது

படிப்படியாக, உலகப் பொருள்களின்மீது உள்ள பொய்யன்பு நீங்கும். இதனால் மெய்யன்பு அதிகரிக்கும். அத்தகைய மெய்யன்பர்கள், சிவரூபத்தில் ஆன்ம தரிசனம்பண்ணிச் சிவதரிசனத்தில் ஆன்ம இயல்பினை அறிந்தவராவர். அத்தகையவர்களைக் காண்டலில் உள்ளம் விருப்புறும். இதனால், எல்லாச் சாத்திரப் பொருளும் உணரப்படும். தத்துவப் பொருள்கள் யாவும் கீழானவை என்று எண்ணிக் கழிக்கப்படும். ஞானசாத்திரப்பொருளை நாடும் நாட்டம் உண்டாகும். இந்த நாட்டம் எய்திய பிறகு, முன்பிருந்த நாட்டங்கள் யாவும் தாழ்வுடையவாகப்படும். அப்படிப்படுவதனால் அவற்றை இதுகாறும் மெய் என எண்ணி வாழ்ந்தோமே என்ற எண்ணம் உண்டாகி உள்ளம் நாணுதல் அடையும். பிறகு ஞானபாக நெறியிலே பிரவேசம் உண்டாம். இப்படியான அருமைப்பாடு உடையது ஞானநெறி அடைதல் என்பது. எனவே, சரியையாதிகளும் ஞானத்தைக்காட்டியன்றி மோக்ஷத்தைத் தருவன அல்ல என்றறியலாம். இதனாலேயே ஞானத்தை நல்நெறி என்றார் ஆசிரியர். இவ்வாறே "நன்னெறியாகிய ஞானத்தை" என்று சிவஞான போதத்தும் கூறப்படுதல் கரணலாம். இத்தகைய சிறந்த சத்திய மார்க்கத்திலே தம்மைத் தம் ஞானாசாரியர் பிரவேசிக்கச் செய்தலுற்றார் என்று இங்கு நம் ஆசிரியர் கூறுகின்றார். வரலாற்றுப் பகுதியில் இவ்விஷயம் எப்படி நிகழ்வுற்றதென்பதைப் படித்தறிதல் கூடும். தான் ஞானதாகம் ஒன்றும் இல்லாதிருந்தும், தனது ஞானாசாரியர் வலியவந்து தன்னை ஆட்கொண்ட திறத்தினை வீணே எனக்குத் தரவேண்டி என்று கூறிக்காட்டியுள்ளார். இதுவே மார்ச்சால நியாயம் ஆகும் என்ப.

எல்லா பொருட்கும் மனக்கும் மலர் அயன் மால் வானோர் நினைப்பினுக்கும் தூரம் போலே அணிய சுந்தரம் தாள் என் தலை மேல் ஆரும்படி செய்து அருளிய பேராளன் :

இறைவன் திருவடியே ஞானமாம். அத்தகைய திருவடியினை எந்தத் தத்துவமும் கிட்ட இயலாது. வேதாகம நூற்பொருள்களும் திருவடியைக் கிட்டச் செய்யமாட்டா. ஆகவே, நூலறிவு எட்டாத நுண்ணிய தாகும் அத்திருவடி. மனம், எங்கும் திரியும் வன்மை பெற்றிருப்பினும் அதுவும் ஓர் தத்துவப் பொருளே யாதலாலும், நிலைத்தில்லா இயல்பிற்றுதலாலும் திருவடி யினைக் காண்டல் இயலாது. சிந்தையும் செல்லாச் சேட்சியது இறைதிருவடி. பிரமன், திருமால், தேவர் கட்கும் எட்டாதது இறை திருப்பதம் என்பது முன்னரே தெரிவிக்கப்பட்டது. "பரமலோகாதிக்க நித்திய சாம்பிராச்சியம் பரபதம் பரமசூக்ஷ்மம்" என் றெல்லாம் இத்திருவடிப்புகழ்ச்சி போற்றப்பட்டிருத் தலும் இவ்வுண்மை புலப்படுப்பதேயாம்.

இவ்வாறெல்லாம் எட்டா நிலையதாக இத்திருவடி இருப்பினும், அதுவே யாவற்றையும் யாவரையும் தாங்குவது. ஆதலால், எப்பொருட்கும் அணித்தாக வும் உள்ளது. அப்பொருட்கு அந்தரங்கத்தும் இருப்ப தாம். ஆதலால், தூரம் போலே அணிய என்றுள்ளார் ஆசிரியர். நீராவிக்கப்பல், தண்ணீரினிடையே மிதக் கிறது. தனக்குள்ளேயும் பருகுதலாதி வினைகட்கு வேண்டியவகையில் நீரைப் பெற்றுள்ளது. தானும், அந்நீரினது ஆவியாலே செல்லுகிறது. இப்படியே

இறைவனது திருவடி ஜீவநாசிகட்கு உதவுகின்றது. இதனை, "வன்மை பெறு நந்திமுதல் சிவகணத் தலைவர்கள் மனக் கோயில் வாழும் பதம்; மறையவ னுளங் கொண்ட பதம்" என்றெல்லாம் பாடல்கள் போற்றிக் கூறுதலாலும் அறியலாம். இத்தகைய திருவடியை நம் ஆசிரியர் ஈண்டு, சுந்தரத்தாள் என்று போற்றிக் கூறியிருத்தல் காணலாம். இதனைச் "சகசமல இருளகல நின்மல சுயம்ப்ரகாசம் குலவும் நற் பூம்பதம்" என்பார் உரையாலும் தெளியலாம். இதுவே குருவெனும் பதமாம்.

இத்தகைய திருவடியினை, நம் ஆசிரியரது சிரத்தின் மீது அவரது ஞானுசாரியர் சூட்டியுதவினுர் என்பது வரலாறு. இங்ஙனம் நிகழ்ந்தது ஆசாரியனுடைய பேரருளாலேதான். ஆதலால், "சுந்தரத்தாள் என் தலைமேல் ஆரும்படி செய்தருளிய பேராளன்" என்றுள்ளார் ஆசிரியர். "ஆசான் அருளால் அடிசேர் ஞானம் வந்திடும்" என்பது சித்தியார். இதனுல் திருவடிதீக்ஷைப்பேறு கூறப்பட்டது என்க.

தந்த பொருள் :

இவ்வாறு பெரிய மகாதேவராகிய ஸ்ரீ மறைஞான சம்பந்த ஞானுசாரியர், நம் ஆசிரியரை ஆட்கொண்டருளி என்ன தந்தருளினர் என்பதைச் சுருக்கமாக ஆசிரியர் சிலவரிகளில் கூறிக்காட்டுதல் கருதத்தக்கதாகும். இதுகாறும், அறிவினுக்குள் அறிவாகி இருந்தே இறைவன், பிரிப்பற உள்ளானுகித் தற்போது வெளிப்பட எழுந்தருளிக் காட்சிதந்து அகப்படுத்திக்கொள்ளுகிறுனேயன்றி, வேருகப் பிரிந்திருந்து புதுவதாக எழுந்தருளுவதிலன் என்பதே உண்மையாகும். ஆகையால்,

ஏனைக் கலை ஞானங்களை உணர்த்துபவர் போன்றவ ரல்லர் ஞானாசாரியர் என்பது தெளிவாம். உள்நின்று உணர்த்திவந்த முதலாகிய பரம்பொருளே குரு வடிவுமாய் எழுந்தருளிவந்து உண்மை ஞானத்தை உணர்த்துவர் என்பது சாத்திரம். இங்ஙனம், ஞானத்தை உணர்த்தும் வன்மை ஏனைய உயிர்கட்கு இல்லையாதலால், ''அகத்துறு நோய்க்கு'' என்னும் திருவருட்பயன் பாடலிலும் இக்கருத்து வலியுறுத்தப் பட்டுள்ளது. அந்நியமின்றிச் சைதன்னிய சொருபியாய் நிற்றலால் பிரிந்திருத்தல் ஒருபோதும் இல்லையாயிற் றென்க. இதனைப் பாலில் நெய்போல் மறைந்து நின்ற நிலையே தயிரின் நெய்போல் விளங்கி நிற்றலாயிற்று என்று சாத்திரம் சாற்றும். ஆகவே, ஆன்மாவானது, தன்னுள் ஒளித்திருக்கும் தன் முதலைக் காணுதிருப் பினும், ஆன்மாவினை இறைவன் ஒளித்திருந்து எப் போதும் கண்டுசெலுத்துகின்றான் ஆவன்.

முத்திப்பக்குவத்தில் வெளிப்பட்டு ஆட்கொள்ளும் போது ஆன்மா குருவழிநிற்றலால் இந்தக் கள்ளத்தை உணருகின்றது. ஆகவே, ஞானாசாரியரால் ஆன்மா, இறைவனோடும் பிரிவறநிற்கும் உண்மைநிலை கள்ளம் நீக்கிப் போதிக்கப்படுகின்றது. இதுவே திருவடி தீக்ஷைப்பேற்றின் பெரும்பயனும். ஆதலால், ஆசிரியர், இச்செய்தியை, முந்தி என்தன் உள்ளம் என்றும் நீங்காது ஒளித்திருந்து, தோன்றி நிற்கும் கள்ளம் இன்று காட்டும் கழல் போற்றி என்று கூறி இரட் சித்தலை நயக்கின்றாராவர். இத்தகைய சிறப்புநிலை நம்ம னோர்க்கு வாய்க்குமாறு ஞானகுருவருள் புரிவதாக என நாமும் இங்குப் போற்றுவோமாக!

14. 'வள்ளமையால்' என்பது முதல் 'செயல் போற்றி' என்பது வரையில் ஒருதொடர்.

ஆசாரியார் அறிவிக்கும் பொருள்

சூரியன் தன்கிரணத்தால் தன்னைக்காட்டுகின்றான். கண்ணுடையான், அக்கிரணத்துணையால் கதிரோனை அறிகின்றான். இம்முறையே ஆசாரியன், தன் அருளினால், தன்னைக் கருத்தா என மாணாக்கன் உணரச் செய்கிறான். ஆசாரியரைச் சிவமெனவே காணாக்கால் மாணாக்கர்க்குப் பக்குவப்பேறு எய்தவில்லை என்பது படும். ஆகவே, முதற்கண் ஆசாரியன், தன்னுடைய நிலையினை அறிவினுள் அறிவாய் நின்று அறிவிக்கின்றானவன்.

இப்பால், ஆன்மாவானது எப்போதுமே அருள் வெளியையே தாரகமாகக்கொண்டு பிரியாமல் கிடக்கின்றது என்கிற உண்மை தெரிவிக்கப்படுகின்றது. இந்த உண்மை தெரியப்பெறுவதால், ஆன்மாவானது தன்னுடைய நிலையினை அறியலுறுகிறது. அதாவது, மலமே தாரகமாக நின்றநிலையை நிலையிலது எனத் தெரிந்து சிவவே தாரகமாக நிற்கும் நிலையினை அறியப் பெறுகின்றது. இவ்விதம் சிவரூப ஆன்மதரிசன நிலைகள் அறிவுறுத்தப்படுதல் காணலாம்.

இவ்விதமாக உணர்த்தப்படுகையில் ஆன்மா சகல பாசங்களினின்றும் விடுபடுவதனாலே அதற்கு அநாதியே இருந்த கேவலநிலையின் இயல்பும், அதன் பின்னர் சகல நிலையிலுள்ள இயல்பும், அதன்பின்னர் ஏற்படா நின்ற சுத்தநிலையின் தன்மையும் ஆகிய மூன்றையும்

தெளியலுறுகின்றது. ஆகவே, உயிரானது பஞ்சேந்திரியப்பற்று அறப்பெறும். இதனால், ஆன்ம அறிவினை வியாபகப்படாமல் தடைசெய்துகொண்டுள்ள பாச ஞானம் விட்டொழிகிறது. பின்னர், பசுஞானத்துக்கு இருந்த ஏகதேச விளக்கம் நீங்குகின்றது. இதனால், பசுஞானத்துக்குச் சிவஞானம் வாயிலாக வியாபக விளக்கம் விளைகிறது. இவையெல்லாம் பெத்தநிலையில் அறியப்படுமாறில்லை. ஆசாரியனருள்வயப்பட்ட முத்த நிலையிலே அறியப்படுகின்றதாகும். சுருக்கமாகச் சொன்னால் ஆன்மாவானது, தூலபஞ்சாக்கர முறைமையினை உணர்ந்து, பின்னர் சூக்குமபஞ்சாக்கர முறைமையிலே ஆசாரியனருளாலே நிலைக்கலுற்று, அப்பால் அதிசூக்கும ஐந்தெழுத்து நெறியியே நிற்கலுறுகிறது என்னலாம். முன்பிருந்த கேவலநிலை தெரியப்படாவிடில், பின்புவரும் சுத்தநிலையின் பெருமை ஆன்மாவினால் கொள்ளப்படாமற் போய்விடுதலின், நிலைத்துச் சுத்தநிலையில் நிற்பித்து இனித் தேகம்முதலான கருவி கரணாதிகளில் செல்லாதவிதமாக ஆசாரியர் ஆன்மாவுக்கு அறிவித்தருளுகின்றாராவர். இங்ஙனம் அறிவித்தலே, ஆன்மாவினைச் சுத்தநிலைக்கண் அழுந்திநிற்கச் செய்தலின் இச்செயலை, இனி செல்லாமை காட்டும் செயல் போற்றி என்று தமது அநுபவ பூர்வமாக ஆசிரியர் நமக்குக் கூறிக்காட்டியுள்ளாராவர். இதனை, "அரன் கழல் செலுமே" என்றுரைப்பது சாத்திரம். இக்கருத்துக்களை, "பத்திப் பணித்துப் பரவுமடி நல்கிச் - சுத்த உரையால் துரிசறச் சோதித்துச் - சத்தும் அசத்தும் சதசத்தும் காட்டலால் - சித்தம் இறையே சிவ குரு ஆமே" என்னும் திருமந்திர வரிகளினாலும் தெரியலாம். "உவந்த குருபதம் உள்ளத்துவந்ததே" என்பதும் அது.

15 'எல்லாம்' என்பதுமுதல் 'போற்றிசைப்பேன் யான்' என்பது வரையில் ஒருதொடர்.

அருள்நிலையில் நிற்றல்

இகபோக வாழ்க்கைக்கு இன்றியமையாதது பொருட்செல்வம். அதனை ஈட்டும் முயற்சிகள் எண்ணில, அங்ஙனம் பாடுபட்டுப் பணத்தைத் தேடுவது பெரியகாரியமன்று. தேடியசெல்வத்தை ஈதலும் துய்த்தலும் புரிந்து அனுபவிக்கவேண்டும். அனுபவிக்காவிடில் தேட்டத்தால் பயனில்லை. ஆனால், தேடிய பொருளைத் தேடி அடைந்தவன் அனுபவிக்கவொட்டாதபடி எத்தனையோ தடைகள் ஏற்படும். கள்வர் கவர்வர்; தீநட்பினர் தீயவழி செலவிடச் செய்வர். இப்படியெல்லாம் தேடிய திரவியம் அழிந்துபடுமானால், துன்பமே உண்டாம். ஆதலால், செல்வம் தேடியவன், அதனைப் பேணித் துய்க்குமுறையில் எச்சரிக்கையாக இருக்கவேண்டியுள்ளது.

இப்படியே பரபோக வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருப்பது அருள். இதுவே செல்வத்துட் செல்வம் எனப்படும். இந்த இறையருளை, ஒருவன் பற்பல விதமான அனுகூலப்படும் சூழ்நிலைகளைப் பயன்படுத்திப் புண்ணியங்களைப்புரிந்து, நல்லறிவு தலைப்படப் பெற்று, இருவினை ஒப்பு, முதலிய தகுதிகளை எய்திடப் பெறுகிறான். ஆகவே இந்த அருள்வாய்ப்பு எளிதில் கிட்டுவதன்று. இதன்பயனாக ஞானாசாரியராம் சிவ ரூபக்காட்சி பெறுகிறான். அவரால் உண்மை உணர்த்தப்பெறுகிறான். ஆதலால், அந்த ஆசாரியர் உபதேச வழியிலேயே பிறிதொன்றிலும் நாட்டம் செல்லாமல்

ஒழுகினாலன்றித் திருவருட்பயனைத் துய்த்தல் அதாவது உண்மைச் சீவன்முத்தராயிருத்தலும் பரபோகத்தைப் புசித்தலும் - நிகழாமல் போய்விடும். ஆதலால், நம் அறிவு இச்சை செயல்கள் நிற்கவேண்டிய நெறியிலே நிற்றல் வேண்டியுள்ளமை தெரியலாம். இதற்குச் சிவஞானிகளுடன் கூடுவது சிறந்த உபாயமாகும். இந்த விஷயங்களைப் பன்னிரண்டாம் சூத்திரம் விவர மாக விளம்புகிறது.

இங்கு நம் ஆசிரியரும் சிற்சில உபாயங்களைத் தெரிவிக்கின்றார். அவற்றுள் ஒன்று அகம்பிரமக்கார ருடன் கூடலாகாது என்பதாம். இவர்கள், தமக்கு மேலே வேறொரு பொருளில்லை என்பவராவர். சைவ சித்தாந்தியரைத் தமக்குப் புறம்பெனக் கருதுபவராவர். நிருவிகாரி தாமே என்றுகூறித் தம்மையும் அறியாமல் தலைவனையும் அறியாமல் மயங்கி நிற்பவராவர். இது மயங்கி நிற்கும் வெளிபோன்ற இருளாகும். இவர்கள் ஆன்மானந்தமே பெரிதென மதிப்போராவர். இவர்கள் சிவபக்தர் அல்லராதலால், இலக்கு வாயாதவிடத்தும் வாய்க்குமாறு செய்துகொண்டு பலவகை உபாயங்க ளாலும் தம்மோடு ஒப்ப விபரீத உணர்வைச் செலுத்தி விடுவர். ஆதலால் இவர்கள் மலங்களினும் கொடியா ரெனக் கூறப்படுவர். இத்தகையார் கூட்டுறவு, பெற்ற திருவருளை - குருவருளை - நிலைக்கவொட்டாமல் பாழ் படுத்திவிடும். ஆதலின், தமது ஆசாரியர் இத்தகையா ருடைய கூட்டுறவு தமக்கில்லாதபடி செய்தருளியதை **செம்மை அவிகாரம் பேசும் அகம்பிரமக்காரர் வெளி இருளில் விடாதே** என்ற தொடர்களில் கூறிக்காட்டு கின்றாராவர். இவரது வரலாற்றிலும் இவர் தனித்து உறைந்தமை காணப்படும்.

அப்பால் ஆசாரியர், ஆன்மாவானது ஞான சொரூபம் ஒளிவடிவாய் நிற்பது என்ற உண்மையை நிலைக்க நிகழ்த்தி உதவியருளியுள்ளமை, ஒளியாய் நீ நின்ற நிலையே நிகழ்த்தி என்பதால் கூறப்படுதல் காணலாகும்.

ஒருபொருள் வேறு இன்றியமையாமை எடுத்து ஓதி :

மேலே கூறப்பட்டவிதமாக ஆன்மா இருப்பதை அறிவித்த பிறகு, ஆசாரியர், பெத்தநிலையிலே இறைவன் ஆன்மாவின் பின்னேநின்று காட்டியவிதம் போல, இவ்வருள்பெற்ற நிலையிலே எல்லாம் சிவன்செயல் என்ற நம்பிக்கையுடன் சிவத்தின் வழியிலே ஆன்மா அடங்கிநிற்கவேண்டும் என்கிற தத்துவத்தைச் செயல் முறையில் கொணருமாறு உபதேசித்துக் காட்டுவர். அங்ஙனம் தம் ஞானசாரியரும் புரிந்தருளியதை இவ் வரியால் ஆசிரியர் நமக்குக் கூறிக்காட்டியுள்ளனர்.

ஒன்றாக சாதித்து தம்மை சிவம் ஆக்கி :

இங்ஙனம் சிவயோக நிலைக்குத் தம்மை உள்ளாக் கிய பிறகு சிவம் வேறு, தான் வேறாக இருந்த நிலை மாறி ஒன்றாக நிற்கும் நிலை தமக்கு ஆசாரியரால் அருளிச்செய்யப்பட்டதை இதனால் நமக்கு ஆசிரியர் அறிவிக்கின்றார் ஆவர். "சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்" என்று இந்த நிலையினை மணிவாசகரும் குறித் திடுதல் காணலாம்.

இப்படிச் சிவத்தோடு ஒன்றும் நிலை ஏற்பட்ட தும், சித்தத்தே மற்றொருவிதமான சிக்கல் விளைவது உண்டு. அதனை இன்னதெனக்கூறி ஆண்டானும்

அடிமையாகவுமே எப்போதும் இருப்பதன் உண்மை யைப் புலப்படுத்துகின்றாராவர். உண்மையான ஜீவன் முத்திநிலை எய்தப்பெற்றதும், ஆன்மா, இம்மையிலே இருக்குமட்டும் ஜீவன்முத்தித்தன்மையும் பரமுத்தித் தன்மையும் என்கிற இரண்டையும் சரியாகக்கண்டு சிவபோகப் புசிப்பைச் சிவனருள்வழி நின்று புசித் திடும். அப்படிப் புசிக்காமல் சிவத்துடன் நாம் சம மாகிவிட்டோம் என்று சமவாதம் பேசி ஆன்மசத்தி யுடன் கூடி இன்பம்புசிக்க நேருவதாகிய குறைபாடும் நிகழக்கூடும். அப்போது, உண்மைச் சிவபோகப் புசிப்பு அருகிப்போம். ஆதலால் ஐந்தொழிலும் நாம் ஆற்றமுடியும் என்று சிவசமவாதம் பேசுபவரோடு கூடி அவ்வழியே மாறிவிடாமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஆகையினால், பாதகரோடு ஏகம் ஆய்ப் போகாமல் இருக்குமாறு தமது ஞானசாரியர் தமக்கு அருள்நெறிகாட்டி உதவிய செய்தியை இங்குக் கூறியுள்ளார் ஆவர்.

பிறகு, அறிவு இச்சை செயல்கள் எப்போதும் சிவபோக நிலையினின்றும் இழிதர வாராதிருத்தற் பொருட்டே இறைவன் குருலிங்க சங்கமமாகக் காட்சி தந்தருளுகிறான். அதனால் அக்காட்சி சிவக்காட்சியே யாகக் காணும் நிலையில் ஆன்மா நிற்றல்வேண்டும். அப்போதுதான், அதன் அடங்கியநிலை மாறுபடாது. இதனை, எவ்விடத்தும் காட்சி தந்து என்ற இடம் குறிப்பதாகும்.

நாம், முதலில் தூலபஞ்சாக்கர உண்மை உணர்த் தப்படுவதால் பாசம் நீங்கப்பெற்று அருள்வழி அடை கிறோம். இதனைக் "குருவழியாய குணங்களினின்று -

கருவழியாய கணக்கை அறுக்க - வரும்வழி மாள மறுக்க வல்லார்கட்கு - அருள்வழி காட்டுவது அஞ்செழுத்தாமே" என்ற திருமந்திரத்தால் அறியலாம் பின்னர், இதனை அடுத்துக் குருவருளால் சூக்கும பஞ்சாக்கரநெறியிலே நிறுத்தப்படுகிறோம். இதனால், மலமைந்தும் நீங்கப்பெற்றுச் சீவன், சிவன் சத்தியுடன் சேரலுறும். அதாவது, அருள்வழி நின்று ஞான வியாபகம் எய்தலுறும் என்பதாம். இதனை, "சிவன் சத்தி சீவன் செறுமல மாயை - அவம்சேர்த்த பாச மலம் ஐந்தகலச் - சிவன் சத்தி தன்னுடன் சீவனார் சேர - அவம்சேர்த்த பாசம் அணுககிலாவே" என்னும் திருமந்திரம் காட்டுவதாகும். இப்பால், குருவருள் நிறுத்திய முறையிலே சீவன் சித்தம் ஒடுக்கி நிற்றல் வேண்டும். அங்ஙன் நிற்பதால் ஆனந்தப்பேற்றினை அனுபவிக்கலுறும். இச்செய்தி கூறுவது, "சிவாய நம எனச் சித்தம் ஒருக்கி - அவாயம் அறவே அடிமைய தாக்கிச் - சிவாய சிவசிவ என்றென்றே சிந்தை - அவாயம் கெட நிற்க ஆனந்தம் ஆமே" என்னும் திருமந்திரப்பாடல் ஆகும். ஆகவே, பஞ்சாக்கரம் பகருகின்ற நெறியிலே நம்மைச் செலுத்தியுதவுபவர் ஞானாசாரியரே ஆவர் என நாம் ஐயமற அறிந்துகொள்ளுதல் தக்கதாகும்.

சுருக்கமாகப் பார்த்தால், மனிதப்பிறப்பு - பசு புண்ணிய மார்க்கம் - சிவபுண்ணிய நெறிகள் - திருவருள் வீழ்ச்சி - குருவெளிப்பாடு - அன்புமீதூர்தல் - திருவடிதீட்சை - பாசநீக்கம் - அருளில் அழுந்துதல் - இடையறுப் பேரன்புடைமை - ஆனந்தானுபவம் என்கிற இவைகள் நமக்கு வரிசையாக நிகழ நிகழ நாம் சிவசாயுச்சியமடைவோம் என்னலாம்.

சூரியன் கிளம்புமுன்னே நாம் காண்பது அருணோதய ஒளி. அதுபோல முத்திநெறியில் நாம் முதலில் அனுபவிப்பது அருளிலழுந்துதல். பின்னர் சூரியனொளியைக் கண்டனுபவிக்கிறோம். அதுபோல ஆனந்த அனுபவத்தை அனுபவிக்கிறோம். அருணோதயமின்றிச் சூரிய உதயமில்லை. அவ்வாறே அருளுதயமின்றி ஆனந்தானுபவம் இல்லையாம். ஆதலால், ஆசாரியன் திருவடியே தஞ்சமாகச் சீவன் கருதிக்கிடக்கவேண்டும். இதனாலே ஆன்மா, ஞான எல்லையிற் புகப்பெறும். இது தான் ஆனந்தவாயில். இதனை உரைப்பதே ''போகம் ஆம் பொன் தாளின் உள் புணர்த்தி'' என்ற வரியாகும். இங்ஙனம் கொழுச்சென்றவழி துன்னூசி எளிதிற் செல்லுமாப்போன்று, அருள்நிலைவழிச் சென்று ஆன்மா ஞேயத்தில் அழுந்தலுறும். இதுவே அழியாத சாயுச்சியநிலை ஆம். இந்த அநுக்கிரகம் ஆசாரியர் கிருபையால் நிகழ்வதாகும். இதனை, ஆதியுடன் நிற்க அழியா நிலை இதுவே என்று அருளி என்ற இடம் செப்புகிறது.

இந்த நிலையைச் சீவன் எய்திய பின்னர், கடலிற் புக்க நதிபோன்று, குரு எனப்படுகிற சிவத்தினது பரிபூரண வியாபகத்துள்ளே தானும் ஒக்கவியாபித்து நிற்கப்பெறும். இதுவும் அனுபவ சித்தமாம்வண்ணம் ஆசாரியனால் காட்டப்படுவதாகும். இது, ஒக்க வியாபகம் தன்னுள் காட்டி என்பதனால் அறியப்படும்.

இப்படியான நிலையிலேதான் வற்றாத கடலொத்ததும், புதுபுதுப் போகம் ஒத்ததுமான நிறைந்த நின்ற பேரானந்தப் புசிப்பு நிகழும். இதுவே இம்மைக்கண் எய்தும் பெரும் பேறும். மிக்கு ஓங்கும் ... ... ஆரா

அமுது அளித்து என்ற வரிகளால் நாம் இதனை அறியலாம். இவ்வளவும், நம் நூலாசிரியர் தாமே அனுபவித்துக் கூறிய செய்திகளாம்.

இந்தவிதமான ஆனந்தப் பேற்றினைத் தான் அடையும்படி ஞானசாரியர் தாமே எழுந்தருளி உபகரித்த தகுதிப்பாட்டினை ஆசிரியர் கூறிப் புகழ்கின்றார் தான் வந்து செய்யும் தகுதியினால் என்ற வாசகத்தால் என்க. அப்போதும், புதுவதாக எங்கிருந்தோ எழுந்தருளிவந்த தன்மையதன்று ஆசாரியனது அருளுருநிலை. உடம்பையும் உயிரையுமே மெய்ப்பொருள்களெனவும் உலக போகமே உண்மையின்பெனவும் மயங்கிக்கிடந்தகாலத்தும் ஆன்மாவினிடம் உயிர்க்கு உயிராய்நின்று ஆன்மாவுக்கு முதன்மைதந்து அதனைப் பையப்பைய நன்னெறி புகச்செய்து நீங்காமல் நின்று உதவிப் பிறகு பக்குவமுற்றதும் குருவடிவாக வெளிப்பட்டு ஞானநெறியில் நிலைக்கச்செய்து சிவானந்தமாகிய தெவிட்டாத தெள்ளமுதினை அருத்தியுதவுகின்றான் பரமாசாரியன். இங்ஙனம் புரிந்தருளும் சிவகுருவினை முற்றப் போற்றிடும் திறம் ஆன்மாவுக்கு ஒருபோதும் இல்லையாம். ஆதலால், முடிவிலே நம் ஆசிரியர் தம் ஆசாரியர் அருட்டிறத்தினை முழுதும் போற்றிடத் தம்மால் ஒருபோதும் இயலாதென்பதை அடிமையாம் திறம்பற்றி, என் கொண்டு போற்று இசைப்பேன் யான் என்று கூறிக்காட்டி வெளியிடுகின்றார் ஆவர். இதனால் ஆசாரியன் கருணைக்கு இணை ஏதும் இல்லை எனவும், அவனருளை முற்றும் முடித்துரைக்க எவராலும் இயலாது எனவும் நாம் உணர்ந்து நமது குருநாதரின் திருவருட்பெருக்கினை அனவரதமும்

நிலாமுகிப் புள்போல் எதிர்நோக்கிக் கிடப்போம். குரு திருவருள் துணைபுரிவதாக என வழுத்துவோம்.

'போற்றி திருத்தில்லை . . . . தாள்' என்னும் வெண்பாவின் கருத்து.

ஸ்ரீ உமாபதி சிவாசாரியசுவாமிகள், தாம் திருத்தில்லையிலே ஆனந்தமாநடராசப் பெருமானைத் தரிசிக்கவும் பூசிக்கவும் பேறுபெற்றிட்ட திருவருளியக்கத்தை முதலில் பெரிதும் போற்றுகின்றாராவர். இடச்சூழலே முதற்கண் ஒருவன் நற்கதி நாடுவதற்குத் துணைபுரிவதாதலால் போற்றி திருத்தில்லை என்கிறார். க்ஷேத்திர யாத்திரைசெய்யும் அடியார்களும் க்ஷேத்திரத்திலே ஓரிரவு காலமேனும் தங்கியிருக்க வேண்டுமென்று விதித்துக் கூறுதலும் இந்த நலம் கருதியே ஆம் என்ப.

தில்லையம்பதிவாழ்வு முடிவாகத் தமக்கு அளித்த நலம் இன்னதென்பதை வெளியிட்டு அதனைப் போற்றுகின்றார். சிவபோகமே பெரும்போகமாம். அப்போகம் அடைவிப்பதும், அடைந்த அதனை நீங்கவொட்டாமல் நிலைக்கச்செய்வதும் மேற்கூறப்பட்ட இடத்துவாழ்வேயாதலின், முன்னதனை அடுத்துப் போற்றி சிவபோகம் என்றார்.

இந்தத் திருப்பதியிலேதான், தமது ஞானாசாரியர் தம்மை வலியவந்து ஆட்கொண்டு மெய்ஞ்ஞானப் பனுவல்களை உபதேசித்து அந்நூல்நெறியே தம்மை நிற்கவும் செய்து துணைபுரிந்தருளினராதலால், போற்றி அவன் மெய் ஞானப் புண்ணிய நூல் என்றாராவர்.

மெய்கண்ட சாத்திரமும் சித்தியாரும் இங்கு உய்வு தரும் பனுவல்களாகத் தெளிவுறக் கூறப்பட்டிருத்தல் காணலாம்.

இங்ஙனம் கருணைபுரிதற்காகவே சிவபரம்பொருள் உயிர்க்கு உயிராய், ஆன்மாவினுடைய பாசபந்தங்கள் தம்மை அணுகாவண்ணம் தங்கியிருந்து, பிறகு தமது அருட்பெருக்கினால் ஆன்மாவுக்குப் பக்குவநிலை எய்துவித்து, குருமூர்த்தமாகி வெளிப்பட்டு ஞானதீக்கை புரிந்தருளிப் பந்தவாழ்க்கையினின்று ஆன்மாவினை விடுதலை செய்தருளுகின்றாராவர். இவ்விதமே ஸ்ரீ மறை ஞானசம்பந்தர் என்னும் திருப்பெயர் தாங்கிச் சிவம் தம்மை ஆட்கொண்டு அருளியதென்பதை, போற்றி எங்கள் வெம்பந்த வாழ்க்கைவிட வேறாய் வந்து உள் நின்ற சம்பந்த மாமுனி என்ற போற்றியுரை யிட்டுக் கூறுகின்றார் ஆசிரியர். இங்கு, எங்கள் என்ற பதப்பிரயோகம் தந்துரைக்கப்பட்டிருத்தலால், நாமும் மெய்கண்ட சாத்திரங்களை ஓதுமுறையில் ஓதி அந்த ஞானபரம்பரை ஆசாரியரை வழிபட்டு ஒழுகுவோமாயின் இம்மையிலே தட்டின்றி உய்திபெறலாகும் என்று தெரியலாம். ஆசாரியரருள் கூடுவதாக!

ஆசாரியருடைய திருவடியே ஞானமாகும். ஞானமே மோக்ஷத்துக்கு அடிப்படை. கோயிலைச் சுற்றிப் புறவீதிகள் பற்பல இருப்பினும் இரத வீதியை அடைதல் - அதாவது சந்நிதி வீதியை அடைதல் - நேரே ஆலயத்துள் அரனைத் தரிசிக்க வழியாயிருப்பது போலவே - ஞானமார்க்கமே எல்லாச் சமயத்தாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சாதனமாகும். ஞானமயமே ஆசாரியர் திருவடி ஆகும். அத்திருவடிவைப்பே

பதிஞானத்து நம்மைப் பதியவைத்தருளுவதாகும். இரும்பைப் பரிசனவேதி பொன்னுக்குவதுபோல இத் திருவடியின் செய்கை உள்ளது. ஆதலால், சம்பந்த மாமுனி பொற்றுள் போற்றி என்று ஆசிரியர்கூறி நமக்கெல்லாம் உய்திமார்க்கம் எளிதிற் புலப்படுத்தி உதவியுள்ளாராவர் என்னலாம்.

ஆசாரியர் திருவடி வாழ்க!

வாழ்க மலமறுப்பான் பதம்!

ஸ்ரீ உமாபதிதேவநாயனுர் திருவடி வாழ்க!